janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakththitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakththitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 85 | 2022 ஏப்ரல் 24 - 30 | விலை: ரூ.10 | 16 பக்கங்கள் | இதழ் 03




**அம்பேத்கரின் தொலைநோக்குப் பார்வை!**
டாக்டர் அம்பேத்கர் அவர்கள் அடித்தட்டு மக்களின் குரலாக முழங்கி வந்தார். இந்திய சமூகத்தின் ஆணிவேரின் அடிநுனி வரை ஆய்வு செய்து உலகறியச் செய்தவர். சாதி >>>
ப 08



**கற்பி புரட்சிசெய் ஒன்றுசேர்**
சிறுபான்மைச் சமூக மக்கள் கொடுமைகளுக்கு உள்ளாவார்கள் என்ற டாக்டர் அம்பேத்கரின் கவலைகள் இன்று எதார்த்தமாகி >>>
ப 16



**வர்க்கப் போராட்டம்...**
“அறிவியல் தொழில்நுட்ப முன்னேற்றம் காரணமாக உழைப்பாளி காணாமல் போய்விட்டான். பழைய உழைப்பாளி யாருமில்லை. பழைய உழைப்பாளியை நம்பிய மூலதனமும் இன்று இல்லை. பழைய உழைப்பாளியை நம்பிய மூலதனமும் இன்று இல்லை. எனவே
ப 03



# உள்ளாட்சி, தூய்மைப்பணியாளர்கள்

# வேதனையைப் போக்குக!

## தமிழ்நாடு உள்ளாட்சி துறை பணியாளர் சம்மேளனம் ஆர்ப்பாட்டம்




**தமிழ்நாடு உள்ளாட்சி துறை பணியாளர் சம்மேளனம் (ஏஐடியுசி) சார்பில் 20.04.2022 அன்று சென்னை, எழும்பூர், ராஜரத்தினம் ஸ்டேடியம் அருகே ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தமிழ்நாட்டின் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, சிற்றூராட்சிகளில் பணி புரியும் தூய்மைப் பணியாளர்கள், தூய்மைக் காவலர்கள், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இயக்குபவர்கள், மலேரியா தடுப்பு பணியாளர்கள், தெரு விளக்கு பராமரிப்பு பணியாளர்கள் உட்பட சுமார் 3000 க்கும் அதிகமான உள்ளாட்சி தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கங்களை எழுப்பினர்.**

இந்த ஆர்ப்பாட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன், தமிழ்நாடு ஏஐடியுசி பொதுச்செயலாளர் டி.எம். மூர்த்தி, டி.இராமச்சந்திரன் எம்.எல்.ஏ., ஏஐடியூசி துணைப்பொதுச் செயலாளர் கே.இரவி, சம்மேளன தலைவர் ஆர்.ஆறுமுகம், பொதுச்செயலாளர் ம.இராதாகிருஷ்ணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

ஆர்ப்பாட்டத்தில் கீழ்க்கண்ட முழக்கங்கள் எழுப்பப்பட்டன

1. மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சிகளில் ஒப்பந்தம், வெளிச்சந்தை, தினக்கூலி, சுய உதவிக்குழு போன்ற முறைகளை முற்றாகக் கைவிட்டு, சேவை கட்டணம் என்ற பெயரிலான நிதி விரயத்தை தடுத்து, பணியமர்த்தப்பட்ட அனைவரையும் நேரடி பணியாளர்களாக்க வேண்டும்.
2. மூன்று ஆண்டுகள் பணிபுரிந்த தொழிலாளர்கள் அவர்கள் எந்தப் பெயரில் வைக்கப்பட்டிருந்தாலும் ஊதியம் வழங்கிய வங்கி கணக்கு ஆவணத்தை அடிப்படையாகக் கொண்டு காலமுறை ஊதியம் நிர்ணயித்து வழங்க வேண்டும். பணி நிரந்தரப்படுத்த வேண்டும்.
3. அதுவரை உச்சநீதிமன்ற தீர்ப்புக்கு இணங்க சம வேலைக்கு சம ஊதியம் வழங்க வேண்டும்.
4. அரசு நிர்ணயித்த அரசாணை எண் 62, 2017 இன் படி குறைந்தபட்ச ஊதியம் வழங்குவது உறுதி செய்யப்பட வேண்டும்.
5. அரசு அறிவித்துள்ள குறைந்தபட்ச ஊதி யத்தை விட குறைவான ஊதியம் வழங்கும் வகையில் மாவட்ட ஆட்சியர்கள் நிர்ணயிக்கும் ஊதியம் உள்ளிட்ட அனைத் துவித உத்தரவுகளையும், அரசாணைகளையும் ரத்து செய்ய வேண்டும்.
6. மாவட்ட ஆட்சியர்கள் தொழிலாளர் ஆணையரின் கடித எண் செ1/26752/2021 நாள்: 22.04.2021 ஐ கணக்கில் கொண்டு அரசாணைக்கு குறைவாக ஊதியம் நிர்ணயிக்கக் கூடாது.
7. ஒப்பந்ததாரர்கள் தொழிலாளர்களின் பிஎஃப், இஎஸ்ஐ போன்ற திட்டங்களுக்கு பிடித்தம் செய்து அதன் பலன் உரிய தொழிலாளிக்கு கிடைக்காமல் செய்யும் மோசடிகளைக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.
8. பிடித்தம் செய்த தொகைக்கு உடனடியாக ரசீது, இஎஸ்ஐ குடும்ப அட்டை வழங்க வேண்டும்.
9. முன்களப் பணியாளர்கள் என அறிவித்து மருத்துவத் துறை பணியாளர்களுக்கு வழங்கிய பெருந்தொற்று கால நிவாரணங்களை வழங்க வேண்டும்.
10. கையால் மலம் அள்ளும் தடைச்சட்டம் 2013 இன் படியான பாதுகாப்பு உபகரணங்கள், தொழில் கருவிகள் தந்து உரிய பயிற்சி அளித்து பயன்படுத்தச் செய்ய வேண்டும்.
11. மக்கள் தொகை பெருக்கம், கழிவுகளின் அளவு அதிகரிப்பு ஆகியவற்றுக்கு ஏற்ப வேலை அளவுகோல் நிர்ணயித்து, காலிப்பணியிடங்கள் அனைத்தையும் நிரப்பி, புதிய பணியிடங்களைத் தோற்றுவித்து மக்களின் பொது சுகாதாரத்தை உறுதி செய்ய வேண்டும்.
12. நடைமுறைக்கு பொருத்தமற்ற வேலைப்

தொடர்ச்சி 6ம் பக்கம் >>

## எதிரும் புதிரும்




தட்டு ஏந்தியும் தட்சணையை (பிச்சை) போடலையே மோடி ! அதான் இப்படி ஒரு டயலாக் –பொதுமக்கள்








# எதனையும் எதிர்கொள்வோம்!

**பேரன்புமிக்க தோழர்களே!**

**கொரோனா பெருந்தொற்றால் ஏற்பட்ட இடர்பாடுகள், தடைகள், உயிரிழப்புகள், பொருள் இழப்பு, வேலை இழப்பு, ஊதிய இழப்பு என எண்ணற்ற இழப்புகளை நாட்டு மக்கள் சந்தித்த நிலையில், நமது கட்சியும் பல தடைகளையும் சந்திந்தது.**

ஆக்கபூர்வமான பல்வேறு முடிவுகளை நிறைவேற்றிட உரிய முறையில் நமது அமைப்புகள் திட்டமிட்டு செயல்படுத்திட ஆயத்தமான நிலையில் அவைகள் எல்லாம் தடைப்பட்டன.

தடைகளை தாண்டி முடிவுகளை நிறைவேற்றிட முயன்றபோது நகர்ப்புற அமைப்புகளுக்கான உள்ளாட்சித் தேர்தலை சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

அதனை எதிர்கொண்டு பல வெற்றிகளையும் – அனுபவங் களையும், சில கசப்புகளையும் நாம் பெற்றுள்ளோம்.

நகர்ப்புற அமைப்புகளுக்கான தேர்தல் இன்னும் முழுமை பெறாமல் உள்ளன.

இத்தனை இடர்பாடுகளுக்கு மத்தியில் தான் நமது அமைப்பு நிலை பணிகளை நிறைவேற்றி உள்ளோம்.

குறிப்பாக 2022 ஆம் ஆண்டிற்கான கட்சி உறுப்பினர் புதுப்பித்தல் – சேர்த்தல் பணிகளை முழுமையாக நிறைவேற்றி முடிப்பதில் சில சிரமங்கள் எதார்த்தமாக இருக்கத்தான் செய்தன.

இவைகளை எல்லாம் முழுமையாக பரிசீலித்து நமது மாநிலக் குழு கூட்டத்தில் (மார்ச் 17 – 20 நாகை) கால அவகாசம் அளித்து குறிப்பிட்ட தேதியில் முழுமையாக முடித்திட வேண்டும் என்று ஒருமனதாக மேற்கொண்ட முடிவை நமது மாவட்ட அமைப்புகள் ஒருமனதாக நிறைவேற்றி உள்ளது பாராட்டத்தக்கது.

முடிவு எடுப்பது முக்கியமல்ல, அம்முடிவை குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் நிறைவேற்றுவது மிக இன்றியமையாதது.

ஆறிய கஞ்சி பழங்கஞ்சி என்ற பழமொழி நமக்கும் பொருந் தும்.

நமது அமைப்பில் ஏதோ ஒரு வேலை அது முடிந்து விட்டது இனி வேலைகள் இல்லை என ஓய்ந்திருக்க இயலாது.

அமைப்பு நிலை பணிகள், அரசியல் பணிகள் என்று ஒன்றன் பின் ஒன்றாக தொடருகின்றன.

அவைகள் அனைத்தையும் நாம் எதிர்கொள்ள வேண்டும், சலிப்பின்றி நிறைவேற்றவும் வேண்டும்.

நாம் ஒரு பொதுவான அரசியல் கட்சியல்ல, தேர்தலுக்காக மட்டுமே இயங்குகின்ற கட்சி அல்ல, வெற்றி, தோல்விகள் மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு செயல்படும் கட்சி அல்ல– மற்ற எல்லோரைக் காட்டிலும் மிகுந்த பொறுப்புணர்வோடு செயல்படுகின்ற புரட்சிகரமான, மகத்தான இயக்கமாகும்.

சமூகத்தில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகள்– சாதி, மத வேறுபாடுகள் மிகக்கடுமையான சுரண்டல்– சிலரின் வருமானம் நாள்தோறும் அதிகரிக்கின்றது. அவர்களின் செல்வம் பெருக் கெடுக்க காரணமாக இருக்கின்ற உழைப்பாளி மக்கள் நாள் தோறும் சுரண்டப்படுகிறார்கள். இத்தகைய முரண்களைப் போக்க, புதிய சமூக அமைப்பை உருவாக்க, நாம் ஏற்றுக் கொண்ட மகத்தான மார்க்சிய, லெனினிய தத்துவங்களை நடைமுறைப்படுத்திட பொதுவுடைமை சமுதாயம் காண நமது முன்னோர்கள் தொடங்கி இன்று வரை இடைவிடாது போராடிக் கொண்டு வருகின்றோம்.

நாம் மேற்கொண்ட இயக்கங்கள் என்பது மக்களுக்கானது. மக்களின் வாழ்க்கையில் மாற்றம் காண வேண்டும் என்பதற்காக நடைபெற்ற இயக்கங்கள், செய்திட்ட தியாகங்கள் எவையும் வீண்போகவில்லை.

நமது இயக்கத்தால் பெற்ற ஒவ்வொரு வெற்றிகளையும் நாட்டில் வாழும் தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர்கள், இளைஞர்கள், பெண்கள் என அனைவரும் பயன் அடைந்து வருகின்றனர்.

நாடு முழுமைக்கும் ஆகட்டும் அல்லது நமது தமிழ்நாடு மாநிலம் முழுவதற்காகட்டும் இன்று நடைமுறையில் உள்ள அனைத்து சட்டங்களும், உரிமைகளும், சலுகைகளும் நமது தியாகத்தால் பெறப்பட்டவை என்பதனை நாம் பட்டியலிட்டு கூற முடியும்.

இத்தகைய சாதனைகளுக்கு சொந்தக் காரர்கள் என்று நாம் பெருமைப்பட்டுக் கொள்ள முடியும். ஆனால் இவை போதாது, இன்னும் சாதிக்க வேண்டியது ஏராளம், ஏராளம் என்பதனை நாம் ஒருபோதும் மறந்தவர்கள் அல்ல.

பெற்றது போதாது, பெற வேண்டியது ஏராளம் உள்ளது என்பதனை உணர்ந்து அதற்காக நாம் போராடுகின்ற நிலையில், பெற்றதை பறிக்கும் வஞ்சகர்கள் ஒன்றிய ஆட்சியை பெற்றுள்ளார்கள்.

நாம் இப்போது இரண்டு கடமைகளை நிறைவேற்ற வேண்டி யவர்களாக உள்ளோம்.

ஒன்று நாம் போராடிப் பெற்ற உரிமைகளை, சட்டங்களை, சலுகைகளைக் காக்க போராட வேண்டியுள்ளது.

மற்றொன்று புதிய உரிமைகளுக்காகப் போராட வேண்டி யுள்ளது.

ஆக இரு கடமைகளை ஒருசேர நிறைவேற்றிட இடைவிடாது களம் காண வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்பதில் நமக்கு மாற்றுக் கருத்தில்லை.

திருவாளர் மோடி தலைமையிலான ஒன்றிய அரசு தன்னைத் தேர்ந்தெடுக்க வழிவகை செய்த பெரும் முதலாளிகள், கார்ப்பரேட் முதலாளிகள் தங்களது வருமானத்தை மேலும், மேலும் பெருக்கிக் கொள்ள சட்டரீதியாக வழிவகை செய்கின்றது. மக்களிடமிருந்து எவ்வளவு அதிகபட்சமாக சுரண்ட முடியுமோ அந்த அளவிற்கு சுரண்டிக் கொள் என தாராளமாக அனுமதி வழங்குகின்றது.

சுரண்டும் கூட்டத்திற்கு வரிச்சலுகைகளையும் ஒன்றிய அரசு தாராளமான முறையில் வழங்கி மகிழ்கின்றது.

அவர்களின் சுரண்டல் போதாது என்று, அரசும் மக்களை சுரண்டுகின்றது.

**பெட்ரோல், டீசல் விலைகள் ஒவ்வொரு நாளும் உயர்த்தப் படுகின்றன. சமையல் எரிவாயு விலை உயர்த்தப்படுகின்றது. 800 க்கும் மேற்பட்ட மருந்துகளின் விலைகள் 10 சதம் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. தேசிய நெடுஞ்சாலைகளில் சுங்கவரி கட்டணம் ரூ.10 முதல் ரூ.40 வரை உயர்த்தப்பட்டுள்ளது.**

**மக்களை மேலும், மேலும் பொருளாதார நெருக்கடிக்கு ஆளாகி இரக்கமற்ற முறையில் மக்களை சுரண்டுகின்றது.**

மக்களை சுரண்டுவதில் முதலாளி மார்களும், மோடி அரசும் போட்டிபோட்டுக் கொண்டு சுரண்டுகிறார்கள்.

ஜனநாயகம் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டு, ஜனநாயகப் படுகொலைகளை மக்கள் தினந்தோறும் சந்திக்க வேண்டிய நிர்பந்த நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். இவைகளையெல்லாம் நாம் பார்வையாளர்களாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க இயலாது என்பது மட்டுமல்ல, கூடாது என்பதே மிக முக்கியமாகும்.

ஒன்றிய அரசு மேற்கொண்டு வரும், மக்களுக்கு எதிரான யுத்தத்தை முறியடிக்க நாம் களம் காண வேண்டும்.

மக்களின் மீது ஒன்றிய அரசு இரக்கமற்ற முறையில் தொடுத்துள்ள போரை எதிர்கொள்ள மக்களை ஆயத்தமாக்க வேண்டும்.

மக்கள் மத்தியில் இடைவிடாது நாம் மேற்கொள்ளும் விழிப்புணர்வு பிரச்சாரம் அதிகரிக்க வேண்டும். மக்களிடத்தில் ஏற்படுகின்ற விழிப்புணர்ச்சி தான் அரசியல் மாற்றத்தை உருவாக்கும். அரசியல் மாற்றம் ஏற்பட நமது அமைப்புகளின் செயல்பாடு உறுதிமிக்கதாக இருக்க வேண்டும்.

நமது கட்சியின் அகில இந்திய மாநாடு அக்டோபரில் விசாகப்பட்டினம் நகரத்தில் நடைபெற உள்ளது.

மாநில மாநாடு ஆகஸ்ட் 4, 5, 6 மற்றும் 7 வரை திருப்பூர் நகரத்தில் நடைபெற உள்ளது.

இதற்கு முன்னதாக நமது கட்சியின் அடித்தள அமைப்பு களான கிளை மாநாடுகளை நடத்தி முடித்துவிட வேண்டும். பல மாவட்டங்கள் கிளை மாநாடுகளை முழுமையாக நடத்தி முடித்து இடைநிலை அமைப்புகளின் மாநாட்டை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. அடுத்து மாவட்ட மாநாடுகள் நடத்திட மாவட்ட அமைப்புகள் திட்டமிட்டு வருகின்றன. இம் மாநாடுகளை வரும் ஜூன் மாத இறுதிக்குள் முடித்து விட வேண்டும்.

நமது மாநாடுகளை எவ்வாறு நடத்திட வேண்டும் என்பது குறித்து மாநிலக்குழு வழிகாட்டும் குறிப்பை வழங்கி உள்ளது. அதனை முழுமையாக பின்பற்ற வேண்டும்.

அதே போன்று நமது தேசியக் குழு, கிளைச் செயலாளர் முதல், பொதுச் செயலாளர் வரை எத்தகைய வயது வரம்பிற்குள் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பது குறித்து முடிவு செய்துள்ளது.

மாநாடுகளில் மாநில, தேசியக் குழு முடிவுகளை நாம் முழுமையாக பின்பற்றவேண்டும்; நிறைவேற்ற வேண்டும்.

குறிப்பாக இளைஞர்களுக்கு, பெண்களுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொரு அமைப்பிலும் இளைஞர்கள் – பெண்களுக்கான உரிய முக்கியத்துவம் அளித்தல் என்பதனை உணர்வுபூர்வமாக கட்சியின் எதிர்கால நலன் கருதி நாம் மேற்கொள்ள வேண்டும்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி பலப்படுவதன் போராடுவதன் மூலமே இடதுசாரி, மதச்சார்பற்ற, ஜனநாயக சக்திகளை ஒருங்கிணைக்க முடியும்.

அத்தகைய ஒருங்கிணைப்பின் மூலம் நாட்டில் அரசியல் மாற்றத்தை ஏற்படுத்த முடியும். அத்தகைய மாற்றத்தின் மூலம் மோடி அரசை வீட்டிற்கு அனுப்ப முடியும்.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்திட்ட அரசியல் கடமைகளை தொய்வின்றி நிறைவேற்றிட நமது அமைப்புகள் முன்னைக் காட்டிலும் பலம் பொருந்திய அமைப்பாக, சக்தி வாய்ந்த அமைப்பாக, எதனையும் எதிர்கொள்ளும் அமைப்பாக உருவாகிட ஆன அனைத்தும் மேற்கொள்வோம்.

**மீண்டும் சந்திப்போம், வணக்கம்!**


**தோழமைமிக்க**

**இரா.முத்தரசன்**

# வர்க்கப் போராட்டம் காலாவதியாகி விட்டதா?



- க.சந்தானம்



**“அறிவியல் தொழில்நுட்ப முன்னேற்றம் காரணமாக உழைப்பாளி காணாமல் போய்விட்டான்.**

பழைய உழைப்பாளி யாருமில்லை.

பழைய உழைப்பாளியை நம்பிய மூலதனமும் இன்று இல்லை.

எனவே சரக்கு உற்பத்தியின் பொருளாதார கோட்பாடான ‘மதிப்பு விதி’ காலாவதி ஆகிவிட்டது.

இத்தகைய ‘பின் முதலாளித்துவ’ சமூகத்தில் வர்க்கப் போராட் டத்திற்கு இடமில்லை. ஏனெனில் வர்க்கங்களும் இங்கில்லை.”

என மார்க்சியர்கள் என்று கூறிக்கொள்வோர் வாதம் செய்கின்றனர்.

அமெரிக்க, ஐரோப்பிய ஏகாதிபத்திய ஆதரவு அறிஞர்கள் ஏற்கனவே பேசிய, வரலாற்றால் கைவிடப்பட்ட, பழைய சரக்கை தமிழ்நாட்டில் சிலர் புதிய மொந்தையில் விற்க முயல்கின்றனர்.

வர்க்கப் போராட்டப் பாதையில் பயணிக்கும் அமைப்புகளை பாதை மாற்ற முயலும் முயற்சியே இது. இதை அம்பலப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி தொடர் நடவடிக்கையாக உள்ள காலத்தில் வாழ்கின்றோம். நேற்றைய தொழில்நுட்பம் காலாவதியாகிறது. இன்று “செயற்கை நுண்ணறிவு” “ரோபாட்டிக்ஸ்” போன்ற புதிய தொழில்நுட்பங்கள் புழக்கத்திற்கு வந்துள்ளன. நாளை இவைகளும் காலாவதியாகி, இன்னும் புதியதாய் தொழில்நுட்பங்கள் வரும்.

இதனால் சமூக பொருள் உற்பத்தி நடவடிக்கையே அறிவுசார் உற்பத்தி நடவடிக்கையாக பெரும்பாலும் மாறிவிட்டது. மேலும் தகவல்கள் கருத்துக்கள் ஆகியவையும் சரக்காக (பண்டமாக) (commodity) மாறுகின்றது.

அறிவுச் சமூகத்தில் சேவைத் துறையின் மேலாண்மை நிறுவப்பட்டு விட்டதால், பொருள் உற்பத்தி பின்னுக்குத் தள்ளப்பட்டு விட்டதாக தோற்றம் தெரிகிறது. ஆனால் உண்மை இதுவல்ல.

உற்பத்தி சக்தி என்பது மனித உழைப்பு சக்தியும், உற்பத்தி கருவிகளும் ஆகும். உற்பத்திக் கருவிகளின் மூலம் தனது உழைப்புச் சக்தியை பொருள்களின் மீது பிரயோகித்து புதிய பொருட்களை மனிதன் படைக்கின்றான்.

அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சியின் காரணமாய் மனித உழைப்பில் ‘அறிவு உழைப்பு’ மேலாண்மை பெற்றுள்ளது.

அதேபோல், உற்பத்திக் கருவிகளும் அறிவு உழைப்பின் காரண மாய் கணினி தொடங்கி செயற்கை நுண்ணறிவு, ரோபாடிக்ஸ் போன்ற வகைகளில் புதிய மட்டத்தில் வளர்ந்து தானியங்கியாக மாறி வருகின்றது.

இதன் வளர்ச்சி எல்லை எவ்வளவு தூரம் சென்றாலும் அவை “மனித அறிவு உழைப்பின்” விளைவாகவே இருக்கும்.

உழைப்பு என்பதே ஒரு சமூக நடவடிக்கை என்பதுதான். உற்பத்தி செய்யப்படும் சரக்கு உருவாக்கத்தில் திண்மையான உழைப்பு அதாவது தனிநபர் உழைப்பு (concrete labour) மற்றும் அருவமான உழைப்பு அதாவது சமூக உழைப்பு (abstract labour) தொழிற்படுகிறது.

சரக்கு அல்லது பண்டத்தின் மதிப்பு என்பது புரிந்து கொள்ளப் பட வேண்டும். இது சமூக உழைப்பின் சராசரியை அடிப்படையாகக் கொண்டது. சமூக உழைப்பின் சராசரியை “சமூக ரீதியாக தேவைப்படும் உழைப்பு நேரம்” தீர்மானிக்கிறது. இந்த உழைப்பு நேர அளவை “உற்பத்திக் கருவிகளின் வளர்ச்சி மட்டம்” தீர்மானிக்கிறது.

அறிவியல் தொழில்நுட்ப புரட்சி காரணமாக சமூக உழைப்பின் சராசரி பெரும் பாய்ச்சலில் வளர்ந்து உழைப்பாளியின் திண்மையான உழைப்பை (தனிநபர் உழைப்பை) ஒப்பீட்டளவில் குறைத்து வருகின்றது.

இந்த திடீர் மாற்றங்கள் சரக்கு அல்லது பண்டம் பற்றிய மயக்கங்களை உருவாக்கியுள்ளன.

இதனால் மதிப்பின் உருவாக்கத்தில் தனிநபர் உழைப்பே இல்லை என்பது போலவும், உழைப்பே இல்லாமல் உற்பத்தி நடைபெறுவது போலவும், எனவே உழைப்பு சுரண்டல் இல்லை என்பது போலவும் எனவே “உபரி மதிப்பு” உழைப்பு சுரண்டலால் ஏற்பட வில்லை என்பது போலவும் தோற்றம் உருவாக்கப்படுகின்றது.

இந்த தோற்றம் பொய் என்பதை கரத்தாலும், கருத்தாலும் இரத்தத்தை வேர்வையாக சிந்தி உழைத்து கொண்டுள்ள கோடான கோடி உழைக்கும் மக்களின் இன்றைய அவல வாழ்க்கையே நிரூபிக்கும். சமூக உற்பத்தித் துறையை மூன்று பெரும் துறைகளாக பிரிப்பர்.

1. வேளாண் துறை, 2. தொழில்துறை, 3. சேவைத்துறை

நவீன அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி சேவை துறையில் தொடங்கி இன்று அனைத்துத் துறைகளிலும் மேலாண்மை பெற்றுவிட்டது.

**உற்பத்தி சாதனங்களின் உற்பத்தி, மூலப் பொருட்கள் உற்பத்தி, நுகரும் பொருட்கள் உற்பத்தி, உணவு உற்பத்தி போன்றவற்றோடு சேவை துறையான போக்குவரத்து, சந்தை, நிதி, தகவல் தொடர்பு போன்ற அனைத்தையும் புதிய மட்டத்திற்கு உயர்த்தி இதன்மீது ‘அறிவு உழைப்பு’ செயல்படுகின்றது.**

**சமூக உற்பத்தியில் இத்தனை பிரிவுகளிலிலுமிருந்துதான் சமூகச் செல்வம் உற்பத்தியாகின்றது. முதலாளித்துவத்தின் அடிப்படை முரண்பாடே சமூக செல்வத்தை உருவாக்கும் சமூக மயமாக்கப்பட்ட உழைப்புக்கும், அந்த செல்வத்தை தனிநபர் அபகரிப்பதற்குமான முரண்பாடுதான்.**

இன்றைய ஏகாதிபத்திய உலகமய சூழலில் ஒவ்வொரு சரக்கும் உலகமயமான சமூக உழைப்பின் விளைவே ஆகும். எனவேதான் மேற்சொன்ன முரண்பாடு உலகமயமான சமூக உழைப்புக்கும் தனிநபர் அபகரிப்புக்குமான முரண்பாடுதான்.

உலக நிதி மூலதனம் தொடங்கி அதானி, அம்பானி போன்ற கார்ப்பரேட் நிறுவனங்கள் வரை சமூகச் செல்வங்களை அபகரித்துச் செல்வதை நாம் வெளிப்படையாகக் கண்டு வருகின்றோம். இந்த அபகரிப்பை எதிர்த்து தானே விவசாயிகளும், தொழிலாளர்களும் போராடி வருகின்றனர்.

இந்திய விவசாயிகளின் வரலாற்று சிறப்புமிக்க “டெல்லி முற்றுகை” என்னும் அந்த மாபெரும் போராட்டம் வர்க்கப் போராட்டம்தான்.

அறிவியல் தொழிற்நுட்ப பாய்ச்சல் வேக வளர்ச்சி காரணமாக ஏற்படும் இந்த மாற்றங்களை அறிந்தும் அறியாதது போல் பேசுகின்றனர்; செயல்படுகின்றனர். வர்க்கம் இல்லை; வர்க்கப் போராட்டம் காலாவதியாகி விட்டது என்ற சித்தாந்தங்களை மீண்டும் பரப்பும் விதமாக பேசி வருகின்றனர்.

இவர்கள் யாருக்காக இதை செய்கின்றனர் என்பதை தமிழ் நாட்டு உழைக்கும் மக்கள் நன்கு அறிவர்.

தொடர்புக்கு: **95975 06006**

---

## உக்ரைனில் படித்த மருத்துவ மாணவர்களுக்கு படிப்பை தொடர

# ஒன்றிய அரசுக்கு மாநில அரசு அழுத்தம் கொடுக்க வேண்டும்

## சட்டமன்றத்தில் கே.மாரிமுத்து வலியுறுத்தல்

தமிழக சட்டமன்ற கூட்டத்தில் திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் கே.மாரிமுத்து பேசியதாவது:

கே. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருக்கிற வரை, தமிழ்நாட்டிற்குள் ‘ழிணிணிஜி’ என்ற மிகப்பெரிய கொடிய, மாணவர்களை பாதிக்கிற அந்த தேர்வு முறை வரவே இல்லாமல் தடுத்து வைத்திருந்தார்கள். குறிப்பாக நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சி பொறுப்பில் இருக்கிறவரை தமிழ்நாட்டிற்குள் வர விடாமல் தடுத்து வைத்திருந்தார்கள். ஆனால் இன்றைக்கு ‘ழிணிணிஜி’ என்ற மிகப்பெரிய அச்சுறுத்துகிற மாணவர்களின் எதிர்காலத்தை அச்சுறுத்துகிற அந்த நுழைவுத் தேர்வு தமிழ்நாட்டிற்குள் வந்ததன் காரணமாகவேதான் பல மாணவர்கள் அந்த மருத்தவக் கல்லூரி என்ற கனவு சிதைக்கப்பட்டு விடுமோ என்ற அச்சத்தின் காரணமாகவே அவர்கள் வெளிநாடுகளில் அந்த கல்வியை எப்படியாவது படித்துவிடலாம் என்று,

அவர்கள் உக்ரைனுக்கு செல்லவேண்டிய நிர்பந்தம் வந்தது. அனால், அங்கே சென்று அந்த மாணவர்கள் கல்வி கற்கின்ற நேரத்தில்தான், மக்களை, அழிக்கிற மிகப் பெரிய போர் நடந்திருக்கிற காரணத்தினால்தான், அவர்களுடைய கனவு இன்றைக்கு சிதைக்கப்பட்டிருக்கிறது.



அப் படி சிதைக்கப்பட்டிருக்கிற அந்த மாணவர்களுடைய நலனை தாயுள்ளத்தோடு நம்முடைய தமிழ்நாடு அரசாங்கம் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், எல்லோரையும் பாதுகாப்பாக தமிழ்நாட்டிற்கு அழைத்து வந்திருக்கிறார்கள். ஒரு தாய் எப்படி கஷ்டப்படுவாரோ, ஒரு தந்தை எப்படி மனநிலையில் இருப்பாரோ அதை யெல்லாம் உணர்ந்துதான் இங்கே அழைத்து வந்திருக்கிறார்கள். ஆனால் வந்திருக்கிற இந்த மாணவர்களுடைய எதிர்காலம், இன்றைக்கு கேள்விகுறியாக இருக்கிறது. எனவே, கல்வி மாநிலப் பட்டியலில் நம்முடைய அதிகாரத்திற்குள் இருந்தால், இந்த நெருக்கடி வந்திருக்கவே வந்திருக்காது.

ஆனாலும் இன்றைக்கு நாம் இந்த நெருக்கடிகுள் ஆளாக்கப்பட்டிருக்கிறோம்.

மாநில அரசாங்கம் இந்த மாணவர் களுக்கான கல்வியை, உறுதிப்படுத் துவதற்கு ஒன்றிய அரசிற்கு, இந்த சட்டப்பேரவையின் மூல மாக அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும்.

இங்கே தமிழ்நாட்டில் இருக் கிற தனியார் மருத்தவக் கல்லூரிகளிலும், அரசு கல்லூரிகளிலும், அவர்கள் படிப்பதற்கான அந்த உத்தரவாதத்தை வழங்குவதற்கான, இந்த சட்டமன்றம் ஒருமித்த கருத்தோடு ஒன்றிய அரசிற்கு அழுத்தம் கொடுக்கவேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில், நான் பணிவாக கேட்டுக்கொள்கிறேன்.

அதோடுசேர்த்து அவர்களுடைய கல்வி செலவையும், நம்முடைய தமிழ்நாடு அரசாங்கம் தாயுள்ளத்தோடு ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டு, அரசின் கவனத்தை ஈர்த்து விடைபெறுகிறேன்.

நன்றி வணக்கம்.

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

# ஜனசக்தி

மலர் 85 இதழ் 03

## தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்கு சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றுக!

தொழிலாளர்கள் கடந்த 150 ஆண்டுகளாக தொடர்ச்சியாக பல தலைமுறைகளாக போராடி, சட்டங்கள் வழியாக பெற்ற உரிமைகளைப் பறிப்பதற்கான 4 சட்ட தொகுப்புகளை ஒன்றிய அரசு கொண்டு வந்திருக்கிறது.

ஒன்றிய அரசின் மூன்று வேளாண் சட்டங்களையும் தமிழ்நாடு அரசு எதிர்த்தது. சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றியது. விவசாயிகள் போராட்டத்தாலும், மாநில அரசுகளின் எதிர்ப்பாலும் வேளாண் சட்டங்களை ஒன்றிய அரசு கைவிட்டது.

சாதாரண மக்களின் குழந்தைகள் உயர்கல்வியை எட்டாது தடுக்கும் நீட் தேர்வு முறையை தமிழ்நாடு அரசு எதிர்க்கிறது. அதன் தீமைகள் குறித்து ஆய்வு செய்ய நீதிபதி ஏ கே ராஜன் தலைமையில் ஒரு குழு அமைத்து பரிந்துரைகளைப் பெற்றது. தமிழ்நாட்டுக்கு பொருந்தாது என சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றியது. அதனை ஆளுநர் திருப்பி அனுப்பிய போது, சட்டப்பேரவையைக் கூட்டி அதே தீர்மானத்தை மறுபடி நிறைவேற்றி அனுப்பியது. நீதிமன்றங்களிலும் தொய்வின்றி வழக்காடுகிறது.

அதைப்போலவே தொழிலாளர் சட்டத் தொகுப்புகளையும் தமிழ்நாடு அரசு எதிர்க்கிறது. சட்ட தொகுப்புகள் திரும்பப் பெறப்பட வேண்டும் என தமிழ்நாட்டின் சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றினால் பொருத்தமாக இருந்திருக்கும். இதுவரை அது நடக்கவில்லை.

இந்த சட்டத் தொகுப்புகளுக்கான விதிகளை ஒன்றிய அரசு ஏற்கனவே வெளியிட்டிருக்கிறது. ஆனாலும் இந்தியாவில் உள்ள அனைத்து மாநில அரசுகளும் மாநில விதிகளை வெளியிட்டால்தான், அந்தச் சட்டத் தொகுப்புகளை அமலாக்க முடியும். தமிழ்நாடு கேரளா உள்ளிட்ட ஒரு சில மாநிலங்கள் இந்த விதிகளை நிறைவேற்றவில்லை. ஆகவே ஒன்றிய அரசு சட்ட தொகுப்புகளை அமுலாக்க முடியவில்லை. கேரளா அரசு தொழிற்சங்கங்களை அழைத்து மாநில அரசு விதிகளை வரைவு விதிகளை தந்து விவாதித்துக்கொண்டிருக்கிறது.

தமிழ்நாடு அரசு கடந்த 11.4.2012 தேதியன்று இணையதளத்தில் 3 சட்டத் தொகுப்புகளுக்கான தமிழ்நாடு மாநில விதிகளை வெளியிட்டிருக்கிறது. அதனைக் கண்ணுறும் தமிழ்நாட்டு மக்கள் 45 நாட்களுக்குள் ஆட்சேபனை ஏதும் இருந்தால் தெரிவிக்கலாம் என்று சொல்லப்பட்டுள்ளது.

ஆனால் முன்னதாக 18.3.2022ம் தேதியன்று மாண்புமிகு தொழிலாளர் அமைச்சர் அவர்கள் சட்டத் தொகுப்புக்கான விதிகள் பற்றி விவாதிப்பதற்காக தொழிற்சங்கங்களை அழைத்து கூட்டம் நடத்தியுள்ளார். ஆனால் கூட்டத்தில் வரைவு விதிகள் எதுவும் கொடுக்கப்படவுமில்லை; அது பற்றி எந்த விவாதமும் இல்லை. ஒன்றிய அரசின் தொழிலாளர் சட்டத் தொகுப்புகள் மேன்மையானவை எனத் தோற்றமளிக்கும் ஒரு ஒப்பீட்டுப் பட்டியல் தரப்பட்டு, விளக்கப்பட்டுள்ளது.

அதிமுகவில் 10 ஆண்டு கால ஆட்சியில், முத்தரப்பு அமைப்புகளைப் பெரும்பாலும் கூட்டவில்லை. தமிழ்நாட்டில் தொழிலாளர் கொள்கை குறித்து வழக்கமாக மாநில தொழிலாளர் ஆலோசனை வாரியத்தில் கலந்து பேசி முடிவு எடுப்பது வழக்கம். இவை பற்றியெல்லாம் அதிமுக அரசு கவலைப்பட்டதில்லை. தொழிலாளர்களை அவமதிக்கும் இந்தப் போக்கில் இருந்து திமுகழக ஆட்சி அமைந்த பின்பு மாறுதல் வரும் என தொழிலாளர்கள் நம்பினார்கள்.

இனிமேல் நிரந்தர தொழிலாளர் என்ற முறையே இருக்காது, தொழிற்சங்கங்கள் நடத்துவது மிக கடினமாக மாற்றப்படும், கட்டுமான வாரியங்களில் சேர்ந்துள்ள நிதி பறிக்கப்பட்டு ஒன்றிய அரசின் ஆளுகைக்கு சென்றுவிடும் உள்ளிட்ட ஏராளமான அடிப்படை மாற்றங்களை ஒன்றிய அரசின் சட்ட தொகுப்புகள் முன்வைக்கின்றன. தொழிலாளர் விரோத சட்டங்களைப் பரிசீலிக்க ஏ.கே.ராஜன் குழு போன்ற தனி அமைப்புக் கூட வேண்டாம்; குறைந்தபட்சம் மாநில தொழிலாளர் ஆலோசனை வாரியக் கூட்டத்தை நடத்தியாவது அரசு முடிவு எடுத்திருக்கலாம்.

தமிழ்நாடு அரசின் வரைவு விதிகளைப் பற்றி எத்தனை ஆட்சேபனைகள், ஆலோசனைகளை எழுதினாலும், அவற்றையெல்லாம் பரிசீலித்ததாகவும், அவை பொருத்தமற்றவை என்று நிராகரித்து விட்டதாகவும் சொல்லி விதிகளை நிறைவேற்றி விடுவார்கள். ஏனெனில் பாஜகவின் ஒன்றிய அரசு இதையேதான் செய்தது. தொழிற்சங்கங்களின் ஆட்சேபனை பற்றியே சொல்லாமல் தொழிற்சங்கங்களிடம் பேசி விட்டோம் என அரை உண்மை சொல்லி கடந்து சென்றார்கள். அதே ஒளிவு மறைவுப் பாதையில் திமுக ஆட்சியும் செல்வது பொருத்தமற்றது. இது சமூகநீதிக் கோட்பாட்டுக்கு உகந்ததல்ல.

மாணவர்களையும் விவசாயிகளையும் முழு முயற்சி எடுத்து காப்பாற்ற முனைந்தது போல், தொழிலாளர்களையும் தமிழ்நாடு அரசு காப்பாற்ற வேண்டும். வரைவு விதிகளை வலியுறுத்தக் கூடாது.

தொழிலாளர் சட்டத் தொகுப்புகளை திரும்பப் பெற வேண்டும் என சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்ற முன்வர வேண்டும்.

### மக்களை நிரந்தரமாக அச்சுறுத்தி வைத்திருப்பதற்கே

## குற்றவியல் சட்டத் திருத்தம்



நாடாளுமன்ற மக்களவையில் 04.04.2022 அன்று நடைபெற்ற குற்றவியல் நடைமுறை சட்ட முன்வடிவு 2022 மீதான விவாதத்தில் தோழர் கே. சுப்பராயன் பேசியது பின்வருமாறு:

இது ஒரு மோசமான சட்ட முன்வடிவு ஆகும். எனவே, இதனை நான் கடுமையாக ஆட்சேபிக்கிறேன். இந்தச் சட்ட முன்வடிவை நாடாளுமன்ற நிலைக்குழுவின் ஆய்வுக்கு அனுப்ப வேண்டும் என்றும் வலியுறுத்துகிறேன். இந்தச் சட்ட முன்வடிவு எவ்வாறு மனித உரிமைகளுக்கும், அரசியல் அமைப்பு சட்டத்திற்கும் எதிராக உள்ளது என்பது பற்றிய விவரங்களை எனக்கு முன் பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலரும் விரிவாக எடுத்துக் கூறி இருக்கிறார்கள்.

### நாடாளுமன்றத்தில் கே.சுப்பராயன் குற்றச்சாட்டு

எனவே, நான் அவற்றை மீண்டும் எடுத்துச் சொல்ல விரும்பவில்லை. அவற்றை நானும் வழிமொழிகிறேன்.

அடுத்து, நான் இங்கே குறிப்பிட விரும்புவது, இது ஒரு ஜனநாயக அரசியல் அமைப்பு ஆகும். இந்த ஜனநாயக அரசியல் அமைப்பில் ஆளுகிற தகுதி பாஜகவுக்கு இல்லை என்பதைத் தான் அவர்கள் கொண்டுவந்துள்ள ஒவ்வொரு சட்ட முன்வடிவும் அழுத்தந்திருத்தமாக வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றன. இந்தச் சட்ட முன்வடிவை அறிமுக நிலையிலேயே எதிர்க்கட்சிகள் வலிமையாக எதிர்த்தன; ஆட்சேபித்தன. இந்தச் சட்ட முன்வடிவு எவ்வளவு கடுமையானது என்பதற்கு இந்த எதிர்ப்பே சான்றாகும். அதனை உணர்ந்து, அவற்றை திரும்பப் பெறக் கூட இந்த ஆட்சியாளர்கள் தயாராக இல்லை என்பது ஜனநாயக அரசியல் அமைப்பை நிர்வகிக்க இவர்கள் தகுதியற்றவர்கள் என்பதைத் தான் நிரூபித்துக் கொண்டிருக்கிறது.

மற்றொரு விஷயத்தை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். 75 ஆண்டுகளுக்கு ரெக்கார்டுகள் சேமித்து வைக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. குற்றம் செய்வது மனிதனுடைய இயல்பா? இல்லை! மனிதன் குற்றம் செய்கிற இயல்பைக் கொண்டவன் அல்லன். இன்றைய சமூக அமைப்பு தான் மனிதனைக் குற்றம் செய்ய நிர்பந்திக்கிறது. எனவே, குற்றவாளி சமூக அமைப்பே தவிர மனிதர்கள் அல்லர்! எனவே இவ்வளவு நீண்ட காலம் அவற்றை வைத்திருப்பதும் பொருத்தமானதல்ல என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அது போலவே, இந்த ஒன்றிய அரசாங்க நடவடிக்கைகளில் மிக மோசமான ஒன்று காலனிய மூல சட்டத்தை பயன்படுத்தி இருப்பது ஆகும். இதனுடைய மூல சட்டம் எது? 1920ஆம் ஆண்டின் காலனிய சட்டம் ஆகும். அந்த மூல சட்டத்தில் இல்லாததைக் கூட இதில் இணைக்கிறார்கள். பாஜக, இன்றும் காலனிய கட்டமைப்பிலிருந்து விடுபடவில்லை என்பதைத்தான் இந்தச் செயல் நிரூபிக்கிறது. அதற்கு இவர்கள் என்ன காரணம் சொல்லுகிறார்கள்? தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்து இருக்கிறது என்று காரணம் கூறுகிறார்கள். இது வெறும் டெக்னாலஜி அட்வான்ஸ் ஆகியிருப்பது பற்றியது மட்டுமல்ல! பிற்போக்குத்தனமான முறையில் மக்களை நிரந்தரமாக அச்சுறுத்தி வைத்திருப்பதற்கும், எதிர்க்கட்சிகளை மிரட்டுவதற்கும் இவற்றைப் பயன்படுத்துவது என்பது தான் இந்த அரசாங்கத்தின் அப்பட்டமான உள்நோக்கமாகும். எனவே, இதை நான் கடுமையாக எதிர்க்கிறேன்.

இப்போது, இந்தியாவில் விசாரணை கைதிகள் என்ற பெயரால் விசாரணை சிறைவாசிகள் என்று நூற்றுக் கணக்கான இசுலாமியர்கள் சிறை வைக்கப்பட்டிருக்கிறார்கள். சிறைவைக்கப்பட்டு உள்ளவர்கள் வெறும் விசாரணை கைதிகள் ஆவர். அவர்களை ஏன் பத்து, இருபது ஆண்டுகள் விசாரணை கைதிகளாக வைத்திருக்கிறீர்கள்? அவர்களை விடுவிக்க வேண்டும் என்று ஜனநாயகவாதிகள் வலியுறுத்தினார்கள். ஜனநாயகப் பண்பற்ற இந்த ஆட்சியாளர்கள் அதனை ஏற்கத் தயாராக இல்லை; நிராகரித்திருக்கிறார்கள்.

அது போலவே, நான் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். ஆட்சியாளர்களான நீங்கள் ஒவ்வொரு நடவடிக்கையிலும் மக்கள் விரோத, ஜனநாயக விரோத, மற்றும் தேச விரோத நடவடிக்கைகளை தான் வெளிப்படுத்துகிறீர்கள்.

தமிழ்நாட்டில் இருந்து நேற்று ஒரு குரல் கேட்கிறது. மாநில அரசு மற்றும் மாநிலங்கள் வளர்ச்சி அடைவது ஆபத் தானது என்று ஒரு குரல் தமிழ்நாட்டில் இருந்து கேட்கிறது. இந்த குரலுக்கு யார் தைரியம் ஊட்டியது? இப்படி பேசுவதற்கான உரிமையை அவர்களுக்கு யார் வழங்கியது? அதுவும் மாநிலத்தை கண்காணிக்கிற தலை வர் பொறுப்பில் இருக்கக்கூடிய ஒருவர், இத்தகைய வார்த்தைகளைக் கூறி இருப்பது அத்துமீறல் ஆகும்! தண்டிக்கப்பட வேண்டிய அத்துமீறல் ஆகும்! இதை ஒன்றிய அரசாங்கம் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

### மலையாளி என அடையாளமிடப்பட்டவர்களை

## எஸ்.டி.பட்டியலில் இணைத்திடுக!

### நாடாளுமன்றத்தில் கே.சுப்பராயன் கோரிக்கை

நாடாளுமன்ற மக்களவையில் 01.04.2022 அன்று நடைபெற்ற பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் ( இரண் டாவது திருத்தம் ) சட்ட முன்வடிவு 2022 மீதான விவாதத்தில் தோழர் கே.சுப்பராயன் பேசியது பின்வருமாறு:

தமிழ்நாட்டின் மிக முக்கியமான பிரச்சினை ஒன்றை மாண்புமிகு அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் ‘மலையாளி’ என்று அடையாளப்படுத்தப்பட்டுள்ள பழங்குடிமக்கள் தமிழ்நாட்டின் பல மாவட்டங்களில் வாழ்ந்து வருகிறார்கள். குறிப்பாக, தர்மபுரி, வேலூர், திருவண்ணாமலை, புதுக்கோட்டை, சேலம், நாமக்கல், விழுப்புரம், கடலூர், திருச்சி, கரூர், பெரம்பலூர், ஆகிய மாவட்டங்களில் ‘மலையாளி’ பழங்குடி மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். இவர்களுக்கு எஸ்.டி சான்றிதழ் கொடுக்கப்படுகிறது. ஆனால், ஈரோடு மாவட்டத்தில் மட்டும் ‘மலையாளி’ பழங்குடி மக்களுக்கு எஸ்.டி. சான்றிதழ் கொடுக்கப்படுவதில்லை. ஒரே மாநிலத்தில், வேறு பல மாவட்டங்களில் மலையாளி பழங்குடி மக்களுக்கு எஸ்.டி சான்றிதழ் கொடுத்து அங்கீகரிக்கப்படுகிறது. ஆனால், ஈரோடு மாவட்டத்தில் மட்டும் ஏன் அங்கீகரிக்கவில்லை என்ற ஒரு நியாயமான கேள்வி முன்வைக்கப்படுகிறது.

எனவே மாண்புமிகு அமைச்சர் தமிழ்நாட்டில் உள்ள எஸ்.டி. பட்டியலில் ஈரோடு மாவட்டத்தையும் இணைக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். நான் எழுதிய கடிதத்திற்கு கடந்த 28 02.2002 அன்று அமைச்சர் பதிலளித்துள்ளார். “மாநில அரசாங்கத்தால் பரிந்துரைக்கப்பட்டு நியாயப்படுத்தப்பட்ட முன்மொழிவுகள் மட்டுமே பரிசீலிக்கப்படும்“ என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏற்கனவே, மாநில அரசாங்கம் பலமுறை இதற்கான முன்மொழிவை அனுப்பியுள்ளது. ஆனால், இன்றுவரை அங்கீகரிக்கப்படவில்லை.


ஈரோடு மாவட்ட ‘மலையாளிகள்’ என்று சொல்லப்படும் இந்த மக்கள் பல நூறாண்டு காலமாக பழங்குடிகளாக வாழ்ந்து வருகிறார்கள். எனவே, அவர்களைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பது அவசியமானது; அவசரமானது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுக்கு கல்வி, வேலைவாய்ப்பு ஆகியவற்றில் கடுமையான பாதிப்பு இருக்கிறது. எந்த வாய்ப்பையும் அவர்கள் முடியவில்லை. எஸ்.டி.யாகவே வாழ்ந்தும், எஸ்.டி. பட்டியலில் இடம்பெறாத காரணத்தால் அவர்களுக்குரிய சலுகைகள் அவர்களுக்கு கிடைக்கவில்லை. இது ஒரு மிக முக்கியமான விஷயம் ஆகும்.

இந்தத் திருத்தம் 2016 ஆம் ஆண்டு வந்த போதே ஒரு தவறு நிகழ்ந்தது. 2016ல் ஒரு சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டது. அதில் ‘மலையாளி’ எனும் சொல்லோடு ‘கவுண்டர்’ என்ற சொல்லும் இணைக்கப்பட்டு ‘மலையாளி கவுண்டர்’ என்று மாறிவிட்டது. ஏற்கனவே, ஈரோடு மாவட்டத்தில் ஓ.பி.சி பட்டியலில் ‘கவுண்டர்’ சாதி இடம்பெற்றுள்ளது. எனவே, மலையாளி பழங்குடி மக்கள் எஸ்.டி. பட்டியலில் இடம்பெற முடியாமல் போனது.

2016–ல் ஒனறிய அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்ட திருத்த சட்ட முன்வடிவு காரணமாக, ‘மலையாளி’ பழங்குடி மக்கள் எஸ்.டி. பட்டியலில் இடம்பெற முடியாமல் போய்விட்டது. தவறான சட்ட முன்வடிவு அறிமுகப் படுத்தப்பட்டதால் அவர்களுக்கு அந்த வாய்ப்பு கிடைக்கவில்லை. எனவே, மலையாளி என்று அடையாளமிடப்பட்டுள்ள, பர்கூர், கடம்பூர் மலைகளிலும், ஈரோடு மாவட்டத்தில் வாழ்கிறவர்களை உடனடியாக தமிழ்நாடு அரசின் எஸ்.டி. பட்டியலில் இணைக்க வேண்டும். அது போலவே, நீலகிரி மாவட்டத்தில் உள்ள நீலகிரி மலைப்பகுதிகளில் வாழ்ந்து வரும் படுகர் மக்களையும் பழங்குடியினர் பட்டியலில் இணைக்க வேண்டும். இது ஒரு நீண்டகால கோரிக்கை ஆகும். நரிக்குறவர்கள் மற்றும் குறும்பர்களையும் அந்தப் பட்டியலில் இணைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தத்துவார்த்தம் 26

# தமிழகத்தில் மார்க்சியப் போக்குகள்



எஸ். தோதாத்ரி



சென்ற வார தொடர்ச்சி...

**மார்க்சியத்தின் முக்கியமான பகுதி அடிப்படை மேற்கோப்பு என்ற பாகுபாடு ஆகும். பொருளியல் வாழ்வினை மார்க்ஸ் அடிப்படையாக ஏற்றுக்கொள்கிறார். அடிப்படையின் பிரதிபலிப்பு மேற்கோப்பு என்பது மார்க்சியம். அடிப்படை மாறும்பொழுது மேற்கோப்பு மாறுகிறது. ஆனால் மேற்கோப்பின் தன்மையை இறுதியாகத் தீர்மானிப்பது அடிப்படைதான் என்று மார்க்சியம் கூறுகிறது. ஆனால் மேற்கோப்பிற்கு அடிப்படையைப் பாதிக்கும் திறன் உண்டு. மேலும் இவற்றிற்கு இடையிலான சுதந்திரம் தாரதம்ய (Relative) சுதந்திரம் என்றும் மார்க்சியம் வரையறை செய்கிறது.**

ஆனால் ஞானி போன்றவர்கள் அடிப்படை மேற் கோப்பு உறவின் வேறு மாதிரியாகக் காண்கின்றனர். இத்தாலியப் பொது வுடைமை வாதியான கிராம்சியை மேற்கோளாகக் காட்டி மேற்கோப்பிற்கு முழுசுதந்திரம் அளிக்கும் போக்கினை வலியுறுத் துகின்றனர். கிராம்சி மார்க்சியத்தில் வரலாற்று இயல் பொருள் முதல் வாதத்தில் அதிக கவனம் செலுத்தினார். அழகியல் தத் துவம் ஆகியவற்றில் அதிக கவனம் செலுத்தினர். அவர் கலாச்சார விஷயங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார். இத்தாலிய கலாச்சாரம் பற்றி, அதிகம் ஆராய்ந்தார். கத்தோலிக்க சமய நடவடிக்கைகளை விமர்சனம் செய்தார். அடிப்படை மேற்கோப்பு உறவு கலாச்சாரப்புரட்சி, ஆகியன பற்றி எழுதினர். மொத்தத்தில் கலச்சார மேலாண்மை பற்றி எழுதினார். ஆனால் அவர் கருத்து முதல்வாதப் போக்குகளை ஏற்றுக் கொள்ளவில்லை. அவற் றிற்கு எதிராக மார்க்சியத்தை வலியுறுத்தினார். இத்தாலியப் பொதுவுடைமை இயக்கத்தின் வலதுசாரிப் போக்குகளை அவர் வன்மையாகக் கண்டித்தார். பண்பாட்டுத் தளத்தில் வெற்றி பெறாமல் அரசியல் தள வெற்றி நிலைத்து இருக்க முடியாது என்று அவர் கூறுவதை வைத்துக்கொண்டு மேற் கோப்பிற்கு பூரணசுதந்திரம் வேண்டும் என்ற வாதத்தை ஞானி போன்றவர்கள் வைக்கின்றனர். அடிப்படைக்கான போராட்டம் சர்வாதிகாரப் போக்கினை உருவாக்கும் என்று கூறுகின்றனர்.

கிராம்சியிடம் ஏற்றுக்கொள்ளக் கூடிய கருத்தும் உண்டு, மறுக்கப்பட வேண்டியவையும் உண்டு. இங்குக் கிராம்சியின் கருத்துக்களில் கலாச்சார மேலாண்மை என்ற பகுதியை வலியு றுத்தும் பொழுது, அவரைப் பற்றிய முழுமையான சித் திரம் கிடைக்காமலேயே சென்றுவிடுகிறது. கிராம்சியைப் பின்பற்றி வெறும் பொருளாதாரவாதமாக மார்க்சியத்தைச் சுருக்கி விடக்கூடாது என்று ஞானி பல இடங்களில் கூறுகிறார். கிராம்சி கூட இவ்வாறு அடித்துக் கூறவில்லை. மார்க்சியத்தின் அடிப்படை என்பதே மனிதன் உற்பத்தியில் ஈடுபடும்பொழுது ஏற்படும் உறவுகள்தாம் ஆதாரமானவை என்பதாகும். இதனைப் பொருளாதாரவாதம் கூறிவிட முடியாது. இதனையும் மேற்கோப்பினையும் இணைத்துக் காண வேண்டும் என்பது மார்க்சியம். இதன் ஏதாவதொரு பகுதியை மட்டும் வலியுறுத்துவது என்பது மார்க்சியத்தையே சிதைப்பதாகும்.

இந்த முறையில் மேற்கோப்பிற்குள்ளாக அதிகமான அளவு சஞ்சாரம் செய்யும் இவர்கள் பல குழப்பமான முடிவுகளுக்குச் செல்கின்றனர். முதலாவது மார்க்சியம் பேசும் ஒற்றைக் காரணி (பொருளாதார உறவுகள் நிர்ணயம் செய்கின்றன என்பது) என்பதை மறுத்துப் பல காரணிகளை (**Pluralistic**) ஒரு நிகழ்ச்சிக்கு விளக்கமாக அளிக்கும் போக்கினை மேற்கொள்கின்றனர். மார்க்சியம் காரணிகளின் தாக்கத்தை ஏற்றுக் கொள்கிறது ஆனால் நிர்ணயவாதமாகப் பொருளாதார காரணியைக் கூறுகிறது. இதுபற்றி மார்க்சும், ஏங்கல்சும் தன்னிலை விளக்கமாகப் பல கடிதங்கள் எழுதியுள்ளனர். அதில் பொருளாதாரக் காரணிக்கும் மற்றவற்றிற்கும் உள்ள உறவுபற்றி கூறுகின்றனர். ஆனால் இறுதியாகச் செயல்படுவது பொருளாதாரக் காரணி என்பதை வலியுறுத்துகின்றனர்.

இதன் தொடர்பாக வரலாற்று இயல்பொருள் முதல்வாத முறையைப் பின்பற்றும் நா. வானமாமலை, கைலாசபதி, தேவி பிரசாத் சட்டோபாத்யாயா ஆகியோரது முயற்சிகளைப் பாசிடி விசம், விஞ்ஞானவாதம் என்று கூறி அதனை மறுக்கின்றனர். உதாரணமாக அ. மார்க்ஸ் கட்சி சார்ந்த மார்க்சியவாதிகளின் பார்வையைத் திரிபுவாதம் என்று கூறுகிறார். ஞானி பின்வருமாறு எழுதுகிறார். ''கட்சிசார்ந்த மார்க்சியரின் பார்வையை புதிய தலைமுறை காலம் முதலேயே நாங்கள் மறுத்தோம்'' (தமிழில் நவீனத்துவம் பின் நவீனத்துவம் பக் 122)

தேவி பிரசாத் சட்டோபாத்யாவின் ''இந்திய மெய்யியல் இருப்பனவும், இறந்தனவும்'' என்ற நூலின் மதிப்புரையில் ஞானி எழுதுகிறார்.

''இப்போது நமக்கு முன் சில பிரச்சினைகள் எழுகின்றன பாரெங்கும் நியாய லோகாயதவாதிகளும், வைசேடிகர்களும் சுரண்டும் வர்க்கத்தின் நலனுக்காகத்தான் தத்துவம் வளர்த்தனர் என்பது தேவி பிரசாத் கருத்தானால் சுரண்டும் வர்க்கத்தின் காவலுக்காகத் தத்துவம் என்றால் தத்துவங்களில் பலவகை ஒன்றை மற்றது மறுப்பது ஏன் என்று நமக்கு விளங்கவில்லை'' (அ.நூ 164)

ஞானியின் கருத்துப்படி தேவி பிரசாத் சட்டோ பாத்யாவின் வர்க்கப்பார்வை கேள்விக்குள்ளாகிறது. தத்துவங்கள் ஒன்றை யொன்று மறுப்பதும் வர்க்க நலன் களின் பிரதிபலிப்பு என்ற மார்க்சியத்தின் ஆரம்பநிலை அறிவைக்கூட ஞானி மறந்து விட்டார். இதன் மூலம், தேவி பிரசாத் சட்டோபாத்யாயாவின் அணுகுமுறையை (வரலாற்று இயல் பொருள் முதல் வாதம் யையே ஞானி கேள்விக்குள்ளாக்குகிறார்.

கட்சி சார்ந்த மார்க்சியவாதிகளை பாசிட்டிவிஸ்ட்கள் என்று தமிழக புதிய இடது சாரிகள் குற்றம் சாட்டுகின்றனர். இங்கு ஒரு கேள்வி எழுகிறது. பாசிட்டிவிஸம் இயங்கியல் பொருள் முதல் வாதம் ஆகியவற்றிற்கு இடையே வேறுபாடு இல்லையா என்பது அந்தக் கேள்வி.

**பாசிட்டிவிஸம் என்பது புலனுணர்வுத் தத்துவத்தின் நீட்சி என்று டாக்டர் ந.முத்துமோகன் கூறுகிறார். இதில் அறிவின் தோற்றத்தில் புலன் உணர்வு பெறும் பங்கு அதிகம் வலியுறுத்தப்படுகிறது. இது நேர்காட்சிவாதம் என்று அழைக்கப்படுகிறது.**

முத்துமோகன் கூற்றுப்படி ''புலனுணர்வுத் தகவல்களிலிருந்து தான் நமது எல்லா அறிவுமே துவங்குகிறது. புலனுணர்வு கடந்த காட்சி, கடந்த அனுபவம் கடந்த தத்துவத் தேடலை இது ஏற் காது.' விஞ்ஞான ஆய்வுகளுக்கு உகந்த தத்துவமாக இது உருப் பெற்றது நேரில் காணும் உலகம், பொருட்கள் அவை பற்றிய தகவல்கள் அவற்றின் இயக்கம் செயல்பாடு ஆகியவற்றிலிருந்தும் அத்தகவல்களைத் தர்க்க ரீதியாகத் தொகுத்து, பகுத்து வகைப்படுத்துவதிலிருந்தும்தான் இயற்கை விஞ்ஞானங்கள் துவங்கப்பட முடியும்'' இதில் ஒரு கறார் தன்மை உண்டு,

இயங்கியல் பொருள் முதல்வாதம் விஞ்ஞானத் தன்மை உள்ளது தான். ஆனால் இதில் பொருள் முதன்மையாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இரண்டு இயற்கை, சமூகம் ஆகியவற்றின் பல்வேறு நிகழ்ச்சிகள் உறவுகள் கொள்வதை வைத்து முடிவுகள் எடுக்கப்படுகின்றன. இயங்கியல் பொருள் முதல் வாதத்தின் ஒரு நீட்சியான வரலாற்று இயல் பொருள் முதல் வாதத்தில் மனித உறவுகள் அடிப்படையாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இந்த உறவுகளை, பொருளை விளக்குவதற்குத்தான் ஆதாரங்கள் விவரங்களே தவிர, விவரங்களுக்காக விவரங்கள் என்ற நேர்க் காட்சிவாத நிலைப்பாடு இயங்கியல் பொருள்முதல் வாதத்தில் இல்லை.

ஆதாரங்கள், அநுபவங்கள், புலன் சார்ந்த உண்மைகள் மட்டும் இயங்கியல் பொருள் முதல்வாதமல்ல. இவற்றைப் பொருத்திப் பார்த்து ஒரு ஒருங்கிணைந்த முடிவை எடுப்பது இயங்கியல் பொருள் முதல்வாதியின் வேலை. இதனை பாசிட்டிவிஸத்தோடு இணைக்கக்கூடாது. ஏனென்றால் பாசிட்டிவிஸம் இயந்திர கதியிலான பொருள் முதல்வாதத்துடன் நெருங்கிய தொடர்பு டையது. அது போலி புறவயத் தன்மை உடையது. இந்தத் தன் மையுள்ள தத்துவத்தை தேவி பிரசாத் சட்டோபாத்யாவோ, நா.வானமா மலையோ, கைலாசபதியோ மேற்கொண்டார்கள் என்று கூறுவது பொருத்தமாகாது.

பிரதிபலிப்பு பற்றி ஞானி போன்றவர்களின் கருத்து செவ்வியல் மார்க்சியத்தில் இருந்து வேறு படுகிறது. அ.மார்க்ஸ் அவரது நூலான ''பின் நவீனத்துவத்தில்' இதனை மறுக்கிறார். எஸ். என். நாகராஜன் ''உயிரற்றுப் போன பிரதிபலித்தல் கோட்பாடு'' என்று அழைக்கிறார். ஞானி இக்கொள்கையைப் பல இடங்களில் மறுத்துப் பேசியுள்ளார். ஆனால் இக்கொள்கை மார்க்ஸ், ஏங்கல்சால் உருவாக்கப்பட்டு லெனினால் ஒரு வடிவம் கொடுக்கப்பட்டது ஆகும். இது விஞ்ஞானத் தன்மை உள்ளது. எனவே இதனை புதிய இடது சாரிகள் மறுக்கின்றனர். பொருள் புறத்தே உள்ளது. அதனைப் புலன் உணர்வுகள் மூலம் மனிதன் பிரதிபலிக்கிறான்; அதனைப் பிரதி செய்கிறான்; லெனினின் இந்தக் கூற்று பொருள் முதல்வாத அடிப்படையில் அமைந்தது. இதுபற்றி லெனின் அவருடைய ''பொருள் முதல்வாதமும் புலன் அறிவு விமர்சனமும்'' என்ற நூலில் பல இடங்களில் கூறுகிறார். இதற்கு மாற்றாக அந்நிய மயமாதலைக் காட்டுகின்றனர், ஆனால் அந்நியமய மாதலும் பிரதி பலிப்பின் ஒருவகை என்பதை மறந்துவிடுகின்றனர். பிரதிபலிப்புக் கொள்கையை விட, அந்நிய மயமாதல் என்பது பல்வேறுசுதந்திரமான விளக்கங்கள் அளிப்பதற்கும், தனி நபர்வாதப்போக்கிற்கும் இடமளிக்கிறது. ஒரு எல்லைக்குள் நிற்காமல் இருப்பதற்கு வசதியாக உள்ளது. பல்வேறு ஆன்மீகக் கருத்துக்களை மார்க்சியத்திற்கு உள்ளாகக்கொண்டு வருவதற்கு வழிவகுக்கிறது.

புதிய இடதுசாரிகள் மார்க்சியத்துடன் பல கருத்து முதல்வாதச் சிந்தனைகள்களை இணைக்கலாம் என்ற போக்கினை உடையவர்கள். தமிழகத்தில் அவர்கள் முன்வைப்பது இந்திய ஆன்மிகத்தையும். மார்க்சியத்தையும் இணைப்பது ஆகும். இதற்கு வசதியாக மார்க்சியத் தத்துவத்தில் ஒரு திருத்தம் கொண்டு வருகின்றனர். அதாவது ஞானியின் கருத்துப்படி கருத்து, பொருள் ஆகியவற்றிற்கு இடையே வேறுபாடு கிடையாது என்பது ஆகும். (பார்க்க ஞானியின் ஓம்சக்தி கட்டுரைகள்) மார்க்சியம் அடித்தளத்தில் இயங்கியல் பொருள் முதல்வாதம் ஆகும். மார்க்ஸ் அவர்காலத்திய கருத்து முதல்வாதப் போக்குகளை விமர்சனம் செய்தார் என்பதை நாம் மனத்தில் கொள்ள வேண்டும். ஹெகலின் முறையை (இயங்கியல்) ஏற்றுக் கொண்டாரே ஒழிய, அவருடைய முழு முதற்கருத்து என்பதை மார்க்ஸ் ஏற்றுக்கொள்ள வில்லை. எனவே ஞானியின் கருத்து மார்க்சியத்திற்கு முரணானது.

''மார்க்சின் கோட்பாட்டில் அறத்திற்கு இட மில்லை. சுருங்கச் சொன்னால் மார்க்சியம் அறச் சிந்தனையற்ற ஒருவகையான கோட்பாட்டை நாத்திகவாதம்தான் மார்க்ஸ் தமது சமயவாதமெனப் பிறர் குறைத்து மதிப்பிடுவார்களோ என அஞ்சி அவர் அறத்தைப்பற்றிக் குறிப்பிடவில்லை போலும்... கிழக்கத்திய அறவகை நாகரிகத்தை (மகா வீரர் மற்றும் புத்தர் போன்றவர்கள்) இவர் அறிந்திருந்தால் ஏன் இந்த சமூக சீர்திருத்தவாதிகள் அறத்திற்கு இவ்வளவு அழுத்தம் கொடுத்தார்கள் என்பதைச் சிந்தித்திருப்பார்.'' (எஸ் என் நாகராஜன் மார்க்சியத்தில் நெருக்கடி நிகழ். அக்: 1990 பக் 53)

அறம் சார்ந்த மார்க்சியம் வேண்டும் என்று ஞானி வலியுறுத் துகிறார் அதாவது வெறுப்பின் அடிப் படையில் இயக்கங்கள் இருக்கக்கூடாது என்கிறார். இங்கு ஒரு கேள்வி எழுகிறது மார்க்சியத்தில் அறச் சிந்தனையே இல்லையா? இந்தக் கேள் விக்குப் பதிலாக ஏங்கல்ஸின் ''டூரிங்கிற்கு மறுப்பு'' என்ற நூலில் (ஆங்கிலம்) 130, 132, 403 104, 433, 435) உள்ள பகுதிகளைப் படிக்கவேண்டும் என்று கூறலாம். ஒரு மார்க்சிய அறம் என்பது பின்வரும் கட்டங்களைக் கொண்டது

1. வர்க்க சமூகத்தில் உள்ள அறச் சிந்தனைகள் அந்தந்த வர்க்கங்களின் நலன்களையே பிரதிபலிப்பதாக இருக்கின்றன. அவை தனிச் சொத்துரிமையை வலுப் படுத்துவதாகவே அமைந்துள்ளன

2. எனவே வர்க்க சமூகத்தின் ஒழுக்கவிதிகளை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது

3 அதே சமயத்தில் வர்க்க சமூகத்தில் தோன்றிய சிந்தனைகளை முற்போக்கானவற்றை சுவீகரித்துக் கொள்ள வேண்டும்.

இந்த முறையில் உள்ள அறஉணர்வு சகோதரத்து வம், தியாகம், தன்னலம் பேணாமை என்ற முறையில் இருக்கும் ஆனால் இவை அனைத்தும் உழைக்கும் மக்களின் விடுதலைக்காக இயங்கும் இந்த அறவழி என்பது பொதுவுடைமை சமூகத்தை அமைப்பதற்குத் துணையாக இருக்கும். இந்த வழி அறச்சிந்தனையை மார்க்சிய அறம் என்று அழைக்கலாம். இதற்கு மாற்றாக புத்தர், வர்த்தமான மகாவீரர் போதனைகளை மார்க்சுடன் இணைத்து ஒரு ஆன்மிகக் கலவையை உருவாக்குவதை மார்க்சியம் ஏற்றுக் கொள்ள முடியாது.

இந்தப் போக்குகள் அனைத்தையும் காணும் பொழுது விஞ் ஞானத் தன்மை வாய்ந்த செவ்வியல் மார்க்சியப் போக்கு, மார்க்சியத்தை மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும் என்ற புதிய மார்க்சியப் போக்கு என்ற இருபெரும் பிரிவுகளைக் காணலாம். இவற்றினை சீர்தூக்கிப் பார்த்து ஒதுக்கவேண்டியதை ஒதுக்கி, ஏற்றுக்கொள்ள வேண்டியதை ஏற்றுக்கொண்டு மார்க்சியத்தின் அடிப்படைகளை மாற்றாமல் ஒரு பாதையை உருவாக்க வேண்டியது நமது கடமை யாகிறது.

தொடர்புக்கு: **98947 83657**

*சமூக விஞ்ஞானம் (ஏப்ரல் 2004)*

*தாமரை (ஜனவரி 2003, பிப்ரவரி 2003)*

# தமிழகம் முழுவதும் டாக்டர் அம்பேத்கர் பிறந்த நாள் விழா

தமிழகம் முழுவதும் டாக்டர் அம்பேத்கர் பிறந்தநாள் விழா ஏப்ரல் 14 அன்று கொண்டாடப்பட்டது.

இதில் சமத்துவத்தை நிலைநாட்டவும், சகோதரத்துவத்தை பாதுகாக்கவும், மதச்சார்பின்மையை பாதுகாக்கவும், மக்கள் ஒற்றுமையை வலியுறுத்தியும், மதவெறிக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுக்கவும் உறுதிமொழி ஏற்கப்பட்டது.

**சென்னை:** சென்னை துறைமுகம் நுழைவாயிலில் அமைந்துள்ள அம்பேத்கரது சிலைக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன் ஆகியோர் மாலை அணிவித்து அவரது புகழ்குறித்து பேசினர்.

இந்நிகழ்ச்சியில் வடசென்னை மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.மூர்த்தி, மத்திய சென்னை மாவட்டச் செயலாளர் ப.கருணாநிதி, ஏஐடியூசி தலைவர்கள் மு.சம்பத், எஸ்.குப்பன், தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாநிலச் செயலாளர் கி.சு.குமார், மாநில தலைமைக்குழு உறுப்பினர்கள் சு.பாஸ்கர், லி.உதயகுமார், ஜி.சுப்பிரமணி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் ஆ.சுப்பிரமணி, மு.வரதன், கருணாகரன், ஏ.அருள், ஆட்டோ சங்கத் தலைவர் மு.சாமிநாதன் உட்பட கட்சி இளைஞர், மாணவர், மாதர், தொழிற்சங்க நிர்வாகிகள் ஏராளமானோர் பங்கேற்றனர்.



**கள்ளக்குறிச்சி:** தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் கள்ளக்குறிச்சி மாவட்ட குழு சார்பில் டாக்டர் அம்பேத்கர் 131 வது பிறந்தநாள் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் ஆர்.முத்தரசன், ஏஐடியூசி மாநிலப் பொதுச் செயலாளர் டி.எம்.மூர்த்தி ஆகியோருக்கு, கள்ளக்குறிச்சி மாவட்ட செயலாளர் வெங்கடேசன், உளுந்தூர்பேட்டை நகர தலைவர் பி.ஆர்.நந்தகோபாலகிருஷ்ணன் ஆகியோர் அம்பேத்கர் சிலை வழங்கினர். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கள்ளக்குறிச்சி மாவட்ட செயலாளர் கே.எஸ்.அப்பாவு உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**உளுந்தூர்பேட்டை** பேருந்து நிலையத்தில் இருந்து நகரத்தலைவர் பி.ஆர்.நந்தகோபால் தலைமையில் அம்பேத்கர் உருவப்படம் ஏந்தி ஊர்வலம் வந்தது. மணிக்கூண்டு திடலில் மத நல்லிணக்கம் உறுதியேற்பு கூட்டம் மாவட்ட செயலாளர் எம் வெங்கடேசன் வாசிக்க அணைவரும் உறுதியேற்றனர். உளுந்தூர்பேட்டை நகரத்தில் 20ஆண்டு காலமாக ஆதரவு அற்ற சடலங்களை தன் சொந்த செலவில் அடக்கம் செய்துவரும் ராஜகோபால் அவர்களுக்கு சிறந்த பண்பாளர் விருது ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க மாவட்ட குழு சார்பில் அவரை கவுரவித்து மாவட்ட செயலாளர் எம்.வெங்கடேசன், நகர்மன்ற தலைவர் க.திருநாவுக்கரசு, திமுக ஒன்றிய செயலாளர் யூ.எஸ்.வைத்தியநாதன் ஆகியோர் வழங்கினர். நிகழ்ச்சியில் தமிழக வாழ்வுரிமைக் கட்சி மாவட்ட செயலாளர் ஞா.ராஜேஷ், கலை இலக்கிய பெருமன்ற மாவட்ட செயலாளர் எம்.கலியபெருமாள், விசிக மாவட்ட துணை செயலாளர் அறிவுக்கரசு, திமுக நகரசெயலாளர் த.டேனியல்ராஜ் ஆகியோருக்கு சிபிஐ மாவட்ட செயலாளர் எஸ்.அப்பாவு அவர்கள் மூலம் ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் சார்பில் அம்பேத்கர் சிலை வழங்கி கவுரவிக்கப்பட்டது.

சென்னை ஐஐடி மில் பற்றி எறியும் சாதி தீ புத்தகம் அணைவருக்கும் வழங்கி அறிமுகவுரை யாற்றினார் முன்னாள் அணைத்திந்திய மாணவர் பெருமன்றம் மாவட்ட தலைவர் பி.ஆர்.ஹரிராஜன்.

**விருதுநகர்:** விருதுநகர் மாவட்டம் இராஜபாளையத்தில் தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க மாநில துணைத்தலைவர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, மாவட்ட செயலாளர் எஸ்.பழனிக்குமார், சிபிஐ நகர செயலாளர் வி.இரவி, இளைஞர்மன்ற வழக்கறிஞர் லி.பக்சிங் உள்பட பலர் கலந்து கொண்டனர். விருதுநகர் சத்திரப்பட்டியில் சிபிஐ மாநில குழு உறுப்பினர் வி.பாலமுருகன், நகர செயலாளர் முத்துக்குமார் உள்ளிட்டோரும், சேத்தூர் காமராஜர் நகரில் நகர செயலாளர் ஈராஜா, ஒன்றிய செயலாளர் கணேசமூர்த்தி, தவிச அய்யணன் உள்ளிட்டோரும், செட்டியார்பட்டி முகவூரில் தவிதொச மாவட்ட செயலாளர் வரதராஜன், சிபிஐ கிளை செயலாளர் அழகர் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.



**திருவள்ளூர்** : திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், ஞாயிறு கிராமத்தில் அம்பேத்கர் பிறந்த நாள் விழா நடைபெற்றது. இதில் தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்க திருவள்ளூர் மாவட்ட செயலாளர் என்.எஸ்.பிரதப் சந்திரன், கே.சதீஸ், ஜி.ஆனந்தராஜ், ப.வசந்த் உள்ளிட்டோர் அண்ணல் அம்பேத்கருக்கு மரியாதை செலுத்தினர். செங்குன்றம் சிறுகடை வியாபாரிகள் சங்கம் சார்பில் சங்க செயலாளர் ஏ.ஆதாம் தலைமையில் ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க மாவட்ட குழு உறுப்பினர் யோகமதி அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்தார். இதில் முஜிப், மாரி, குமார், அப்துல் ரகீம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**செங்கல்பட்டு:** க.பல்லாவரம் பேருந்து நிலையம் அருகில் உள்ள அம்பேத்கர் திருவுருவ சிலைக்கும், பரங்கிமலை – பல்லாவரம் கன்டோன்மென்ட் போர்டு அலுவலகம் முன்பு அமைந்துள்ள அம்பேத்கரின் திருவுருவ சிலைக்கும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி பல்லாவரம் அலந்தூர் தொகுதி குழு மற்றும் அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற தோழர்கள் மாலை அணிவித்து வீர வணக்கம் செலுத்தினர்.

இதில் தோழர்கள் ஜா.பூபாலன், கே.முனுசாமி, கே.சந்திரசேகர், கே.ரவி, என்.ராஜேந்திரன், இ.மதியழகன், எஸ்.சேகர், ஏ.ராஜேந்திரன், எஸ்.தரணி, ஜீவா நகர் கிளை செயலாளர், பி.சிங்காரவேலு, சி.ராமு, ராமசாமி, கே.காசிநாதன் மற்றும் அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற தோழர்கள் எல்.பிரவின் குமார், ஆர்.பொன்னுசாமி, பி.கார்த்தி, எஸ்.வெங்கடேசன், ஆர்.திரு மற்றும் பலர் கலந்து கொண்டு சாதி,மத வெறி எதிர்ப்பு முழக்கங்களை முழங்கினர்.

**வடசென்னை:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வியாசர்பாடியின் முதுபெரும் தோழர் ஆர்.ஞானசேகர் அம்பேத்கர் சிலைக்கு மாலை அனிவித்து மரியாதை செய்தார். பெரம்பூர் பகுதி செயலாளர் கோட்டி சுரேஷ், முன்னாள் பகுதி செயலாளர் ஏ.சுப்ரமணி மற்றும் கிளை செயலாளர்கள் சி.ஆனந்தன், என்.மூர்த்தி, ஆர்.பார்த்திப்பன், எஸ்.நாகராஜன், மற்றும் கட்சியின் முன்னணி தோழர்கள் கலந்து கொண்டனர்.

**வேலூர்:** வேலூர் மாவட்டம் பேரணாம்பட்டில் தமிழ்நாடு ஒடுக்கப் பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் சார்பில் நா.சே.தலித் பாஸ்கர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 18வது வார்டு கிளை செய லாளர் தலைமையில், வே.குமார், மாதனூர் ஒன்றிய செயலாளர் முன்னிலையில் அம்பேத்கர் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. நா.சே.பா.கோட்டிபேரரசன், பாபாஜிஆகியோர் கலந்து கொண்டனர்.

**இண்டூர்:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இண்டூர் வட்டாரக்குழு சார்பில் பழைய இண்டூரில் உள்ள அம்பேத்கர் உருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சியில் இண்டூர் வட்டார பொறுப்பாளர் சிவன் தலைமையில் மாவட்ட பொருளாளர் எம்.மாதேஸ்வரன், மாவட்ட செயற்குழு உறுப்பினர் எஸ்.சின்னசாமி, மூத்த நிர்வாகி பி.டி.அப்புனு உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு மரியாதை செய்தனர்.

மாநில விவசாய தொழிலாளர் சங்க தருமபுரி மாவட்டக்குழு சார்பில் தருமபுரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவ மணையில் அருகில் இருக்கும் அம்பேத்கார் சிலைக்கு சங்க மாவட்ட தலைவர் ஜி.மாதையன் தலைமையில், சங்க மாவட்ட செயலாளர் ஜெ. பிரதாபன் மாலை அனிவித்து மரியாதை செலுத்தினார். இதில் சங்க மாவட்ட துணை தலைவர் என்.முருகேசன், துணை செயலாளர் ஆர்.பச்சாகவுன்டர், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் வெ.பை. மாதையன், எம்.சாக்கன், மற்றும் தடங்கம் மாரியப்பன் ஆகியோர் கலந்துக் கொண்டனர்.

**அரியலூர்:** அரியலூரில், நகராட்சி ஏஐடியுசி சுகாதார தொழிலாளர்கள், நகராட்சி அலுவலகத்தில் இருந்து, சங்க தலைவரும் உள்ளாட்சி ஏஐடியுசி மாநில செயலாளருமான டி.தண்டபாணி தலைமையில் ஊர்வலமாக சென்று பேருந்து நிலையம் எதிரே உள்ள அம்பேத்கர் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். அரியலூர் நகராட்சி ரா. சுப்பிரமணியன், பானுமதி, நாகூரான், டி. அண்ணாதுரை, ஆர்.ராமதாஸ், ஆறுமுகம், மணி, ரா.தனலட்சுமி, வளர்மதி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**வேடசந்தூர்:** வேடசந்தூரில் அமைந்துள்ள அம்பேத்கர் சிலைக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் மணிகண்டன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு எம்.சந்திரசேகரன், சி.எஸ். முத்துச்சாமி, எம்.எம். பொன்னுச்சாமி முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில் குதிரை பழனிச்சாமி, ராம மூர்த்தி, எம்.பி.கனிவேல், சங்கிலி உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

**மதுரை:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் எம்.எஸ்.முருகன் தலைமையில் இரா.முருகன், ஜனசக்தி என்.ஜீவா, மணிமேகலை எக்ஸ்.எம்.சி, ஏஐஓய்எப் செயலாளர் பழனி முருகன் மற்றும் இளைஞர் பெருமன்ற தோழர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து புகழஞ்சலி செலுத்தினர்.

**அம்மாபேட்டை :** பாபநாசம் அருகே அம்மாபேட்டை நால் ரோட்டில் உள்ள அம்பேத்கரின் உருவச் சிலைக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் மாலையணிவித்து உறுதிமொழி ஏற்கப்பட்டது.

இதில் அம்மாப்பேட்டை ஒன்றியச் செயலாளர் ஆர்.செந்தில்குமார், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் ஆர்.தில்லைவனம், தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்க மாவட்டத் தலைவர் ஆர். எஸ். பாலு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டக் குழு உறுப்பினர்கள் பி.தாமரைச்செல்வி, எஸ். எம். குருமூர்த்தி, ஒன்றிய நிர்வாகிகள் கோ. பழனிச்சாமி, எஸ்.திருநாவுக்கரசு, சி.மணிகண்டன் உள்பட கலந்து கொண்டனர்.

**மதுராந்தகம்:** மதுராந்தகம் ஒன்றியம் மெய்யூர் ஊராட்சியில் அம்பேத்கர்நகரில் அமைந்துள்ள அவரது சிலைக்கு இந்திய கம்யூனிஸ்டு கட்சி சார்பில் எஐஓய்எப் மாவட்ட தலைவர் கே.வி.சேகுவேராதாஸ் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இதில் கிளை செயலாளர் செ.இன்பராஜ் மற்றும் கே.கதிர்வேல் மு.நாகராஜ் ப.மணிகண்டன், எ.நவின், விஜய் ஆகியோர் பங்கேற்றனர்.



**உயர்நீதிமன்ற வளாகம்:** சென்னை உயர்நீதி மன்ற வளாகத்திலுள்ள அம்பேத்கரின் திருவுருவச் சிலைக்கு தேசிங் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்திய வழக்கறிஞர் சங்கம் சார்பாக முன்னாள் மாநில செயலாளர் துணைவியார் பியூலா ஜான்செல்வராஜ், தேசியக்குழு உறுப்பினர்கள் கிருஷ்ணகுமார், ஆதிமூலம், ஸ்டாலின் மற்றும் வழக்கறிஞர்கள் அசோக,ராஜசேகர், குருமூர்த்தி, நடராஜன், தளபதி, கார்த்தி, விக்னேஷ், கராத்தே கௌதமன், ஏசியன் ஜெர்னலிஸ்ட் செந்தில்குமரன் இவர்களுடன் இந்திய கலாச்சார நட்புறவுக் கழக சென்னை மாவட்டப் பொதுச் செயலாளரான பா.செந்தில்குமார் ஆகியோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

# அம்பேத்கர் பிறந்தநாள் – சமத்துவ நாளாக அறிவிப்பு

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்பு



அம்பேத்கர் பிறந்தநாளான ஏப்ரல் 14ஆம் தேதி சமத்துவ நாளாகக் கொண்டாடப்படும் என்று சட்டப் பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். இதனை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழுவின் சார்பில் வரவேற் கிறோம்.

டாக்டர் அம்பேத்கர் இந்தியச் சமூகத்தில் நிலவிய ஏற்றத்தாழ்வு களை களைய அயராது சிந்தித்தவர், போராடியவர். சமூக நீதியும் சாதிகளற்ற சுரண்டலற்ற ஓர் சமத்துவ சமூகம் அவரது கனவாக இருந்தது.

மேலும் மானுட விழுமியங்கள் மிளிரும் மெய்யான ஜனநாயகத்திற்கான சிறந்த அரசியல் சாசனத்தையும் நாட்டுக்கு அளிக்க அவர் பெரும் பங்காற்றினார்.

இத்தகைய தலைவரின் பிறந்தநாளை சமத்துவ நாளாக கடைப்பிடிப்பதென்பது இன்றைய காலச் சூழலில் மிகப் பொருத்தமானதென இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

# 22 மொழிகளிலும் மக்களவையில் பதிலளிக்க உரிய நடவடிக்கை

## கே.சுப்பராயன் கேள்விக்கு நாடாளுமன்ற விவகாரத்துறை பதில்

அரசியல் அமைப்புச் சட்டத்தின் 8ஆவது அட்டவணையில் இடம்பெற்றுள்ள 22 மொழிகளிலும் மக்களவையில் கேள்வி கேட்பதற்கும் பதில் பெறுவதற்குமான நிகழ்நேர மொழிபெயர்ப்புக்கான உரிய மற்றும் போதுமான கட்டமைப்புகளை ஏற்படுத்துவது குறித்து பிரதமருக்கு 23.02.2021 அன்று தோழர் கே.சுப்பராயன் கடிதம் எழுதி இருந்தார். அக்கடிதத்திற்கு நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சகத்தின் கூடுதல் செயலர் 13.04.2022 அன்று எழுதியுள்ள பதில் கடிதத்தில் கூறியுள்ளதாவது:

அரசியல் அமைப்புச் சட்டத்தின் 8ஆவது அட்டவணையில் இடம்பெற்றுள்ள 22 மொழிகளிலும் மக்களவையில் கேள்வி கேட்பதற்கும் பதில் பெறுவதற்குமான நிகழ்நேர மொழிபெயர்ப்புக்கான கட்டமைப்புகள் உருவாக்குவது குறித்து மக்களவை செயலகத்தின் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். நிகழ்நேர மொழிபெயர்ப்பு பணியை எளிதாக மேற்கொள்ள பணியாளர்களை அதிகரிப்பது தொடர்பான கோரிக்கையும் ஏற்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துள்ளார்கள். இவ்வாறு அக்கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

>> 01ம் பக்கத் தொடர்ச்சி

பளுவை அதிகரித்து, ஊதியத்தை குறைத்து நகராட்சிகளின் இயக்குநர் வெளியிட்டுள்ள சமூக நீதிக்கு எதிரான சுற்றறிக்கை ந.க.21787/2021/ இ.ஏ.2 நாள்: 02.10.2021 ஐ ரத்து செய்ய வேண்டும்.

13. அதுவரை அரசாணை (நிலை) எண்101 நாள்: 30.04.1997 இல் கண்டுள்ள வேலை அளவை உறுதி செய்ய வேண்டும்.
14. ஓய்வு பெற்ற தொழிலாளர்களின் ஓய்வு கால பலன்கள் காலத்தே கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்.
15. புதிய ஓய்வூதிய திட்டத்தை கைவிட்டு பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்த வேண்டும்.
16. கிராம ஊராட்சிகளில் ரூ.250/ ரூ. 1000/ ரூ.3600/ ரூ.4000/ என அற்ப தொகையை மாத ஊதியமாக வழங்கும் கொடுமையான சுரண்டலுக்கு முடிவுகட்ட வேண்டும்.
17. தூய்மைப் பணியாளர்கள், தூய்மைக் காவலர்கள், மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்கள் உள்ளிட்ட அனை வரையும் முழுநேர பணியாளர்களாக அறிவித்து, காலமுறை ஊதியம் வழங்க வேண்டும்.
18. அதுவரை அரசாணை 62 இல் கண்டுள்ள குறைந்தபட்ச ஊதியம் வழங்குவதை உறுதி செய்ய வேண்டும்.
19. அந்தந்த மாத ஊதியம், அந்தந்த மாதம் 5 ஆம் தேதிக்குள் வழங்குவதை உறுதி செய்ய வேண்டும்.

இவ்வாறு முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

# சங்கே முழங்கு!





## தியாகி களப்பால் குப்புசாமிக்கு வீரவணக்கம்

"சோழவள நாடு சோறுடைத்து" என்னும் மறையாத சொல்லாடல் தோன்றும் வகையில் காவிரி படுகையை விவசாய பூமியாக மாற்றிய வேளாண் மக்களை புகழ்ந்து பாடாத புலவர்கள் இல்லை. ஆனால் புகழுக்குரிய இந்த மக்களின் வாழ்க்கை, வாழ்க்கை நிலை பெருமைப்பட தகுந்ததாக இல்லை "உழுது விதைத்துறுப்பார்க்கு உணவில்லை" என்று பதிவு செய்தான் முண்டாசுக் கவி பாரதி.

தஞ்சை மாவட்ட விவசாயிகளை, விவசாய தொழிலாளர்களை அடிமைச்சங்கிலியிலிருந்து அறுத்தெறிய அரைக்கால் சட்டையுடன் ஒரு கம்யூனிஸ்ட் கட்சியின் தூதுவனாக தஞ்சை மாவட்டத்திற்கு வந்தார் தோழர் பி.எஸ்.ஆர். அடிமைப்பட்ட மக்களை திரட்டிட செங்கொடி இயக்கத்தை உருவாக்கி நிலப்பிரபுக்களின் கொட்டத்தை அடக்குவதற்கு தலைமை ஏற்பதற்கு தளபதிகளை தேடுகிறார் தோழர் பி.எஸ்.ஆர்.

களப்பால் கிராமத்தில் அருணாசலம்_முத்தம்மாள் தம்பதியினருக்கு மூத்தமகனாக 1911 மார்சு 11ம் தேதி குப்புசாமி பிறந்தார்.

தலையாரியாக இருந்த அருணாசலத்திற்கு தமது மகனை படிக்க வைக்க ஆசை. ஆனால் பண்ணையின் அடிமைகளும், விவசாயக் கூலிகளின் குழந்தைகளுக்கும் பள்ளியில் படிக்க இடம் கிடையாது. குழந்தை பிறந்தவுடன் பண்ணையாருக்கு தெரிவிக்க வேண்டும். ஆறு வயதில் மாடு மேய்க்க வேண்டும். பத்து வயதில் சாணம் அல்ல வேண்டும். பதினைந்து வயதில் வண்டி ஓட்ட வேண்டும். இது பண்ணையார்களின் எழுதப்படாத சட்டம்.

அதனால் தனது மகன் பிறந்ததை மறைத்து முதலாளிக்கு தெரியாமல் குப்புசாமியை பள்ளியில் சேர்த்து விடுகிறார் அருணாசலம். இளம் வயதிலேயே முற்போக்கு சிந்தனை, அநீதிகளை கண்டு கொதித்து எழும் உணர்வு கொண்டவராக இருந்தார். குறிப்பாக களப்பால் கிராமத்தில் பஞ்சு ஐயர் என்ற மருத்துவர் அங்குள்ள மக்களுக்கு வைத்தியம் பார்த்து வந்தார். இவர் தலித் மக்களை தொட்டு வைத்தியம் பார்க்க மாட்டார். இதைப்பார்த்த களப்பால் குப்பு வைத்தியம் பார்ப்பது போல் சென்று அய்யரின் கையை பிடித்து இழுத்து விடுகிறார். இதுவே இவரது முதல் கலகம்.

1943 ஆம் ஆண்டில் ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தில் மன்னார்குடி தாலுகா தென்பரை கிராமத்தில் விவசாயிகள் சங்கம் அமைக்கப்பட்டு தோழர் பி.சீனிவாசராவ் செங்கொடி ஏற்றுகிறார்.

தென்பரையில் செங்கொடி ஏற்றுவதற்கு சேரன்குளம் அமிர்தலிங்கம் தோழர் பி.எஸ்.ஆர். அவர்களோடு இணைந்து களப்பால் குப்பு, சிவராமன், இரணியன், மணலி கந்தசாமி, வெங்கடேச சோழகர், ஏ.எம்.கோபு என எண்ணற்ற தோழர்கள் கிராமங்கள் தோறும் செங்கொடி இயக்கத்தை கட்டுகிறார்கள்.

**கம்யூனிஸ்ட் கட்சியின் செயல்பாடுகளில் ஈடுபாடுகொண்ட களப்பால் குப்புசாமி ஒரு கூட்டத்தை களப்பாலில் ஏற்பாடு செய்து தலைமை ஏற்கிறார். அந்த கூட்டத்தில் தோழர் பி. சீனிவாச ராவ் ஆற்றிய உரை "உனக்கும் இரண்டு கால், இரண்டு கை, அவர்களுக்கும் இரண்டு கால் இரண்டு கை உங்களை அவர்கள் அடித்தால் நீங்கள் அவர்களை திருப்பி அடியுங்கள்" என உரையாற்றுகிறார். அந்த கூட்டத்தில் விவசாய சங்கத்தின் கிளை தலைவராக களப்பால் குப்புசாமியும், கிளை காரியதரிசியாக சிங்காரமும் தேர்வு செய்யப்பட்டனர்.**


கோட்டூர் ஒன்றியத்தில் குன்னியூர் பண்ணையில் வேலை பார்த்து வந்த பண்ணை ஆட்கள் விவசாய சங்கத்தில் சேர்ந்தனர், செங்கொடியை ஏற்றினர். இதை பொறுத்துக்கொள்ள முடியாத பண்ணையார்கள் அடியாட்களை குவித்தனர். பண்ணை ஆட்களை தாக்கினர். குளத்தில் தண்ணீர் எடுக்கக்கூடாது, கடைகளில் பொருட்கள் வாங்க கூடாது, வெளியிலும் வேலைக்கு போகக்கூடாது, பண்ணையிலும் வேலை கிடையாது இப்படி கடுமையான உத்தரவுகளைப் போட்டு வேலை ஆட்களை வைத்து தாக்கினர். 1946இல் குன்னியூர் சாம்பசிவ ஐயர் பண்ணையில் போராட்டம் நடைபெற்றது. இராமநாதபுரத்தில் இருந்து ஆட்களைக் கொண்டு வந்து வேலை செய்தனர். இதனை தடுத்த போது கலவரம் ஏற்பட்டது. இதில் சாம்பசிவ ஐயரின் இரண்டு அடியாட்கள் இறந்தனர். இதனை தொடர்ந்து களப்பால் குப்புசாமி, ஆலத்தூர் ராமையன், கிரா லாத்தூர் பிச்சைக்கண்ணு ஆகிய 3 பேர் மீது பொய் வழக்கு போடப்பட்டது.

தலைமறைவாக இருந்த களப்பால் குப்புசாமியை காவல்துறையினர் கைது செய்து பல்வேறு பொய் வழக்குகளை புனைந்து 1947ல் திருச்சி சிறையில் அடைத்தனர். ஆளும் வர்க்கத்தின் துணையோடு தஞ்சாவூர் நீதிமன்றம் தூக்குத் தண்டனை விதித்தது. மாவட்டம் முழுவதும் ஆர்ப்பாட்டம் என கிளர்ச்சிகள் எழுந்தன. கம்யூனிஸ்ட் கட்சி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. தஞ்சை நீதிமன்ற தீர்ப்பான தூக்குத்தண்டனையை ரத்து செய்தது, ஆயுள் தண்டனை விதித்தது நீதிமன்றம்.

நாணலூரில் 13.04.1948 காங்கிரஸ் கூட்டம் போட்டு நீங்கள் எவ்வளவு முயற்சி செய்தாலும் குப்புசாமி தண்டனையிலிருந்து தப்ப முடியாது, தப்பித்தாலும் நாங்கள் வெளியில் விடமாட்டோம் என பேசினர்.

அது போலவே 1948 ஏப்ரல் 18ல் திருச்சி சிறையில் விஷம் கொடுத்து களப்பால் குப்புவை படுகொலை செய்தனர்.

– **அ.பாஸ்கர்** தொடர்புக்கு: 94884 88339



– ஹரீஷ் பாலா

# நல்லா இருந்த ஊரும் 40% கமிஷனும்!

**கடந்த ஏப்ரல் 12 ஆம் நாள் கர்நாடகா மாநிலத்தில் உள்ள உடுப்பி நகரில் உள்ள விடுதியில் அரசு ஒப்பந்ததாரர் சந்தோஷ். கே. படீல் தற்கொலை செய்து கொண்டார். அவருடைய தற்கொலைக்கு காரணம் கர்நாட மாநில ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத் ராஜ் அமைச்சர் ஈசுவரப்பா தான் என்று வாட்ஸ்அப் மூலம் குறுந்தகவல் வாக்குமூலத்தை ஊடகவியலாளர்களுக்கு அனுப்பி வைத்தார். கர்நாடகா மாநிலம் பரபரப்பானது.**

கடந்த ஜனவரி முதலே அரசு ஒப்பந்ததாரர்கள் சங்கம், கர்நாட பாஜக அரசின் மந்திரிகள் ஒப்பந்தப் பணிகளுக்கும் 40% கமிஷன் கேட்பதாக குற்றம் சுமத்தி வந்தனர். இறந்த சந்தோஷ் கூட கடந்த மார்ச் 28 ஆம் நாள் தான் பெலாகாவி மாவட்டத்தில் 4 கோடி ரூபாய் மதிப்பில் ஊரக சாலை பணிகள் செய்ததாகவும், அதற்கு அரசு கொடுக்க வேண்டிய பணத்தை 40% கமிஷன் தொகையை கொடுத்தால் மட்டுமே விடுவிக்க முடியும் என்று மந்திரி ஈசுவரப்பாவும் அவர் ஆட்களும் நெருக்கடி தருவதாக ஊடகங்களுக்கு பேட்டி கொடுத்தார். அதோடு மட்டும் அல்லாமல், இந்த விவகாரம் குறித்து பிரதமர் மோடி அவர்களுக்கும் கடிதம் எழுதினார்.

**அந்தக் கடிதத்தில் ஈசுவரப்பா ஒரு பொய்யர், ஊழல் பேர்வழி, பண முதலை என்றும் குற்றம் சுமத்தினார். அந்த கடிதத்தைப் படித்து பிரதமர் நடவடிக்கை எடுத்திருந்தால், பேட்டிகளைப் பார்த்து கர்நாடகா முதல்வர் பசவராஜ் பொம்மை நடவடிக்கை எடுத்திருந்தால் சந்தோஷ் மரணத்தை தடுத்திருக்கலாம். இதை தற்கொலை என்று சொல்வதைவிட அரசு இயந்திரம் ஊழலில் சிக்கிக் கொண்டதால் நிகழ்ந்த கொலை என்று தான் வருணிக்க வேண்டும்.**

இதில் குறிப்பிட்டு சொல்லவேண்டிய தகவல் என்னவென்றால் இறந்த சந்தோஷ், ஹிந்து வாகினி என்ற ஹிந்துத்வா அமைப்பின் பெலகாவி மாவட்டச் செயலாளர்.

இந்த நிகழ்வுக்கு பிறகு இதில் சம்பத்தப்பட்ட அமைச்சர் ஈசுவரப்பா பதவி விலக வேண்டும் என்று கர்நாடகா மாநிலம் முழுவதும் போராட்டங்கள் வெடித்தன. முதலில் பதவி விலக மறுத்த அவர், கடந்த வெள்ளிக்கிழமை அன்று பதவி விலகினார். அவர் பெயர் முதல் தகவல் அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது. ஆனாலும் விசாரணை நேர்மையாக நடக்குமா என்பது கேள்விக்குறியே. மாநில அரசின் காவல்துறை விசாரித்தால் நீதி கிடைப்பது கடினம் ஆகவே, ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் குழு அமைத்து நீதி விசாரணை வேண்டும் என்பதே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட எதிர்கட்சிகள் வைக்கும் கோரிக்கை.

இந்த மரணத்தின் மூலம் இன்னொரு உண்மை வெளிச்சத்துக்கு வந்துள்ளது. சந்தோஷ் முறையான உத்தரவு இல்லாமல் தாமாகவே அரசின் கவனத்துக்கு கொண்டு வராமல் பணிகளை செய்து இருக்கிறார். இது அரசுக்கோ, மந்திரிக்கோ தெரியாது. அப்படி இருக்கும் போது எப்படி கமிஷன் கேட்க முடியும் என்று பாஜகவினர் கூவி வந்தார்கள். இவர்கள் இப்படி சொன்னது இன்னொரு அதிர்ச்சியை வெளிக் கொணர்ந்து உள்ளது. அது என்னவென்றால், மாநிலத்தில் பல்வேறு துறை சார்ந்த நானூறு கோடி ரூபாய் மதிப்புள்ள ஒப்பந்தப் பணிகள் முறையான உத்தரவு இல்லாமல் வெறும் வாய்மொழி ஆணை மூலமாக நடப்பதாகவும், பணிகள் முடிந்தவுடன் கமிஷன் தொகை 'செட்டில்' செய்யப்பட்டவுடன் உத்தரவுகள் எழுத்துமூலம் அளிக்கப்பட்டு பணிகளுக்கான தொகை ஒப்பந்ததாரர்களுக்கு கொடுக்கப் படுகின்றன என்றும் கர்நாடகா மாநில அரசு ஒப்பந்ததாரர் சங்கம் தெரிவித்து உள்ளது. இதன் மூலம் வெறும் ஒரு துறையில் மட்டுமல்ல மாநில அரசின் எல்லாத் துறைகளிலும் ஊழல், லஞ்சம், கமிஷன் தலைவிரித்து ஆடுகிறது என்ற உண்மை விளங்குகிறது.

கடந்த 2018 ஆம் ஆண்டு கர்நாடகா சட்டமன்றத்துக்கு நடந்த தேர்தல் பரப்புரையில் பேசிய பிரதமர் மோடி அப்போதைய காங்கிரஸ் அரசு ஊழல் அரசு என்றும், எல்லா ஒப்பதப் பணிகளுக்கும் 10% கமிஷன் கேட்கும் அரசு என்றும் குற்றம் சுமத்தினார். அதே பிரதமர் மோடி அவர் சார்ந்துள்ள பாஜக ஆட்சியில் கர்நாடகா மாநிலத்தில் ஊழல் தலைவிரித்து ஆடும் போது, அதனால் ஒரு உயிர் பலிவாங்கப் பட்டிருக்கும் போது மௌனம் சாதித்து வருகிறார். தனக்கு வந்தால் ரத்தம் இன்னொருவருக்கு வந்தால் தக்காளி சட்னி என்ற போக்கில் தான் பிரதமர் இருக்கிறார்.

இப்படி ஊழலில் திளைத்து, நிர்வாகத்தில் மெத்தனம் காட்டும், பாஜகவின் தோல்வியை மறைக்கத் தான் வாராவாரம் தொடர்கதை போல ஹிந்து முஸ்லீம் வெறுப்பை தூண்டும் நிகழ்வுகள் வேண்டுமென்றே அரங்கேற்றம் செய்யப்படுகின்றன. ஹிஜாப், ஹலால் உணவு, கோவில்களில் இசுலாமியர் வியாபாரம் செய்யத் தடை, மதமாற்றத் தடைச் சட்டம், உடுப்பி இளைஞர் கொலை அதைத் தொடர்ந்து நடந்த கலவரம் என்று தொடர்ந்து இந்திய ஒருமைப்பாட்டை குலைக்கும் செயல்களில் பாஜக, பஜ்ரங் தளம் உள்ளிட்ட வலதுசாரி அமைப்புகளும், அரசும் ஈடுபட்டு வருகின்றன.

கர்நாட பாஜக அரசின் ஊழல், மதவாத அரசியலின் காரணமாக கர்நாடகா மாநில மக்கள் தலை குனிந்து உள்ளனர். அண்டை மாநிலமான கேரளாவில் சில்வர்லைன் ரயில், மாநில உரிமைகள், இயற்கையை சிதைக்காமல் உட்கட்டமைப்பு மேம்பாடு குறித்தும் இன்னொரு அண்டை மாநிலமான தமிழ்நாட்டில் மாநில சுயாட்சி, நீட் தேர்வு எதிர்ப்பு, இட ஒதுக்கீடு போன்றவை குறித்தும் வளர்ச்சி தொடர்பான விவாதங்கள் நடைபெறும் நிலையில், கர்நாடகாவில் மத வேறுபாடுகள் குறித்தும், ஊழல் குறித்தும் பேசிக் கொண்டிருப்பது சாமானிய கன்னடிகர்களுக்கு சலிப்பை ஏற்படுத்தியுள்ளது.



3 ஆண்டுகளுக்கு முன் காங்கிரஸ் மதச்சார்பற்ற ஜனதா கூட்டணி ஆட்சியை எம் எல் ஏ க்களை விலைக்கு வாங்கி கவிழ்த்து ஆட்சியில் அமர்ந்த பாஜக ஊழலைத் தவிர எதையும் செய்யவில்லை என்பதே பொதுவான கருத்து. இந்த ஆட்சிக் காலத்தில் நல்லா இருந்த ஊர் 40% கமிஷன் அரசால் நாசமாகி விட்டது. ஆகவே, அடுத்த ஆண்டு நடக்கவுள்ள சட்டமன்றத் தேர்தலில் பாஜகவை வீட்டுக்கு அனுப்பிவிட்டு புதிய மாற்றத்தைக் கொண்டுவர மக்கள் தயாராகி விட்டனர்.

பரந்துபட்ட ஒற்றுமை மூலம் இடதுசாரி, முற்போக்கு, ஜனநாயக கட்சிகள் ஓரணியில் திரண்டு மக்களின் மாற்றம் என்ற கனவை நனவாக்க வேண்டும். இதுவே காலத்தின் தேவையும் கூட.

தொடர்புக்கு: **96637 74858**

# பெட்ரோல், டீசல் விலை உயர்வைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு விலை உயர்வை கண்டித்தும், மத்திய பல்கலைக்கழக நுழைவுத்தேர்வை ரத்து செய்ய வலியுறுத்தியும் தமிழகம் முழுவதும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**ஒரத்தநாடு:** தஞ்சை தெற்கு மாவட்டம், ஒரத்தநாடு வட்டாட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு ஒன்றிய செயலாளர் வாசு. இளையராஜா தலைமையில் தாங்கினார். ஆர்ப்பாட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் முத்து உத்திராபதி, துணைச்செயலாளர் வீ.கல்யாணசுந்தரம், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் சீனி.முருகையன், கோ.சக்திவேல், ஒன்றிய துணைச்செயலாளர் கோசிமின், பொருளாளர் த.கிருஷ்ணன், ஒன்றிய நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தி.திருநாவுக்கரசு, அ.அய்யாக்கண்ணு, சி.ராமலிங்கம், கா.முருகையன், இரா.தர்மராஜன் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

**சீர்காழி:** மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி பழைய பேருந்து நிலையம் அருகில் நீதி சோழன், தேவகி, இந்திரா காந்தி ஆகியோர் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. வித்யா தேவி, சுரேஷ், ராமச்சந்திரன், வாசுகி, கவிதா ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட செயலாளர் அ.சீனிவாசன், ஒன்றிய செயலாளர் எம்.செல்லப்பன், வி.ச.மாவட்ட செயலாளர் பி.வீரராஜ், தொழிற்சங்க மாவட்ட செயலாளர் கே.ராமன் ஆகியோர் கண்டன உரையாற்றினர். இதில் ஏராளமானோர் பங்கேற்றனர்.

**மதுரை:** மதுரை மாவட்டம் கடச்சனேந்தல் மதுரை கிழக்கு தாலுகா இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் சி.பி.ஐ தாலுகா குழு வி.ரவிச்சந்திரன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில், சி.பி.ஐ புறநகர் மாவட்ட செயலாளர் பா.காளிதாஸ் சி.பி.ஐ மாவட்ட நிர்வாகக்குழு ஓ.சுப்புக்காளை, க.மெய்யர் சி.பி.ஐ.தாலுகா செயலாளர் பி.பூமிநாதன், திருமங்கலம் தாலுகா செயலாளர் ஜெ.ரவிவர்மா கண்டன உரையாற்றினர். இதில் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



- இரா.நல்லகண்ணு

# டாக்டர் அம்பேத்கரின் தொலைநோக்குப் பார்வை



**டாக்டர் அம்பேத்கர் அவர்கள் அடித்தட்டு மக்களின் குரலாக முழங்கி வந்தார். இந்திய சமூகத்தின் ஆணிவேரின் அடிநுனி வரை ஆய்வு செய்து உலகறியச் செய்தவர். சாதி ஒடுக்குமுறைகளை எதிர்த்தும், தலித் மக்கள், பெண்கள் போன்ற ஒடுக்கப்பட்டவர்களின் விடுதலைக்காக வாழ்நாளெல்லாம் கிளர்ச்சி நடத்திய சமூக நீதிப் போராளி, சமூக ஜனநாயகவாதி.**

1947 ஆகஸ்ட் 20இல் இந்திய அரசியல் அடிப்படை சாசனத்தை உருவாக்க எழுவர் குழுவுக்கு டாக்டர் அம்பேத்கரையே தலைவராக பாரதப் பிரதமர் நேரு நியமித்தார். இந்தியாவின் முதல் சட்டத்துறை அமைச்சரான டாக்டர் அம்பேத்கர், 1948 நவம்பர் 4இல் அரசியல் அமைப்பு சாசன மசோதாவை அரசியல் நிர்ணய சபையில் முன் மொழிந்தார். 2475 திருத்தங்கள் முன்மொழியப்பட்டு விரிவான விவாதங்கள் நடந்ததாகவும் குறிப்பிட்டிருக்கிறார்.

அரசியல் சாசனத்தின் முன் வரைவின் மீது நடந்த விவாதத்தின் இறுதித் தொகுப்புரையில் டாக்டர் அம்பேத்கர் ஆற்றிய உரை வரலாற்றுச் சிறப்புமிக்கதாகும். அவரின் இதயத் துடிப்பைக் கேட்க முடிகிறது.

இரண்டு முக்கியமானவை

1. அரசியல் சட்ட சாசன முன்வரைவுக்கு நடந்த விவாதத்தில் டாக்டர் அம்பேத்கர் அளித்த தொகுப்புரையின் சாரம்.
2. 1951 இந்து சட்ட மசோதா மீது நடந்த விவாதம், டாக்டர் அம்பேத்கரின் ராஜினாமா.

அக்கருத்துக்கள் இன்றையக் காலத்தில் நாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண எவ்வாறு பயன்படுகிறது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்கள் திருத்தங்களுக்கும் தனது கருத்துக்களை எடுத்துரைத்தார். மத்திய அரசிடம் அதிகாரக்குவியல், கூட்டாட்சி முறை, அவசர நிலை போன்ற கருத்துக்களைத் தெளிவுபடுத்தினார். அதைத் தொடர்ந்து தொகுப்புரையின் இறுதிப்பகுதிதான் அம்பேத்கரின் சொந்த கருத்தாகத் தெரிகிறது.

1953 செப்டம்பர் 2இல் அம்பேத்கர் வெளியிட்ட அறிக்கையில் இந்திய அரசியல் சட்டத்தில் அநேக குறைபாடுகள் உள்ளன என்று கூறியிருக்கிறார். அத்தோடு வேறொரு விவாதத்தில் அரசியல் சட்டத்தை நான் வெறுக்கிறேன், அது யாருக்கும் பொருந்துவதாக இல்லை என்றும் தெரிவிக்கிறார். அதனால்தான் தொகுப்புரையின் இறுதியாகக் கிளப்பியிருக்கும் கேள்விகளே கண்ணைத் திறக்க வைக்கின்றன.

1950 ஜனவரி 26இல் இந்தியா ஒரு குடியரசு நாடாக மலர்ந்து விடும். பிறகு அதனுடைய சுதந்திரம் என்னவாகும்? தன் சுதந்திரத்தை அது காப்பாற்றிக் கொள்ளுமா அல்லது மீண்டும் அதை இழந்து விடுமா? இந்தச் சிந்தனையே முதலில் என் மனதில் மிகுந்த அச்சத்தை அளிக்கிறது.

சாதி மற்றும் மத நம்பிக்கைகள் வடிவத்திலான பழைய விரோதிகளுடன், பல்வேறு மாறுபட்ட அரசியல் கொள்கைகளையுடைய அரசியல் கட்சிகளும் சேர்ந்து கொள்ளப் போகின்றன என்பதை எண்ணும்போது என் கவலை மேலும் அதிகமாகிறது. இந்தியர்கள், தங்கள் மத நம்பிக்கைகளுக்கு மேலாக நாட்டைக் கருதப் போகிறார்களா? அல்லது நாட்டைவிட மதநம்பிக்கைக்கே முக்கியத்துவம் கொடுக்கப் போகிறார்களா? இது எனக்குத் தெரியாது.

கட்சிகள், நாட்டைவிட தங்கள் மதக்கோட்பாடுகளுக்கே முக்கியத்துவம் கொடுத்தால், நமது சுதந்திரத்தை இழப்பது என்பது நிச்சயம். இந்த விளைவுக்கு எதிராக நாம் விழிப்புடன் இருக்க வேண்டும். நமது கடைசித்துளி இரத்தம் இருக்கும் வரை நமது சுதந்திரத்தைப் பாதுகாப்பதில் நாம் உறுதியாக இருக்க வேண்டும்.

ஜனநாயகம் என்பது இந்தியா அறியாத ஒரு கோட்பாடல்ல. ஒரு காலத்தில் இந்தியாவில் பல ஜனநாயகக் குடியரசுகள் இருந்தன. மன்னர் ஆட்சிகள் இருந்த இடங்களில்கூட அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாகவோ அல்லது சில வரைய றைக்கு உட்பட்டவர்களாகவே இருந்தனர். சங்கங்களின் அமர்வுகளை நடத்த இந்த நாடாளுமன்ற விதிமுறைகள் புத்தரால் செயல்படுத்தப்பட்டாலும், அந்தக் காலத்தில் நாட்டில் நடைமுறையில் இருந்த அரசியல் சட்டமன்றங்களின் விதிகளிலிருந்து இவைகள் எடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

இந்த ஜனநாயக முறையை இந்தியா இழந்தது. இரண்டாவது தடவையாக அதை இந்தியா இழந்து விடுமா? அது எனக்குத் தெரியாது.

ஜனநாயகம் நெடுங்காலமாக வழக்கத்தில் இல்லாமல் இருந்ததால், ஜனநாயகம், சர்வாதிகாரத்துக்குப் பணிந்து விடக் கூடிய அபாயம் உள்ளது. புதிதாகப் பிறந்துள்ள இந்தக் குடியரசு தனது ஜனநாயகத் தோற்றத்தை வைத்துக் கொண்டு யதார்த்த செயல்பாட்டில் ஒரு சர்வாதிகார அமைப்பாக மாறக்கூடிய வாய்ப்புகள் உள்ளன. ஜனநாயகம் பற்றி மக்களின் சிந்தனையில் தீவிர மாற்றம் ஏற்பட வேண்டும்.

இரண்டாவதாக, ஜனநாயகத்தைப் பேணிப் பாதுகாப்பதில் அக்கறை கொண்டுள்ளவர்களுக்கு ஜான் ஸ்டுவர்டுமில் விடுத்துள்ள எச்சரிக்கையை நாம் கடைப்பிடிக்க வேண்டும். அதாவது "தங்களுடைய சுதந்திரத்தை பெரிய மனிதரின் கால்களில் அர்ப்பணித்து விடக்கூடாது அல்லது ஜனநாயக அமைப்புகளை குலைப்பதற்கு அவருக்கு அதிகாரம் அளிக்கும் அளவுக்கு அவரிடம் நம்பிக்கை வைத்து விடக்கூடாது." "நாட்டுக்காக வாழ்க்கை முழுவதையும் அர்ப்பணித்த பெரிய மனிதர்களிடம் நன்றியுடன் இருப்பது எந்த விதத்திலும் தவறாகாது. ஆனால் இதற்கு ஒரு வரம்புள்ளது.

ஐரிஷ் தேச பக்தரான மேனியல் ஓ கன்னல் குறிப்பிட்டது போல் தன்னுடைய சுயமரியாதையை இழக்கும் அளவுக்கு எந்த மனிதனும் நன்றியுடையவனாக இருக்க முடியாது, தன் கற்பை இழக்கும் அளவுக்கு எந்தப் பெண்ணும் நன்றியுடையவளாக இருக்க முடியாது."

மற்ற நாடுகளைவிட இந்தியா போன்ற நாட்டிற்குத் தான் இந்த எச்சரிக்கை அவசியமாகிறது. இந்தியாவில்தான் இறைவழிபாடு என்றழைக்கப்படும் பக்தி அல்லது தனிநபர் வழிபாடு, இந்த உலகின் வேறு எந்த நாட்டின் அரசியலிலுள்ளதையும் விட பெரும் பங்கு வகிக்கிறது.

**மத சம்பிரதாயங்களில் ஆத்மாவின் விடுதலைக்கு பக்தி ஒரு மார்க்கமாக இருக்கலாம். ஆனால் அரசியலில், பக்தி அல்லது தனிநபர் வழிபாடு, சீரழிவுக்கு ஒரு நிச்சயமான பாதையாகும். அத்துடன் அது இறுதியில் சர்வாதிகாரத்துக்கே இட்டுச் செல்லும்.**

மூன்றாவது விஷயம் நாம், அரசியல் ஜனநாயகத்துடன் மனநிறைவு அடைந்து விடக்கூடாது. நமது அரசியல் ஜனநாயகத்தை ஒரு சமூக ஜனநாயகமாகவும் மாற்ற வேண்டும். சமூக ஜனநாயக அடிப்படையின்றி அரசியல் ஜனநாயகம் நீண்டு நிலைத்திருக்க முடியாது. சமூக ஜனநாயகம் என்றால் என்ன? சுதந்திரம்,



- அ.பாஸ்கர்

# தியாக வாழ்வி

**ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தின் முக்கிய நகரமான மயிலாடுதுறையில் 1918ஆம் ஆண்டு ஏப்ரல் 17ஆம் நாள். மாணிக்கம் செட்டியார் நாகரத்தினம் தம்பதியினருக்கு மூத்த மகனாக பிறந்தவர் தோழர் மா காத்தமுத்து.**



மயிலாடுதுறை நகராட்சி உயர்நிலைப்பள்ளியில் பள்ளிப் படிப்பை பெற்ற எம்.காத்தமுத்து பள்ளியில் பயிலும் காலத்திலேயே நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் ஈர்க்கப்பட்டு, போர்க்குண வேட்கையுடன் காங்கிரஸ் இயக்கத்தில் உறுப்பினராக இணைந்து செயல்படத் தொடங்கினார்.

நாகபட்டினத்தில் ரயில்வே தொழிலாளியாக சேர்ந்து பணிபுரிய தொடங்கினார். இங்கு ரயில்வே தொழிலாளர்களை அணிதிரட்டி, தொழிற்சங்க இயக்கத்தில் முனைப்போடு செயல்பட்டார். இதன் மூலம் சமூகம் குறித்த புதிய பார்வை பெற்று, தொழிலாளி வர்த்தத்தின் ஆற்றலை ஒருங்கிணைப்பதில் தீவிரமாக செயப்பட்டு வந்தார்.


1947இல் நாடு விடுதலை பெறும் சூழலில், தாய்நாடு பிளவுபட்டது. ஆங்கில அரசு பாக்கிஸ்தான் – இந்தியா என இரு நாடுகளாக்கியது.

இதன் காரணமாக இந்து முஸ்லிம் மோதல்கள் வெடித்தன. நாட்டின் எல்லைப் பகுதி முழுவதும் மனித இரத்தம் கொட்டித் தீர்க்கப்பட்டது. மண்ணில் விழுந்த ரத்தம் மத பேதங்களை நிராகரித்து ஒன்று கலந்தன.

இப் பகுதிகளை இணைத்து வந்த ரயில் போக்குவரத்து முற்றிலுமாக துண்டிக்கப்பட்டது. இதனால் படுகொலையில் உயிரிழப்புகள் அதிகரித்து வந்தன.

இந்தக் கலவரப் பகுதிகளில் இருந்த இந்துக்களும் முஸ்லிம்களும் தங்களின் உயிருக்கு பயந்து ரயிலை ஓட்ட மறுத்தனர் அந்த சமயத்தில் இந்திய பிரதமர் ஜவகர்லால் நேரு ரயில்வே தொழிலாளர்களுக்கு.

இந்த ஆபத்தான நிலையில் தாய் நாட்டிற்கு சேவை செய்ய தேசபக்தி மிக்க கடமையாற்றும் ரயில்வே தொழிலாளர்கள் முன் வர வேண்ரும் என உருக்கமான வேண்டுகோள் விடுத்தார்.



நேருவின் வேண்டுகோளை ஏற்று தமிழ்நாட்டில் இருந்து ரயில்வே தொழிலானீர்கள் ரயிலை ஓட்ட பஞ்சப் செல்கிறார்கள்.

பஞ்சாப் பகுதியில் ஐந்து மாத காலம் ரயில் வண்டிகளை ஓட்டி லட்சக்கணக்கான இந்துக்களையும், முஸ்லீம்களையும், கொலைவெறியர்களிடமிருந்து பாதுகாத்து அவரவர் விரும்பிய பகுதிகளில் கொண்டு சேர்த்த பெருமை தென்னிந்திய ரயில்வே

**தொழிலாளி வர்க்கம் மூலதனத்தை பொதுவுடமையாக மாற்றிக் கொள்வதன் மூலமே தங்களை விடுவித்துக் கொள்வதோடு, சுரண்டப்படுகின்ற அனைத்து மக்களையும் விடுவிக்க முடியும்.**
**– எங்கெல்ஸ்**



சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவைகளை வாழ்க்கையின் கோட்பாடுகளாக அங்கீகரிக்கும் ஒரு வாழ்க்கை முறை அது.

இந்த மூன்றும் ஒன்றாக இணைந்துள்ளன. அதாவது ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிப்பது ஜனநாயகத்தின் அடிப்படையையே தகர்ப்பதாகும்.

சமத்துவம் இல்லாத சுதந்திரம் சிலரின் மீது பெரும்பான்மையினரின் ஆதிக்கத்தைத் தோற்றுவிக்கும். சுதந்திரமில்லாத சமத்துவம் தனிப்பட்டவரின் முன்முயற்சியை அழித்துவிடும். சகோதரத்துவம் இல்லாத சுதந்திரமும் சமத்துவமும் செயல்களின் இயற்கையான போக்காக இருக்கமுடியும். அதைச் செயல்படுத்த ஒரு காவல் அதிகாரி தேவைப்படுவார்.

இந்திய சமுதாயத்தில் இரண்டு விஷயங்கள் இல்லாதிருக்கும் உண்மையை ஏற்றுக் கொள்வதிலிருந்து நாம் ஆரம்பிக்கவேண்டும். அதில் ஒன்றுதான் சமத்துவம், சமுதாய நிலையில் சமத்துவமற்ற, தரவாரியான கோட்பாட்டை கொண்ட ஒரு சமுதாயமே இந்தியாவில் உள்ளது. சிலருக்கு உயர்ந்த அந்தஸ்தும் பலருக்குத் தாழ்ந்த நிலையுமே அதன் பொருள். பொருளாதார நிலையில் சிலருக்கு அளவிடற்கரிய செல்வமும் நிலையும் கொண்டது நமது சமுதாயம்.

1950ஆம் ஆண்டு 26 ஜனவரியன்று ஒரு முரண்பாடான வாழ்க்கை முறையில் நுழையப் போகிறோம். அரசியலில் சமத்துவம், சமூக மற்றும் பொருளாதார வாழ்க்கையில் சமத்துவமற்ற நிலையிலும் இருப்போம். அரசியலில் ஒருவனுக்கு ஒரு வாக்கு என்ற கோட்பாட்டை அங்கீகரிப்போம். ஒரு வாக்கு ஒரேவித மதிப்பு என்று இருக்கும்.

நமது சமுதாய மற்றும் பொருளாதார வாழ்க்கையில் நமது பொருளாதார சமூக கட்டமைப்பின் காரணமாக எல்லோரும் ஓர் விலை, ஓர் நிறை என்ற கோட்பாட்டை தொடர்ந்து மறுத்து வருவோம். எவ்வளவு காலம் இந்த முரண்பாடான வாழ்க்கையைத் தொடர்வோம்?

நமது சமுதாய மற்றும் பொருளாதார வாழ்வில் சமத்துவத்தை எவ்வளவு காலம் மறுக்கப் போகிறோம்? நீண்டகாலம் அதைத் தொடர்ந்து மறுத்தால், நமது அரசியல் ஜனநாயகத்துக்கு ஆபத்தை விளைவிப்பதிலிருந்து தப்ப முடியாது, நாம் விரைவில் இந்த முரண்பாடுகளை நீக்கவேண்டும்.

மக்களுடைய ஆட்சி, மக்களுக்கான ஆட்சி, மக்களால் நடைபெறும் ஆட்சி என்ற கோட்பாட்டை புனிதமாக வைத்திருக்கும் நாம் அரசியல் சாசனத்தைப் பாதுகாக்க விரும்பினால், நமது பாதையில் நிரம்பிக் கிடக்கும் தீய சக்திகளை இனம் காண்பதில் துடிப்புடன் இருப்போம் என்று நாம் உறுதி எடுத்துக் கொள்வோம்.

57 ஆண்டுகள் கடந்து விட்டன. டாக்டர் அம்பேத்கரின் எச்சரிக்கை இக்காலத்திலும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டியதாகவுள்ளன.

டாக்டர் அம்பேத்கரின் தொகுப்புரையில் சாதி ஒழிப்பும் சமத்துவமும், சகோதரத்துவமும் வலியுறுத்தப்பட்டுள்ளது. தீண்டாமை ஒழிப்புச் சட்டமும், வன்கொடுமைத் தடுப்பு சட்டமும் உள்ளன. ஆனால் 21வது நூற்றாண்டில் அறிவியலும், தொழில் நுட்பமும் வளர்ந்துள்ளன. இருப்பினும் சாதிய அடக்குமுறைகள் நீடிக்கின்றன.

மகாராஷ்டிரம், கர்நாடகம், அரியானா, பீகார் ஆகிய மாநிலங்களில் அடக்குமுறைகள் நீடிக்கின்றன. தமிழ்நாட்டில் வெண்மணி, ஊஞ்சனை, விழுப்புரம், கொடியங்குளம் நிகழ்ச்சிகள் நினைவாக உள்ளன.

இந்தியாவிலும், தலித்துக்களுக்குள்ள இட ஒதுக்கீட்டில் வசதியுள்ளவர்களுக்கு வாய்ப்பு வழங்கக்கூடாது என்று உச்சநீதிமன்ற நீதிபதிகளின் கருத்தாக வெளியிடப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

இப்பின்னணியில் டாக்டர் அம்பேத்கரின் தொகுப்புரையை நாம் உணர்ந்து அறிய வேண்டியுள்ளது.

1948 அக்டோபரில் இந்து சட்டத்திருத்த முன்வரைவினை பிரதமர் நேருவின் ஒப்புதலோடு டாக்டர் அம்பேத்கர் அரசியல் நிர்ணய சபையில் சமர்ப்பித்தார்.

எதிர்பாராத இடத்திலிருந்தெல்லாம் கடுமையான எதிர்ப்பு கிளம்பியது. துணைப் பிரதமர் வல்லபாய்படேல், இராஜேந்திர பிரசாத் போன்ற காங்கிரஸ் பெருந்தலைவர்களெல்லாம் எதிர்க்கத் துவங்கினார்கள் இந்து மகாசபைத் தலைவர் சியாம் பிரசாத் முகர்ஜி சட்டத்தை முழுமையாக எதிர்த்து வாதாடினார். திருமணம், விவாகரத்து, வாரிசு உரிமை, பெண்களுக்கு சொத்துரிமை ஆகியவை அடங்கிய திருத்த மசோதாவாகும்.

பெரிய பொறுப்பிலுள்ளவர்களெல்லாம் சட்டத்தை எதிர்ப்பதைக் கண்டு பிரதமர் நேருவும் திகைத்தார். தனித்தனியாக எடுக்கலாம் என்று சொல்லிப் பார்த்தார். முடியவில்லை. சமரச முயற்சியில் ஈடுபட்டார்.

சட்டத்துறை அமைச்சர் டாக்டர் அம்பேத்கர் விரிவான விளக்கங்களைக் கொடுத்தார். இது சமூக வரலாற்று முக்கியமானதாகும்.

“இந்தச் சட்டமுன் வடிவைப் புரட்சிகரமான நடவடிக்கை எனக்கூற முடியாது. மேலும் இது அடிப்படையையே மாற்றியமைக்கிற கோட்பாடு என்றும் சொல்லமுடியாது. திருமண உரிமைகள், நீதிமன்ற திருமண ரத்து, தத்து எடுத்தல், வாரிசு நிலை போன்றவற்றில் தலைகீழ் மாற்றங்கள் கொண்டுவரப்படவில்லை, திருமணச் சட்டத்தைப் பொறுத்தவரை எந்த வகையான திணிப்பும் இல்லை.”

பழமையைப் பாதுகாக்க விரும்புபவர்கள் பழுது பார்க்கவும் தயாராக இருக்கவேண்டும் என்று அறிஞர் பர்க் சொல்லியிருக்கிறார்.

நான் இந்த அவையில் கூற விரும்புவது இந்து அமைப்பு, இந்து கலாச்சாரம், இந்து சமுதாயம் ஆகியவற்றைப் பாதுகாக்க விரும்புவீர்களானால் பழுதுபார்க்க வேண்டிய அவசியம் இருந்தால் ஒருபோதும் தயங்காதீர்கள், இந்தச் சட்டமுன் வடிவு சீர்குலைந்து போயிருக்கும் இந்து அமைப்பை பழுது பார்க்கவே கொண்டு வரப்பட்டது என்று வாதாடினார், சொல்லப்போனால் மன்றாடியதாகவே தோன்றுகிறது.

பெண்களுக்கு உரிமை கொடுப்பதை எதிர்ப்பவர்களின் பிடிவாதம் தளரவில்லை. திருத்தச் சட்டத்தை பெண் பிரதிநிதிகள் முழுமையாக ஆதரித்தார்கள். எதிர்த்தவர்கள் மொத்த உறுப்பினர்களில் 20 பேராக இருந்தாலும் செல்வாக்குமிக்க பெரும் தலைவர்களாக இருந்ததால், 1951 செப்டம்பர் மாதத்துக்கு தள்ளி வைக்கப்பட்டது.

சட்டத்துறை அமைச்சர் டாக்டர் அம்பேத்கர் 1951 செப்டம்பர் 27இல் அமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார். வெளியில் பதவி விலகிய காரணங்களை விளக்கமான அறிக்கையாக வெளியிட்டார். அந்த அறிக்கை பிற்போக்காளர்களான சமூக சனாதனிகளுக்கு விடப்பட்ட சவாலாக அமைந்தது. “அரசியல் தீவிரவாதிகள் சமூகப் பிற்போக்காளர்களாக இருக்கிறார்கள்” என்று சாடியிருக்கிறார்.

**டாக்டர் அம்பேத்கர் தலித் மக்கள் விடுதலைக்காகத் தொடர்ந்து போராடி வந்தார். சமூகத்தின் அடித்தளமாக இருந்தாலும் ஒடுக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள். அதைப்போல் மனித குலத்தில் பாதிப்பேர் பெண்கள். ஆனால் அவர்களும் மனித உரிமை பறிக்கப்பட்டவர்களாகவே இருக்கிறார்கள். அவர்களின் உரிமைக்காக இந்திய அரசின் சட்டத்துறை அமைச்சர் பதவியைத் துச்சமெனத் துறந்தார்.**

அவரின் அர்ப்பணிப்பு வீண்போகவில்லை. சமுதாயக் கடலில் நீரோட்டம் பேரலையாகக் கிளம்பி விட்டது.

1955 – இந்து திருமணச் சட்டம்

1956 – இந்து வாரிசுச் சட்டம்

1956 – இந்து தத்தெடுக்கும் சட்டம் ஜீவனாம்சச் சட்டம்

1956 – இந்து சிறுபான்மையினர் சட்டம்

ஆகிய நான்கு சட்டங்களும் நிறைவேற்றப்பட்டன. 1951 பிற்போக்காளர்களின் எதிர்ப்பால் பின்னடைவான இந்து திருத்தச் சட்டத்தின் பெண்களுக்குச் சொத்துரிமைச் சட்டம் 2005இல் நிறைவேற்றப்பட்டு சட்டமாக்கப்பட்டுள்ளது. நடைமுறைப்படுத்துவதில் எவ்வளவோ சிக்கலை எதிர் கொள்ள வேண்டியிருக்கும். பெண்களின் உரிமை, இந்திய ஜனநாயகக் கட்டமைப்பில் தடுக்கப்பட்டிருந்தது வரலாற்றுச் சான்றாகும்.

இதே நிலை இப்போதும் நீடிக்கிறது சட்டமன்ற, நாடாளுமன்ற அமைப்புகளில் பெண்களுக்கு 3இல் ஒரு பங்கு 33 சதவீதம் ஒதுக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை சட்ட முன் வடிவாக வெளிவந்தாலும் ஆணாதிக்கத்தால் அலைக்கழிக்கப்படுகிறது. இந்திய ஜனநாயகத்தில் இன்னும் இதற்கு எத்தனை ஆண்டுகளாகுமோ?

படிப்படியான சமத்துவமின்மை

“இந்து சமூக அமைப்பு சமத்துவமின்மையை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருந்தால் நீண்ட காலத்திற்கு முன்பே அது தூக்கி யெறியப்பட்டிருக்கும். ஆனால் அது படிப்படியான சமத்துவமின்மையை கொண்டிருப்பதால், சூத்திரங்கள், பிரமாணங்களைக் கீழே தள்ள விரும்பினாலும், தீண்டப்படாதவர்கள் தங்களுடைய நிலைக்கு உயர்ந்து வந்துவிடுவதை அவர்கள் விரும்புவதில்லை. அவர்கள் தீண்டப்படாதவர்களுடன் சேர்ந்த சமூகத் துறையில் மேல்படி களையெல்லாம் ஒரே மாதிரியாகக் கீழிறங்குவதைவிடத் தங்கள் மீது பிராமணர்கள் சுமத்துகின்ற அவமதிப்புகளைத் தாங்கிக் கொள்வதையே விரும்புகிறார்கள்.

இந்திய சமுதாயத்தில் சாதி ஒழிப்பு என்பது தனிமைப்பட்டிருக்கும் தனிப் பிரச்சினையாகவுள்ளது; ஒருவருக்கொருவர் துணை நின்று முன்னேறுவதைத் தடுக்கிறது என்று டாக்டர் அம்பேத்கர் ஆய்வு செய்து தீர்மானமாகத் தெரிவிக்கிறார்.

21வது நூற்றாண்டில் உலக ஆதிக்கப் போட்டியில் நாடு எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு, சமாளித்து முன்னேற வேண்டுமானால், இந்திய மக்கள் அனைவரின் உழைக்கும் திறனும் சக்தியும் பயன்படுத்தப்பட வேண்டும். கோடிக்கணக்கான உழைக்கும் மக்கள் சாதியின் பேரால் புறக்கணிக்கப்பட்டு ஒதுக்கப்படுவது தடுக்கப்பட வேண்டும்.

தீண்டாமையும், சாதிக் கொடுமையும் இன்னும் நீடிப்பதை அனுமதிக்கக் கூடாது. இது ஒரு சமூகத்தின் தனிப்பிரச்சினையாகக் கருதப்படக்கூடாது. அனைவரும் சேர்ந்து பாடுபடவேண்டும். அரசியல் சாசனத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ள சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் மூன்றும் உயிர்ப்புள்ள கொள்கைகளாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

– தலித் மக்களின் வாழ்வுரிமை என்ற நூலிலிருந்து...

# ன் மனித சாட்சி!

தொழிலாளர்களுக்கு உண்டு. இத்தகைய உருக்கு போன்ற மன உறுதி படைத்த தொழிற்சங்க இயக்கத்தின் முன்னணி தலைவராக செயல்பட்ட எம். காத்தமுத்து தனது பொது வாழ்வுப் பயணத்திற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியை தேர்வு செய்தார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தஞ்சை மாவட்ட முதல் மாநாடு 1947 டிசம்பர் 29, 30 தேதிகளில் கும்பகோணத்தில் நடைபெற்றது. மாவட்டம் முழுவதும் இருந்து இயக்கத்தின் போர் வீரர்களாக 400 தோழர்கள் கலந்து கொண்டனர்.

மணலி சி.கந்தசாமி மாவட்ட செயலாளராக தேர்வு செய்யப்பட்டார். எம்.காத்தமுத்து, கே.பி.நடராஜன், பாங்கல் சுவாமிநாதன், களப்பால் குப்புசாமி, விட்டுகட்டி வடிவேல் ஏ.வி.ராமசாமி, கே.ஆர். ஞானசம்பந்தம் திருத்தங்கூர் ராஜகோபால் உள்ளிட்டோர் நிர்வாக குழு உறுப்பினர்களாக தேர்வு செய்யப்பட்டனர்.

பி.சீனிவாசராவோடு 12 ஆண்டுகள் இணைந்து பணியாற்றி பல்வேறு அனுபவங்களை கற்றுணர்ந்துவர்.

**தஞ்சை மாவட்டத்தில் செங்கொடி இயக்கத்தை கட்டுவதற்கும்.. பண்ணை நிலப்பிரபுக்களின் அடிமையாய் வாழ்ந்த “ பண்ணையாட்களை” “அடித்தால் திருப்பி அடி “ என தைரியம் தந்து, பண்ணையாட்களின் அடிமை விலங்கை உடைத்தெறியும் பணியில் ஈடுபடத் தொடங்கினார்.**

ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தில் 17 ஆண்டுகள் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளராக பணியாற்றியவர். எளிமை, நேர்மை என்ற இலக்கணத்திற்கும், தியாக வாழ்வின் மனித சாட்சியாகவும் வாழ்ந்து காட்டியவர். வர்க்கப் போராட்ட வழியில் களம் பல கண்டு வெற்றி கண்ட தீரர்.

இந்திய விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் அகில இந்திய தலைவர், பொருளாளர், தமிழ்நாடு மாநிலச் செயலாளர் என வர்க்க அமைப்பிலும் வரலாறு படைத்தவர்.

நாகபட்டினம் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் பொறுப்பில் ஆறாண்டுகள் பணியாற்றி, காவிரி நதிநீர் உரிமைப் போராட்டத்திற்கு அடித்தளமிட்டவர், விவசாயிகள், விவசாயத் தொழிலாளர் பிரச்சினைகளை பேசும் “உழவு செல்வம்“ பத்திரிக்கையின் ஆசிரியராக செயல்பட்டவர்.

சொகுசு வாழ்க்கையை ஒரு போதும் விரும்பாத மனிதர், நான்கு முழ வேட்டி ,ஜிப்பா அவரின் எளிய உடை, கையில் ஒரு சிறிய பை அதில் கட்சியின் ஆவணங்களும் குறிப்புகளும் அதோடு மாற்று துணி ஒரு வேட்டி, ஜிப்பா கூடவே செல்லும்.


ஒன்று பட்ட தஞ்சை மாவட்டத்தில் அவர் கால் பதியாத தெருக்கள் எதும் இல்லை. கிராம கூட்டம், கிளைக் கூட்டம் என அனைத்து கூட்டங்களிலும் கலந்துகொண்டு அரசியல் கருத்துக்களை முன்வைத்து, பாமரர்களும், பகுத்தறிவு பெறும் வகையில் சிறப்பாக பேசுவார்.

கம்யூனிஸ்ட் இயக்கத்தின் வர்க்கப் போராளியாக கடைசிவரை திகழ்ந்தார். 73 ஆண்டுகள் வாழ்ந்த அவர் 56 ஆண்டுகள் தமக்கென வாழாமல் பொதுவாழ்வில் முன்னுதாரணமாக வாழ்ந்து பொதுவாழ்க்கைக்கு பெருமை சேர்த்தவர்.

தமது குடும்பத்திற்கு என எதனையும் செய்து கொள்ளாதவர். அவர் வாழ்நாளில் அவருக்கு பலரும் அளித்த கௌரவ “பட்டம் பிழைக்கத் தெரியாத மனிதர்”என்பதே. ஆம் சிறந்த கம்யூனிஸ்ட்களுக்கு கிடைப்பது அந்த பட்டமே

எம்.காத்தமுத்து அவர்களின் சொந்த வாழ்க்கையில் ஏற்பட்ட அனுபவங்களும், அவர் அனுபவித்த இன்னல்களும், அரசியல் வாழ்வில் அவர் கையாண்ட வழிமுறைகளை நாம் கற்றுக் கொள்வது அவசியமாகும்.

தொடர்புக்கு: **94884 88339**



**வர்க்கங்கள் இருப்பது என்பது உற்பத்தி வளர்ச்சியின் குறிப்பிட்ட வரலாற்று கட்டங்களோடு இணைக்கப்பட்டிருக்கிறது என்பதாகும். வர்க்கப் போராட்டத்தின் நோக்கம் வர்க்க பேதமற்ற சமுதாயத்தை ஏற்படுத்துவது ஆகும். – மார்க்ஸ்**

## இந்திய நாட்டையும், மக்களையும் காப்பாற்ற

# 2022 மே தினச் சூளுரை ஏற்போம்!

## ஏஐடியூசி, சிஐடியூ கூட்டறிக்கை

**தமிழ்நாடு ஏஐடியூசி பொதுச் செயலாளர் டி.எம். மூர்த்தி, சிஐடியு தமிழ் மாநிலக்குழு செயலாளர் ஜி.சுகுமாரன் ஆகியோர் விடுக்கும் மேதினச் சூளுரை வருமாறு:**

உயிர் பறித்த கொரோனா பெருந்தொற்று உச்சத்தில் இருந்த நிலையிலும், சென்ற இரண்டு மே தினங்களில், வீடுகளிலும் தொழிற்சாலைகள் மற்றும் அலுவலக வாசல்களிலும் செங்கொடி ஏற்றி தியாகிகளுக்கு வீர வணக்கம் செய்ய நாம் தவறவில்லை. பல லட்சக்கணக்கான மக்களின் உயிர்களை பெருந்தொற்றுப் பலிகொண்டது. தொழிற்சங்க இயக்கத்தில் தனது வாழ்வையே அர்ப்பணித்து தொண்டாற்றிய தலைவர்கள், செயல்வீரர்கள் பலர், இந்திய அளவிலும் தமிழ்நாட்டிலும் இந்தக் கொடிய கிருமி தாக்குதலால் நம்மை விட்டு மறைந்தனர். அவர்களுக்கு இந்த மே தினத்தில் அஞ்சலி செலுத்தி வீரவணக்கம் செய்கிறோம்.

கொரானாவை விட கொடியதாக ஒன்றிய அரசு இருக்கிறது. பொதுமுடக்கத்தை அறிவித்த பின்பு தொழிலாளர்களுக்கு முழு சம்பளம் வேண்டும் என உத்தரவு போட்டது. முதலாளிகள் இதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மனு செய்தவுடனேயே, உத்தரவைத் திரும்பப் பெற்றுக்கொள்வதாக ஒன்றிய அரசு அறிவித்தது. நீதிமன்றத்தில் எதிர் வழக்காடவே இல்லை. தொழிலாளிக்கு 50 நாட்களுக்கு மட்டும் சம்பளம் கொடுக்க முதலாளிகள் முடிந்தால் முயற்சிக்கலாம் என்றும், கொடுக்காத முதலாளிகள் மீது அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்கக் கூடாது என்றும் உச்சநீதிமன்றம் ஒரு மோசமான தீர்ப்பை வழங்கியது.

பல கோடிக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்த சிறு, குறு, நடுத்தர தொழில்களில் மூன்றில் ஒரு பங்கு செத்துப் போய்விட்டன. மீதம் இருப்பவையும் கூட பெயருக்கு ஓட்டப்படுகின்றன; பழைய உற்பத்தி நிலைக்குச் செல்ல முடியவில்லை. ஒன்றிய அரசு இந்தத் தொழில்களை மீண்டும் செயலூக்கப்படுத்த உருப்படியான திட்டம் எதையும் கொண்டு வரவில்லை.

ஆறு கோடிக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை இழந்து விட்டார்கள். கடந்த 50 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு வேலையின்மை அதிகரித்துவிட்டது. 75% வீடுகளின் மாத வருவாய் ரூபாய் 5,000 என்ற அளவிலேயே இருப்பதாக ஆய்வு கூறுகிறது. உலகில் மகிழ்ச்சியற்ற நாடுகளின் பட்டியல் அண்மையில் வெளியிடப்பட்ட போது, மகிழ்ச்சியற்ற சோக நிலையில் மக்கள் வாழும் 10 மோசமான நாடுகளில் ஒன்றாக இந்தியா உள்ளது. சென்ற ஆண்டில் உலகிலேயே கடும் பட்டினி கிடக்கும் 15 நாடுகளில் ஒன்றாக இந்தியா இருப்பதை உலக பட்டினி குறியீடு ஆய்வு வெளிப்படுத்தியது.

விவசாயிகளும், சாதாரண மக்களும் கடன் வலையில் சிக்கி மாய்வது மட்டுமல்ல, நமது நாடே அப்படித்தான் இருக்கிறது. விடுதலை அடைந்த பின் 67 ஆண்டு காலத்தில் இந்தியா வாங்கிய கடன் 55,87,449 கோடி. 'வளர்ச்சி நாயகன்' மோடி ஆட்சி செலுத்தும் இந்த ஏழு ஆண்டுகளில் மட்டும் 24,12,077 கோடி சேர்ந்து மொத்தம் 79,99,526 கோடி ஆகியுள்ளது. பிறந்த குழந்தை மீது கூட 62,000 ரூபாய் கடன் உள்ளது.

இவ்வளவு கடும் நெருக்கடிக்கு நாடும் மக்களும் ஆட்பட்டுள்ள நேரத்தில், இந்திய முதலாளிகளின் வருமானம் முன்னெப்போதுமில்லாத வேகத்தில் அதிகரித்துள்ளது. முகேஷ் அம்பானியின் சொத்து 124 சதவிகிதமும், கவுதம் அதானியின் சொத்து 480 சதவிகிதமும் உயர்ந்துள்ளன. இந்தியாவில் அதிக வருமானம் வருகிற ஒரு கோடிப் பேர் இந்தியாவின் மொத்த செல்வத்தில் 73%க்கு உரிமையாளர்களாக இருக்கிறார்கள்.

இது ஒன்றும் எதேச்சையாக நிகழ்ந்தது அல்ல. புதிய செல்வத்தை உற்பத்தியோ, சேவையோ நடைபெற வேண்டும் அதற்கு மூலதனம், உழைப்பு ஆகிய இரண்டும் இன்றியமையாதவை. மூலதனத்தை பெருமுதலாளிகளுக்கு மோடியின் அரசு கிட்டத்தட்ட இலவசமாகவே தருகிறது. அதானிக்கு பொதுத்துறையில் கட்டப்பட்ட விமான நிலையத்தை 12 ஆயிரத்து 770 கோடி ரூபாய்க்கு ஒன்றிய அரசு விற்றது. அவ்வளவு பெரும் தொகையை அதானி பொதுத்துறை வங்கியிடம் இருந்து கடனாக வாங்கி கட்டினார். ஓராண்டில் அந்த வங்கிக்கடனை மோடி அரசு தள்ளுபடி செய்து விட்டது. அதாவது இலவசமாக விமான நிலையம் அவருக்கு தரப்பட்டுவிட்டது. ஏர் இந்தியாவுக்கு 50 ஆயிரம் கோடி ரூபாய் கொடுத்து விமானங்கள் வாங்கினார்கள். அவற்றையும் சேர்த்து 144 விமானங்களை டாடாவிடம் வெறும் 18 ஆயிரம் கோடிக்கு விற்று விட்டார்கள். பிஎஸ்என்எல் எனும் பொதுத்துறை உருவாக்கி வைத்துள்ள ஆயிரக்கணக்கான டெலிகாம் கோபுரங்களை அம்பானியின் ரிலையன்ஸ் கட்டணமே தராமல் பயன்படுத்திக்கொள்கிறது. ஆனால் இன்னும் 4ஜி வழங்கப்படாமல் பிஎஸ்என்எல் கொல்லப்படுகிறது.

“பணமாக்கும் திட்டம்“ என்ற பெயரில் பொதுத் துறை நிறுவனங்கள், கார்ப்பரேட் பெரு முதலாளிகளுக்குத் தரப்படுகின்றன. 26,700 கிலோ மீட்டர் நெடுஞ்சாலைகள், 28,698 கிலோ மீட்டர் நீளமுள்ள மின் கோபுரங்கள் மற்றும் கம்பி வழித்தடங்கள், 8154 கிலோ மீட்டர் நீளமுள்ள இயற்கை எரிவாயு குழாய்கள், 3,930 கிலோ மீட்டர் நீளமுள்ள பெட்ரோலிய எண்ணெய் குழாய்கள், 2,10,00,000 மெட்ரிக் டன் பொருட்களை வைக்கக் கூடிய மத்திய கிடங்குகள், 400 ரயில் நிலையங்கள், 90 பயணி ரயில்கள், 265 ரயில்வே குட்ஷெட், கொங்கன் ரயில்வே முழுமையாக, 2,86,000கிலோ மீட்டர் நீளமுள்ள ஃபைபர்களோடு, 14,917 டெலிகாம் கோபுரங்கள், 25 விமான நிலையங்கள், 31 பெரிய துறைமுகங்கள், 2 பெரிய விளையாட்டு அரங்குகள் எல்லாமும் தனியாரிடம் தரைமட்ட விலைக்கு விற்கப்படுகின்றன. அல்லது எந்தப் பணமும் இல்லாமல் 50 முதல் 99 ஆண்டுகள் வரை தரப்படுகின்றன. கோடிக்கணக்கான ரூபாய்களை வருமானமாக ஈட்டித் தருகிற பொதுத்துறை நிறுவனமான எல்ஐசி–ஐ கூட தனியாருக்கு விற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

கிட்டத்தட்ட மூலதனமே போடாமல் பல்லாயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள பொதுத்துறை நிறுவனங்கள் தனியாரிடம் தரப்பட்டாயிற்று. அவற்றை இயக்கும் போது தொழிலாளர்களுக்கு ஊதியம் மற்றும் வேலை பாதுகாப்பைத் தர வேண்டிய சட்டபூர்வ கடமையிலிருந்து முதலாளிகளை விடுவிக்க, 44 தொழிலாளர் சட்டங்களை 4 சட்டத் தொகுப்புகளாக மோடி அரசு சுருக்கி இருக்கிறது. இனிமேல் நிரந்தரத் தொழிலாளர்களாக யாருமே இருக்க முடியாத நிலை உருவாக்கப்பட்டுள்ளது. முதலாளி நினைத்த ஒருவரை வேலைக்கு வைக்கலாம், அவரை அடிமையாக நடத்தலாம், ஊதியம் உரிமை என்று பேசினால் வேலையை விட்டு உடனடியாக நீக்கி விடலாம் என முதலாளிகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. தொழிற்சங்கம் வைக்கவே இயலாத அளவுக்கு விதிகள் கடுமையாக்கப்படுகின்றன. தொழிலாளர்கள் விரும்பும் தலைவரைத் தேர்ந்தெடுக்க விடாமல் தடுக்கவும் சட்டத்தால் முடியும்.

4,000 கோடி ரூபாய்க்கு மேல் நிதி இருப்பு வைக்கப்பட்டுள்ள கட்டுமான நல வாரியம் மற்றும் உடலுழைப்பு தொழிலாளர் நல வாரியங்களை ஒன்றிய அரசு புரட்டிப் போடுகிறது. இதுவரை மாநில அரசு அதிகார எல்லைக்குள் இருந்த நல வரி வசூல் அதிகாரமும், நிதிப் பலன் வழங்கிய திட்டங்களும் ஒன்றிய அரசால் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

கடந்த 10 ஆண்டு ஆட்சிக் காலத்தில் அஇஅதிமுக அரசு எந்த முத்தரப்பு கூட்டத்தையும் நடத்தவில்லை. தொழிலாளர் துறை மீது எந்த கண்காணிப்பும் இல்லாத நிலை இருந்தது. புதிய அரசு பொறுப்பேற்றவுடன் இது மாறும் என தொழிலாளர்கள் பெரும் எதிர்பார்ப்போடு இருந்தனர். ஆனாலும் இன்னும் பழைய நிலையே தொடர்வது வியப்பளிக்கிறது.

நான்கு சட்டத் தொகுப்புகளுக்கான தமிழ்நாடு மாநில விதிகளை அவசர அவசரமாக அமைச்சரின் வழிகாட்டுதலையும் மீறி இணையதளத்தில் வெளியிட்டு இருக்கின்றனர். வெகுவிரைவில் ஒன்றிய அரசின் சட்ட தொகுப்புகளை இந்தியா முழுமையும் அமலாக்க தமிழ்நாடு தொழிலாளர் துறை துணை செய்துகொண்டு இருக்கிறது.

வேளாண் சட்டங்களை எதிர்த்து தீர்மானம் நிறைவேற்றியதைப்போல, இந்த தொழிலாளர் சட்டத் தொகுப்புகளையும் எதிர்த்து தமிழ்நாடு சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என வலியுறுத்துகிறோம்.

சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை குறைந்து கொண்டே சென்றாலும், இந்தியாவில் அது உயர்த்தப்பட்டு கொண்டே இருக்கிறது. உலக அளவில் மிக அதிக விலையில் பெட்ரோல் விற்கப்படும் நாடு மற்றும் மூன்றாவது நிலையில் அதிக விலை கொண்ட சமையல் எரிவாயு விற்கும் நாடு என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அனைத்துப் பொருள்களின் விலையும் சாதாரண மக்களின் கைக்கெட்டாத வகையில் உயர்ந்து கொண்டே போகின்றன.

இவை அனைத்தையும் திசைதிருப்ப, மதம் சாதி ஆகியவற்றையே மையமாக வைத்து தொடர்ச்சியாக இந்தியா முழுமையும் ஏதேனும் கலகங்களை பாஜகஆர்எஸ்எஸ் ஏற்படுத்திக் கொண்டே இருக்கிறது. தமிழகத்திலும் கூட அது தனது மதவெறியூட்டும் செயல்களைத் திட்டமிட்டுத் தூண்டி வருகிறது. மனிதாபிமானமற்ற செயல்கள் அனைத்தையும் மதச்சாயம், சாதிச் சாயம் பூசி நியாயப்படுத்துகிறது. அஇஅதிமுக தனது தனித்தன்மையை இழந்து, கொஞ்சம் கொஞ்சமாக பிஜேபியால் விழுங்கப்பட்டு வருகிறது.

இப்படிப்பட்ட பன்முனை தாக்குதல்கள் உழைக்கும் மக்கள் மீது தொடுக்கப்பட்டு வரும் வேளையில், இவற்றுக்கு எதிராக ஒற்றுமையோடு மார்ச் 28,29 தேதிகளில் அகில இந்திய வேலைநிறுத்தத்தை, தமிழ்நாட்டு தொழிலாளர்கள் மிக வெற்றிகரமாக நடத்திக் காட்டினார்கள். போக்குவரத்து கழக பேருந்துகள், ஆட்டோக்கள் உள்ளிட்டவை சாலைக்கு வராமல் நிறுத்தப்பட்டு, வேலைநிறுத்தம் மக்கள் உணரத் தக்கதாக நீண்ட காலத்துக்குப் பின்பு அமைந்தது.

தொழிற்சங்கங்களின் கோரிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் நேரில் அழைத்துப் பேசி கேட்டறிந்தது குறிப்பிடத் தக்கதாகும். பிஜேபி, அதிமுக தவிர அனைத்து கட்சிகளும் வேலை நிறுத்தத்தை ஆதரித்தன. வேலை நிறுத்தத்தை வெற்றி பெறச் செய்வதற்கு உழைத்த அனைவருக்கும் நன்றி பாராட்டுகிறோம்.

இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் அந்த நாட்டு மக்கள் கடும் துயரங்களுக்கு ஆட்பட்டு இருக்கிறார்கள். மோடி அரசாங்கம் இன்னும் தொடருமேயானால் இதே நிலைக்கு இந்தியாவும் தள்ளப்படும் என்பதில் ஐயமில்லை.

ஒன்றிய அரசின் கார்ப்பரேட் ஆதரவு கொள்கைகள், மக்களுக்கும் தொழிலாளர்களுக்கும் விரோதமான செயல்பாடுகள், மதவெறியை தூண்டி விட்டு அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக பரப்பப்படும் வெறுப்பு அரசியல், மனிதனில் உயர்வு தாழ்வு சொல்லும் சாதி ஆணவங்கள், நமது மொழி, பண்பாட்டை அழிக்கும் உள்நோக்கத்தோடு இந்தியைத் திணிக்கும் முயற்சிகள் உள்ளிட்ட எல்லா ஆதிக்க நடவடிக்கைகளையும் எதிர்ப்பது தொழிலாளியின் கடமையாகும்.

இந்தியாவிலேயே முதல் தடவையாக சென்னை துறைமுகம் மற்றும் திருவல்லிக்கேணி கடற்கரைகளில் தோழர் சிங்காரவேலர் 1923ஆம் ஆண்டில் செங்கொடி ஏற்றி மே தினத்தை கொண்டாடினார். இந்தியாவில் மே தினம் கொண்டாடப்பட்டதன் நூற்றாண்டு இப்போதிருந்து தொடங்குகிறது. முதல் மே தினத்தை நடத்திய தோழர் சிங்காரவேலர் அவர்களும் சுப்பிரமணிய சிவா அவர்களும் சிறை தண்டனைக்கு உட்பட்டு சொல்லொணாத சித்திரவதைகளுக்கு ஆளாகினர். ஆனால் தொழிலாளர்களுக்காகவும், நாட்டு விடுதலைக்காகவும் ஓய்வின்றி இறுதி மூச்சு வரை பாடுபட்டனர்.

செங்கொடி ஏந்தி மக்கள் நலனுக்காக சர்வபரித்தியாகம் செய்து செய்த மாமனிதர்களின் வாரிசுகளாகிய நாம், இந்திய நாட்டையும் மக்களையும் காப்பாற்றுவதற்காகத் தொடர்ந்து போராட இந்த மேதினத்தில் சபதம் ஏற்போம்.

**தொழிலாளர் ஒற்றுமை ஓங்குக !**

**இடதுசாரிகளின் ஒற்றுமை ஓங்குக !**

**தொழிற்சங்க ஒற்றுமை ஓங்குக !**

**மே தினம் நீடூழி வாழ்க !**

**இன்குலாப் ஜிந்தாபாத் !**

இவ்வாறு சூளுரையில் கூறியுள்ளனர்.

# ஏஐடியூசி தலைவர்கள் மீதான பொய் வழக்கில் அனைவரும் விடுதலை

நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷனில் வேலை செய்த தொழிலாளி ராஜா 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18ம் தேதி காலை தொழிலக பாதுகாப்பு படை வீரர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். தமிழ்நாடு ஏஐடியூசி நீதி கேட்டு கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடத்த வேண்டும் என்று அறைகூவல் விட்டது. அன்றைய தினம் பாராளுமன்ற தேர்தல் அறிவிப்பு வெளியிடப்பட்ட நாள். தலைமையின் அறைகூவலை ஏற்று நெல்லை மாவட்ட ஏஐடியூசி உடனடியாக ஆர்ப்பாட்டம் நடத்த திட்டமிட்டது.

திருநெல்வேலி சிந்துபூந்துறை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்திற்கு அருகில் நீதி கேட்டு கண்டன ஆர்ப்பாட்டம் நெல்லை மாவட்ட தலைவரும் மாநிலச் செயலாளருமான எஸ்.காசிவிஸ்வநாதன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்நிலையில் மானூர் வட்டார வளர்ச்சி அலுவலர் பறக்கும் படை அதிகாரியாக பணியாற்றிய காரணத்தினால் நேரடியாக ஆர்ப்பாட்ட மையத்திற்க்கு வந்தார். ஆர்ப்பாட்டத்தை புகைப்படம் எடுத்தார். எஸ்.காசிவிஸ்வநாதன், கட்டிட தொழிலாளர் சங்க மாவட்ட செயலாளர் எம்.எஸ்.பாலகிருஷ்ணன், கட்சியின் தற்போதைய தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.பரமசிவன், கட்சியின் கார் ஓட்டுநர் மாரிதுரை, கூலி தொழிலாளி சங்க தலைவர் பால்தவசி ஆகியோர் மீது வழக்குப் பதியப்பட்டது.

மானூர் வட்டார வளர்ச்சி அலுவலர் கொடுத்த புகாரை வழக்காக பதிவு செய்து இந்திய குற்றவியல் சட்டம் 143 மற்றும் 188ன் கீழ் குற்றம்சாட்டப்பட்டது. 18.3.2014 ஆர்ப்பாட்டம் நடத்தியதாக நெல்லை பாலம் காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. ஆனால் குற்றப்பத்திரிக்கை 18.8.2014 ஆம் நாள் பதிவு செய்யப்பட்டது. திருநெல்வேலி குற்றவியல் நாலாவது நீதிமன்றத்தில் வழக்கு 2015ஆம் ஆண்டு விசாரணைக்கு வந்தது



வழக்கு எண் எஸ்.டி.சி 515/2015 குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு சம்மன் அனுப்பப்பட்டு 28.6.2016 ஆம் நாள் விசாரணைக்கு அழைக்கப்பட்டனர். அன்று முதல் மாதாமாதம் ஒருநாள் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டிய அவலம் ஏற்பட்டது.

ஆர்ப்பாட்டத்தின் போது எடுக்கப்பட்ட நிழல் படம் வீடியோ முதலிய பதிவுகளை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று விசாரணை மேற்கொண்ட காவல்துறை துணை கண்காணிப்பாளர் சாட்சி சொன்ன போது ஒப்புக்கொள்ள வைத்தார். வட்டார வளர்ச்சி அதிகாரியின் புகாரின் அடிப்படையில் அரசு தரப்பு வழக்கை நிரூபிக்க முடியாமல் திணறியது. காவல்துறையினர் புகைப்படங்களை தாக்கல் செய்யவில்லை. கட்சியின் மூத்த வழக்கறிஞர் பெ.கணபதி சுப்பிரமணியன் மற்றும் இளம் வழக்கறிஞர் த.இசக்கித்துரை ஆகியோர் இவ்வழக்கில் ஆஜரானார்கள். திறமையான வாதுரையால் வழக்கில் ஏஐடியூசி வெற்றி பெற்றது.

# தமிழக அரசு சொத்து வரி உயர்வை பரிசீலனை செய்ய வேண்டும்

## டி.ராமச்சந்திரன் சட்டசபையில் கோரிக்கை

**சொத்து வரி உயர்வு குறித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டமன்ற குழு தலைவர் டி.ராமச்சந்திரன் சட்டமன்றத்தில் கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வந்து பேசிய போது:**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. சொத்து வரி விதிப்பு குறித்து ஏற்கனவே நம்முடைய நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள் தெளிவாக தெரிவித்திருக்கிறார். இன்றைக்கு ஒன்றிய அரசு 15வது ஆணையம் தனது அறிக்கையில் தூய்மை இந்தியா திட்டம் 2.0 அம்ருத் ஆகிய திட்டங்களுக்கு நிதி விடுவிக்க வேண்டுமென்றால் மாநில அரசுகள் சொத்து வரி உயர்த்த வேண்டும் என்ற அறிக்கையை அனைத்து மாநிலங்களுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் சொத்து வரி உயர்த்தப்பட்டுள்ளதாக நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார். ஏற்கனவே ஒன்றிய அரசின் பெட்ரோல் டீசல் விலை உயர்வு, அதுபோல் விலைவாசி உயர்வினால் இன்றைக்கு நகர்ப்புறங்களிலும், கிராமப்புறங்களிலும் வாழ்கின்ற சாதாரண ஏழை, எளிய மக்கள், நடுத்தர மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்போது சொத்து வரி உயர்த்தப்பட்டால் வீட்டு வாடகை மற்றும் சிறு குறு தொழில் நிறுவனங்களை நடத்துகின்ற தொழிற்சாலைகளினுடைய வாடகை கட்டணம் அதிகமாகும். இதனால் சாதாரண மக்களும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே தமிழக அரசு சொத்து வரி உயர்வை பரிசீலனை செய்ய வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.



**மத்திய பல்கலைக்கழக பொது நுழைவுத் தேர்வை எதிர்த்து முதல்வர் கொண்டு வந்த தனி தீர்மானத்திற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஆதரவு தெரிவித்த பேசிய போது...**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றிய அரசின் பல்கலைக்கழக நிதி மானியத்தின் கீழ் செயல்படும் அனைத்து மத்திய பல்கலைக்கழகங்களிலும் இளங்கலை உள்ளிட்ட அனைத்து பட்டப் படிப்புகளுக்கும் பல்கலைக்கழக பொது நுழைவுத்தேர்வை ஒன்றிய அரசு கட்டாயப்படுத்தி இருப்பது வருங்காலத்தில் தமிழகத்திலுள்ள இந்திய நாட்டில் அனைத்து அரசு பல்கலைக்கழகங்கள் மற்றும் தனியார் மற்றும் அரசு உதவி பெறுகின்ற பல்கலைக்கழகங்களில் இந்த பொது நுழைவுத்தேர்வை நுழைப்பதற்கான முன் முயற்சிதான் சி.யூ.இ.டி. தேர்வு என்பது. இன்றைக்கு நாடு முழுவதும் மாநில அரசின் பாடத்திட்டத்தில் பிளஸ் 2 மதிப்பெண் அடிப்படையில் பல்கலைக்கழகங்களில் மாணவர் சேர்க்கை நடைபெற்று வந்த நிலையில், பொது நுழைவுத் தேர்வின் மூலமாக பல்கலைக்கழகத்தில் மாணவர் சேர்க்கை என்பது நீட் தேர்வை கொண்டு வந்து எவ்வாறு கிராமப்புற மாணவர்களுடைய மருத்துவப் படிப்பு கல்வி கனவை ஒன்றிய அரசு சிதைத்ததோ அதேபோல பல்கலைக்கழகங்களுக்கு பொது நுழைவுத் தேர்வு என்பது கிராமப்புற ஏழை, எளிய தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட, பழங்குடி மாணவர்களுடைய இளங்கலை மற்றும் உயர்கல்வி படிக்கின்ற கனவை சிதைக்கின்ற செயல் இது. சமூகநீதியை குழி தோண்டிப் புதைக்கின்ற செயல்.

இன்றைக்கு சமூக நீதிக்காக, மாநில உரிமைக்காக இந்தியாவில் எந்த மாநிலத்திலும் குரல் எழுப்பாத நிலையில் டெல்லியை நோக்கி தமிழகத்திலிருந்து நம்முடைய மாநில முதலமைச்சர் உடைய குரல் என்பது சமூக நீதியையும், அதேபோல மாநில உரிமைகளையும் நிலைநாட்டும் வகையில் ஒன்றிய அரசினுடைய அனைத்து மத்திய பல்கலைக்கழகங்களிலும் இந்த பொது நுழைவுத் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்று அரசு கொண்டு வந்திருக்கிற தனி தீர்மானத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வரவேற்று அமர்கிறேன். நன்றி வணக்கம்.

**விவசாய நிலங்களில் எரி வாயு குழாய்கள் பதிப்பதை எதிர்த்து பேசியபோது...**

கெயில் நிறுவனம் எரிவாயு குழாய்களை கேரளா மாநிலம் கொச்சியிலிருந்து கர்நாடக மாநிலம் தேவந்குந்திக்கு தமிழ்நாட்டில் கோவை, திருப்பூர், ஈரோடு, சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி உள்ளிட்ட மாவட்டங்களில் விவசாய நிலங்களில் பதிப்பதால் அதை எதிர்த்து விவசாயிகள் தொடர்ந்து போராடி வருகிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் கூட எதிர்கட்சி தலைவராக இருந்தபோது விவசாய விலைநிலங்களில் எரிவாயு குழாய்களை பதிக்ககூடாது என தீர்மானம் கொண்டு வந்தார். சட்டமன்ற தேர்தல் பரப்புரையிலும் இந்த அரசு அமையும் பட்சத்தில் விவசாய நிலங்களில் எரிகுழாய்கள் பதிக்க விடமாட்டோம் என வாக்குறுதி அளித்திருந்தார். கடந்த சில தினங்களுக்கு முன்பு தருமபுரி மாவட்டம் கரியப்பனள்ளி கிராமத்தை சேர்ந்த கணேசன் அவர்களுடைய நிலத்தில் கெயில் நிறுவனம் குழாய்கள் பதிப்பதால் அதிர்ச்சி அடைந்து தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். அவருடைய குடும்பத்திற்கு முதலமைச்சர் அவர்கள் ரூ.5 இலட்சம் நிவாரணம் வழங்கியது ஆறுதலாக இருக்கிறது. அவருடைய குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை வழங்கப்பட்ட வேண்டும். கெயில் நிறுவனம் விவசாய நிலங்களில் எரிவாயு குழாய்களை பதிக்காமல் கேரளா மற்றும் கர்நாடகாவில் தேசிய நெடுஞ்சாலைகளில் பதித்து இருப்பதைபோல தேசிய நெடுஞ்சாலைகளில் பதிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என தளி சட்டமன்ற உறுப்பினர் டி.இராமச்சந்திரன் அவர்கள் அரசின் கவனத்தை ஈர்த்தார்.

**முல்லை பெரியாறு அணை நீர்மட்ட உயர்வு குறித்து பேசும்போது...**

தேனி உள்ளிட்ட தென்மாவட்ட மக்களின் வாழ்வாதார அணையாக முல்லை பெரியாறு அனை திகழ்கிறது. உச்சநீதிமன்ற தீர்ப்பை கேரளா இடதுசாரி முன்னனி அரசு நடைமுறைப்படுத்த வேண்டும், மாநில நதிநீர் உரிமையை பாதுகாக்கப்பட வேண்டும் என்பதுதான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நிலைப்பாடு, தமிழக முதல்வர் அவர்கள் கேரளா அரசோடு இனக்கமாக பேசி நம்முடைய மாநில நதிநீர் உரிமையை பாதுகாக்கும் வகையில் முல்லை பெரியாறு அணை நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்துவதற்கு சட்டரீதியாகவும் நல்லிணக்கத்தோடும் முயற்சி எடுக்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக தளி சட்டமன்ற உறுப்பினர் டி.இராமச்சந்திரன் அவர்கள் அரசின் கவனத்தை ஈர்த்தார்.

**ஜவுளி மற்றும் நூல் விலை உயர்வு:**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூல் விலை உயர்வால் இன்றைக்கு ஜவுளி கைத்தறி, விசைத்தறி, ஆயத்த ஆடை நிறுவனங்கள் பெரும் நெருக்கடிக்கு ஆளாக்கப்பட்டிருகின்றன. பல லட்சம் தொழிலாளர்கள் இன்றைக்கு வேலை இழக்கும் அபாயகரமான நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இதற்கு காரணம் ஒன்றிய அரசினுடைய புதிய ஜவுளிக் கொள்கை. இன்றைக்கு புதிய ஜவுளிக் கொள்கையின் அடிப்படையில் பணம் மயமாக்கல் திட்டத்தினால் ஜவுளியினுடைய அசையும் அசையா சொத்துக்களை விற்றதின் காரணமாக தான் பெரும் நெருக்கடி ஆளாகியிருக்கின்றது. எனவே ஒன்றிய அரசு பஞ்சு ஏற்றுமதியை தடை செய்ய வேண்டும் அதுபோல் பஞ்சு இறக்குமதிக்கான 11 சதவீத வரியை குறைக்க வேண்டும். பஞ்சு ஆன்லைன் டிரேடிங் முறையை தடை செய்ய வேண்டும். இவ்வாறு ஒன்றிய அரசை மாநில அரசு வலியுறுத்த வேண்டும். ஜவுளி தொழில் செய்கின்ற பல லட்சக்கணக்கான தொழிலாளர்களுடைய வாழ்வாதாரத்தையும் தமிழக அரசு பாதுகாக்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

## தியாகசீலர் சி.எஸ்.சுப்பிரமணியம் கட்டிட நிதி வழங்கியோர்!

பேரன்புமிக்க தோழர்களே, தியாக சீலர் சி. எஸ்.சுப்பிரமணியம் நினைவாக மார்க்சிய கல்வி அரங்கம் கோபிசெட்டிபாளையத்தில் கட்டப்பட்டு வருகின்றது.

ரூபாய் ஐந்து கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் நான்கு அடுக்குகளைக் கொண்ட கட்டிடப் பணிகளில், மூன்று அடுக்குகள் நிறைவு பெற்று, நான்காம் தளம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஓரிரு மாதங்களில் நிறைவடைய உள்ள கட்டிடப் பணிகள் முழுமையாக அமைத்து முடிப்பதற்கு நிதியின் தேவை குறித்து வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

பணியில் உள்ள தோழர்கள் மற்றும் ஓய்வு பெற்றவர்கள் தங்களின் பங்களிப்பை செலுத்துமாறும், மாநில தலைவர்கள் பங்கேற்கும் நிகழ்ச்சிகளில் சால்வைகள் அணிவிப்பது தவிர்த்து, தங்களது அன்பை வெளிப்படுத்த நிதியாக வழங்கிடுமாறும் மாநிலக்குழு வேண்டுகோள் விடுத்தது.

வேண்டுகோளை ஏற்று நிதி வழங்கிய தோழர்களுக்கும், அமைப்புகளுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

நிதி வழங்கிய தோழர்களின் முதல் பட்டியல் வருமாறு:

| | |
|---|---|
| தோழர் **டி.சுப்பிரமணியம்** தூத்துக்குடி மாவட்ட கட்டிட தொழிலாளர் சங்கம் | – ரூ.5000 |
| தோழர் **இரா.சமுத்திரகனி** ஜனசக்தி மாவட்ட பொறுப்பாளர், தென்காசி | – ரூ.2000 |
| தோழர் **எஸ்.சமுத்திரம்,** நகர செயலாளர் சிபிஐ | – ரூ.2000 |
| தோழர் **ஆர்.கணபதிராமன் -,** அம்பாசமுத்திரம் | – ரூ.5000 |
| தோழர் **கே.ரவி குடும்பத்தினர்,** பல்லாவரம் பொதுச் செயலாளர், தமிழ்நாடு கட்டிட தொழிலாளர் சங்கம் | – ரூ.51,000 |
| தோழர் **அனுராதா இல்லத்தினர்,** சேலம் | – ரூ.5000 |
| தோழர் **ந.மூர்த்தி,** ஏ.எஸ்.கே.நினைவு மன்றம் | – ரூ.500 |
| தோழர் **பி.எல்.நரசிம்மன்,** வியாசர்பாடி | – ரூ.25,000 |
| **உமாசங்கர்,** வியாசர்பாடி | – ரூ.10,000 |
| தோழர் **ஆர்.துளசிதாஸ்,** வியாசர்பாடி | – ரூ.10,000 |
| **பி.எல்.இஞ்சினியரிங் ஒர்க்ஸ்** | – ரூ.10,000 |
| வேலூர் தோழர் **மணி –** லதா எக்ஸ். எம்.எல்.ஏ. | – ரூ.5000 |
| தோழர் **ஆதவன் – ரூபிகா** (ஏஐடியுசி) | – ரூ.5000 |
| தோழர் **எஸ்.அழகர்சாமி** நினைவுதினம், எட்டயபுரம் | – ரூ.5600 |
| **குமரி மாவட்டக்குழு** | – ரூ.10,000 |
| **நாகப்பட்டினம் மாவட்டக்குழு** | – ரூ.1,00,000 |
| **உருமாண்டம் பாளையம் கிளை,** கோவை | – ரூ.2000 |
| தோழர் **மல்லிகா புருஷோத்தமன்** எம்.சி. | – ரூ.2000 |
| **ராஜபாளையம் திருமணத்தில்** | – ரூ.5000 |
| தோழர் **எஸ்.இரணவீறு,** சிவகிரி தோழர் **சுப்பையா** தென்காசி மாவட்டம் | – ரூ.50,000 |
| தோழர் **வி.டி.ரத்தினசாமி** | – ரூ.1000 |
| தோழர் சத்தியமங்கலம் **மகேந்திரன்** | – ரூ.500 |
| தோழர் **தர்மசாஸ்தா** மகன் **பிடல் காஸ்ட்ரோ திருமணத்தில்** | – ரூ. 5000 |
| தோழர் **ஏ.ராஜேந்திரன்** எம்.சி., திருப்பூர் | – ரூ.500 |
| தோழர் **சேகுவேராதாஸ் திருமண நாளை முன்னிட்டு** | – ரூ.2000 |
| தோழர் **கோ.மணிமூர்த்தி** ஏஐடியூசி பட்டு கைத்தறி நெசவாளர் சங்க மாநிலத் தலைவர் | – ரூ.500 |

## இந்த வார தம்பிக்குறள்

### 68. அடிமைக் கடிமை பெண்

**அடிமைக்கும் உண்டுய்ய ஓரோர்கால் இல்லையே**
**பெண்ணுக்குப் பேசி னது**

(கொத்தடிமையாக), அடிமைக்கே அடிமையாக இருப்பவர்கள் கூட, ஒரு காலத்தில் விடுதலை பெற இயலும். ஆனால் பெண் குலத்திற்கு விடுதலையே இல்லையே! (விடுதலை பெற வேண்டும் என்ற அக்கறை இல்லை என்க)

**அடிமைகட் கெல்லாம் அடிமை அவளின்**
**இடிந்தவாழ்க்கைக் கில்லைஇ ஈடு.**

அடிமைகளுக்கெல்லாம் அடிமையாக வாழ்கின்ற, துன்புற்றுத் துயர வாழ்க்கை வாழ்கின்ற பெண்களின் துன்பத்திற்கு உவமை சொல்ல இயலாது (ஒரு முதலாளியிடம் பணி செய்யும் தாழ்ந்த அடிமைக்கும் கூட அவன் மனைவி அடிமையாகவே இருக்கிறாள்)

# உழைக்கும் பெண்கள் இயக்கத் தலைவர் பி.வசுமதி மறைவு

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்

ஆந்திர மாநில உழைக்கும் பெண்கள் இயக்கத் தலைவரும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளர் டாக்டர் கே.நாராயணாவின் வாழ்விணையருமான தோழர் பி.வசுமதி (68) ஏப். 14 அன்று ஆந்திர மாநிலம், நகரியில் காலமானார் என்ற துயரச் செய்தியை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். தோழர் பி. வசுமதி கல்லூ ரியில் பயிலும் காலத்தில் மாணவர் இயக்கத்தின் வழியாக கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து கொண்டவர்.

ஆந்திர மாநில கூட்டுறவு வங்கியில் மேலாளராக பணியாற்றி ஓய்வு பெற்றவர். தொழிற்சங்க இயக்கத்தில் முனைப்புடன் செயல்பட்டவர்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒருங்கிணைந்த மாநிலச் செயலாளராக பணியாற்றி, தற்போது தேசிய செயலாளர் பொறுப்பில் செயல்பட்டு வரும் டாக்டர் கே.நாராயணாவின் வாழ்க்கை இணையர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களுக்கு திருமணமான மகளும், மகனும் இருக்கிறார்கள்.

உடல் நலிவு காரணமாக மருந்துவமனையில் சேர்க்கப்பட்ட பி.வசுமதி திடீரென ஏற்பட்ட மாரடைப்பில் காலமானார் என்பது பெரும் வேதனையளிக்கிறது.

தோழர் பி.வசுமதியின் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு செவ்வணக்கம் கூறி, அஞ்சலி செலுத்துகிறது.

அன்னாரை பிரிந்து வாடும் தோழர் கே.நாராயணா உள்ளிட்ட குடும்பத்தாருக்கு ஆறுதலை தெரிவித்துக் கொள்கிறது.

ஏப்.15 அன்று நடைபெற்ற இறுதி நிகழ்வில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் நேரில் பங்கேற்றார்.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

## வாசகர்  டுவிட்

**ஆசிரியர் ஜனசக்தி,**

அண்டை நாடான இலங்கையில் மக்கள் இன வேறுபாடுகளை கைவிட்டு விட்டு போர் புரிவது போல் இந்தியாவில் போராட்டம் எப்போது? என்ற வாறு இந்திய மக்களைத் தட்டி எழுப்புகிறார் மாநில செயலாளர் இரா. முத்தரசன். இலங்கை பிரச்சனையை த.லெனின் கூடுதலாக விவரித்துள்ளார்.

– **காடேஸ்வரன்,** மயிலாப்பூர்

**ஆசிரியர் ஜனசக்தி,**

பல்கலைக்கழகங்களுக்கு மூடுவிழா காணும் தேசியக் கல்விக் கொள்கை என்ற கட்டுரையில் முதுநிலை பட்டப் படிப்பில் மாணவர்களின் சேர்க்கை குறையும் சூழல் ஏற்படும் என்பதை எச்சரித்துள்ளார் கட்டுரையாளர். டாணாக்காரன் திரைப்பட விமர்சனத்தில் மாறிவரும் தமிழ் சினிமாவை மாற்றுப்பாதையில் கொஞ்சம் நகர்த்தியிருக்கிறது என்று ஆதவன் வர்ணித்து இருப்பது மிகச் சரி.

– **அன்பரசன்,** கோவை – 4

**ஆசிரியர் ஜனசக்தி,**

புதிய இடதுசாரிகள் தமிழகத்தில் பல குழுக்களாக செயல்பட்டு வருகின்றனர். அமைப்புகளை மறுத்து தனிநபர் நிலைப்பாட்டை மேற்கொள்கின்றனர். அமைப்பு, ஒழுங்கு, கட்டுப்பாடு என்பதையும் இவர்கள் ஏற்பதில்லை. பொதுவுடமை கட்சிகளை கடும் விமர்சனத்திற்கு உள்ளாக்குகிறார்கள் தோலுரித்து காட்டுகிறார் தோதாத்ரி.

– **வேலவன்,** பனையூர்

**ஆசிரியர் ஜனசக்தி,**

ஜனசக்தியின் கடைசி பக்கத்தில் மார்க்சிஸ்ட் கட்சியின் அகில இந்திய மாநாட்டில் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களின் முக்கியத்துவப் படுத்தப்பட்டிருப்பது மிகவும் பொருத்தமானது. இன்றைய அரசியல் சூழலுக்கு பொருத்தமான உரையாக அமைந்துள்ளது.

– **தனசேகர்,** ஆலங்குடி



### பழங்குடி இனச்சான்றிதழலில்

# இந்து என்று மத பெயரை சேர்க்க கூடாது

## தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்கம் தீர்மானம்

தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்கத்தின் மாநில நிர்வாகக்குழு கூட்டம் ஏப்.16 அன்று மாநிலத் தலைவர் பி.கெம்பன் தலைமையில் சேலம் மாவட்ட சிபிஐ அலுவலகத்தில் நடைபெற்றது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் ஏ.மோகன் வரவேற்று பேசினார். தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்க மாநில சிறப்புத் தலைவர் ந.நஞ் சப்பன் எக்ஸ்.எம்.எல்.ஏ., பழங்குடி மக்கள் மத்தியில் களப்பணியாற்றி வரும் வி.பி.குணசேகரன், அகில இந்திய ஆதிவாசிகள் மகா சபையின் அகில இந்திய துணைத்தலைவர் ஜே.பூபாலன் ஆகியோர் ஆலோசனை வழங்கினர். மாநிலச் செயலாளர் ப.பரமசிவம் வேலை அறிக்கை வாசித்தார்.

கூட்டத்தில், பழங்குடி மக்களை அடையாளப்படுத்த பழங்குடி மக்கள் ஆய்வு மையம் சார்பில் மேமாதம் இறுதியில் ஈரோடு மாவட்டத்தில் ஆய்வரங்கம் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது. அதில் பழங்குடி ஆய்வாளர்களையும், மனிதவள மேம்பாட்டு பேராசிரியர்களையும் அழைத்து பங்கெடுக்க வைப்பதென தீர்மானிக்கப்பட்டது.

‘குறிஞ்சிக்குரல்’ இதழ் கொண்டு வருவதெனவும் தீர்மானிக்கப் பட்டது. மக்கள்தொகை கணக்கெடுப்பின் போது பழங்குடிகளை தனி இனக் குழுவாக பதிவு செய்திட ஒன்றிய அரசை தமிழக அரசு கேட்டுக் கொள்ள வேண்டும் என்றும் பழங்குடி இனச்சான்றிதழலில் இந்து என்று மத பெயரை சேர்க்க கூடாதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல ஆணையம் என்பதை பிரித்து பழங்குடியினர் நல ஆணையம் ஒன்றை ஏற்படுத்தி அதில் பழங்குடியினர் பற்றியான நீண்ட கால ஆய்வினை செய்து வந்திருக்கிற டாக்டர் சி.மகேஸ்வரன், டாக்டர் தமிழ்ஒளி, என்.நஞ் சப்பன், வி.பி.குணசேகரன் ஆகியோரை சேர்க்க வேண்டுமென்றும் தமிழ்நாடு அரசை கேட்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

# வேளச்சேரி, சோழிங்கநல்லூர் தொகுதிகளின் சிறப்பு பேரவை

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தென்சென்னை மாவட்டம், வேளச்சேரி தொகுதியின் சிறப்பு பேரவை கூட்டம் ஏப். 17 அன்று நடைபெற்றது. மாநில செயற்குழு உறுப்பினர் டி.எம்.மூர்த்தி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். மாவட்ட செயலாளர் எஸ்.ஏழுமலை வழி காட்டுதலின்படி பேரவை நடைபெற்றது. தொகுதியின் செயலாளராக சி.சு.கோவிந்தனும், துணை செயலாளர்களாக வி.கன்னியப்பன், எம்.ரங்கனாதன் ஆகியோரும், பொருளாளராக இ.தாயுமானவனும் தேர்வு செய்யப்பட்டனர். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சோழிங்க நல்லூர் தொகுதியின் சிறப்பு பேரவை கூட்டம் நடைபெற்றது. மாநில செயற்குழு உறுப்பினர் டி.எம்.மூர்த்தி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். மாவட்ட செயலாளர் எஸ்.ஏழுமலை வழி காட்டுதலின்படி பேரவை நடைபெற்றது.இறுதியில் தொகுதியின் செயலாளராக ஜி.கண்ணதாசனும், துணை செயலாளர்களாக டி.ஜோதியும், சல்மாவும், பொருளாளராக பெருமாளும் தேர்வு செய்யப்பட்டனர்.

# கோவை பத்மாவதி மறைவு

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்

தமிழ்நாடு ஏஐடியூசி கட்டடத் தொழிலாளர் சங்கத்தின் துணைப் பொதுச் செயலாளர் தோழர் கோவை என். செல்வராஜின் வாழ்விணையர் திருமதி பத்மாவதி (57) ஏப்.19 அன்று கோவையில் காலமானார் என்ற துயரச் செய்தி அறிந்து அதிர்ச்சியுற்றோம்.

தோழர் கோவை என்.செல்வராஜ் கோவை மாவட்ட தொழிற்சங்க இயக்கத்தின் முன்னணித் தலைவர். பிகார் மாநிலம் சமஸ்திபூரில் நடைபெற்ற சங்கத்தின் நிர்வாகக் குழுக் கூட்டத்தில் பங்கேற்க சென்று, திரும்பிக் கொண்டிருக்கிறார். இந்த நிலையில் திருமதி பத்மாவதி மறைவு ஆற்றுப்படுத்த முடியாத துயரமாக நிகழ்ந்துள்ளது. தோழர் என். செல்வராஜ் தொழிற்சங்க வாழ்க்கை தடையின்றி நடைபெறுவதற்கு, ஆதரவாக திருமதி பத்மாவதி குடும்பச் சுமைகள் முழுவதையும் தாங்கி வாழ்ந்து வந்தார். இவர்களுக்கு திருமணமான ஒரு மகனும், திருமண வயதில் ஒரு மகனும் இருக்கிறார்கள். சில மாதங்களாக உடல் நலிவு காரணமாக சிகிச்சை பெற்று வந்த நிலையில் காலமாகிவிட்டார். எந்த வகையிலும் ஈடுசெய்ய முடியாத இழப்பை சந்தித்துள்ள தோழர் செல்வராஜூக்கு ஆறுதல் சொல்லி தேற்ற இயலாது. அதனை காலம்தான் செய்ய வேண்டும்.

திருமதி பத்மாவதி மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது. அன்னாரின் குடும்பத்தின் துயரில் பங்கேற்று, என்.செல்வராஜ் உள்ளிட்ட குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

### மழைபாதிப்பு, உரத்தட்டுப்பாட்டால்

# விவசாயிகள் தவிப்பு

## தமிழக அரசு உதவிட தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கோரிக்கை

தமிழ்நாடு விவசாயிகள் சங்க பொதுச் செயலாளர் பி.எஸ். மாசிலாமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

எதிர்பாரா மழை பாதிப்பாலும் இரசாயன உரங்கள் கிடைக்காமலும் கடந்த இரு மாதங்களாக விவசா யிகள் பரிதவித்து வருகின்றனர்.

யூரியா மற்றும் டிஏபி இரசாயன உரங்கள் தொடர் தட்டுப்பாடாக உள்ளது. குறைந்த அளவில் சில நேரங்களில் வரும்போது அந்த உரங்களை உரிய விலைக்கு பில் கொடுத்துவிட்டு விற்பனையாளர்கள் கூடுதல் பணம் கேட்கிறார்கள் அல்லது விவசாயிகளுக்கு தேவை யில்லாத வேறு இடுப்பொருட்களை வாங்கினால் தான் உரம் எனக் கட்டாயப்படுத்தப்படுகிறது. உரக் கம்பெனிகளே அவர்களின் பிற தயாரிப்புகளை உரங்களுடன் சேர்த்து கட்டாய விற்பனை செய்கிறது.

இந்த நிலையில் கடந்த பல நாட்களாக தொடர்ந்து விட்டுவிட்டு பொழியும் மழையால்.. தமிழ்நாடு அளவில் பரவலாக பருத்தி, மக்காச்சோளம், பச்சைபயிர், உளுந்துபயிர்வகைகள்...நிலக்கடலை, காராமணி, வாழை போன்ற பயிர்கள் அழிந்துள்ளது. மாமரங்களின் பூ, பிஞ்சுகள்உதிர்ந்துவிட்டன.

நெல் தரிசில் வழக்கமாக பயிரிடும் பச்சைப் பயிறு மற்றும் உளுந்து நல்ல மகசூல் கண்டு அறுவடை செய்ய வேண்டிய நிலையில் முற்றாக அழிந்து விட்டது. பல இடங்களில் முளைத்தும் பூஞ்சாணம் பிடித்தும் வீணாகி விட்டது. நிலக் கடலை, காராமணி போன்ற பயிர் வகைகளும் அழிந்துள்ளது.

நடப்பாண்டு கூடுதல் விலை கிடைக்கும் என நம்பி விவசாயிகள் கடந்தாண்டை விட இருமடங்கு பருத்தி சாகுபடி செய்துள்ளார்கள். விட்டு விட்டு தொடர்ந்து பெய்யும் மழையினால் இவைகள் தண்ணீர் தேங்கி வேரழுகல் நோய் ஏற்பட்டு அழிந்து வருகிறது. கடந்த இரு மாதங்களாக விதைத்த பருத்திச் செடிகள் முழுமையாக அழியும் நிலையில் உள்ளது. சிலர் மீண்டும் இரண்டாவது தடவையாக விதையிட்டு, அதுவும் அழிந்துள்ளது. பருத்தியை காப்பீடு செய்திட கூடுதல் பிரிமியம் என்பதாலும் அதில் விவசா யிகளைஇணைத்திட வேளாண் துறை உரிய ஆர்வம் காட்டாததாலும் காப்பீடு செய்திடவில்லை.

பல இடங்களில் ஏற்பட்ட சூறைக்காற்றால் நூற்றுக்கணக்கான ஏக்கரில் வாழை மரங்கள் முறிந்து சாய்ந்து விட்டன. மக்காசோள பயிர்கள் சாய்ந்து முறிந்து விட்டன. கால்நடைகளுக்கு வந்துள்ளகண்டறிய முடியாத மர்மநோயால் தமிழ்நாடு அளவில் பரவலாக பாதித்து இறந்து வருகின்றன. இதற்கான சிறப்பு மருத்துவமுகாம் அவசரமாக ஏற்பாடு செய்திட வேண்டும்.

எனவே பாதிப்புகளை தமிழ்நாடு அளவில் ஆய்வு செய்து உரிய உதவிகளை விவசாயிகளுக்கு செய்திட வேண்டும்.

இவ்வாறு அறிக்கையில் பி.எஸ். மாசிலாமணி கூறியுள்ளார்.

# டேபிள் டென்னிஸ் இளம் வீரர் விஸ்வா தீனதயாளன் மரணம்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்

டேபிள் டென்னிஸ் இளம் வீரர் விஸ்வா தீனதயாளன் மறைவிற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

தேசிய அளவில் நடைபெறும் டேபிள் டென்னிஸ் விளையாட்டுப் போட்டியில் பங்கேற்பதற்காக அசாம் தலைநகர் கவுகாத்தில் இருந்து மேகாலயா சென்ற போது கார் விபத்தில் பலியான இளம் வீரர் தீனதயாளன் டேபிள் டென்னிஸ் விளையாட்டில் மிகச் சிறந்த நுட்பங்களை கையாண்டதாக அவரின் பயிற்சியாளர்கள் கூறுகிறார்கள். நுட்பங்களும் திறனும் மிகுந்த இளம் விளையாட்டு வீரர் நாட்டிற்காக இன்னும் பல சாதனைகள் புரிய வேண்டிய தருணத்தில் அவரது மரணம் வேதனையளிக்கிறது.

இளம் விளையாட்டு வீரர் தீனதயாளனுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவிப்பதோடு அவரது குடும்பத்தாருக்கும் தனது ஆறுதலை தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

# துத்திப்பட்டு கிளை மாநாடு

வேலூர் மாவட்டம் கணியம்பாடி ஒன்றியம் துத்திப்பட்டு கிராமத்தில் கிளை மாநாடு கடந்த நடைபெற்றது. டி. நல்லதம்பி தலைமை தாங்கினார். ரகுநாதன் கட்சி கொடியை ஏற்றி வைத்தார். மாநாட்டில் ஒருங்கிணைந்த வேலூர் மாவட்ட செயலாளர் ஏ.சி. சாமிக் கண்ணு மாநாட்டை துவக்கி வைத்து தேசியக் குழு மாநிலக்குழு தீர்மானங்களை விளக்கி பேசினார். மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் ஜி. லதா மாவட்டக்குழு உறுப்பினர் எஸ். காவேரி, வேலூர் மாநகரச் செயலாளர் ஏழுமலை உள்ளிட்டோர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டனர்.

செயலாளராக டி.அருள்குமார், துணைச் செயலாளராக டி.சிட்டிபாபு, பொருளாளராக அர்ஜுன் தேர்வு செய் யப்பட்டனர்.

# கோயில்மனையில் குடியிருப்போர் சங்கம் செயற்குழு கூட்டம்

தமிழ்நாடு கோயில்மனை குடியிருப்போர் சங்க செயற்குழு கூட்டம் திருவல்லீஸ்வரர் நகர் நலக்கழகத்தில் நடைபெற்றது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். சென்னை மாவட்ட சங்கப் பிரதிநிதிகள் நேரிடையாகவும், வெளி மாவட்ட பிரதிநிதிகள் கூகுள் ஜூம் வழியாகவும் கலந்து கொண்டனர். திருவல்லீஸ்வரர் நகர் நல கழக தலைவர் பென்ஜமின் வரவேற்புரையாற்ற, ஜகதாம்பிகை நகர் வெல்பர் அசோசியேஷன் ஆலோசகர் சுப்பையா தலைமையில் கூட்டம் நடை பெற்றது. பிரிதிநிதிகள் தங்கள் பிரச்சனைகளை எடுத்து ரைத்தனர்.

கோயில் மனை குடியிருப்போர் சங்க மாநில தலைவர் வி.அ.பாலசுப்பிரமணியன், தமிழக இந்து சமய திருக்கோயில் களின் வீட்டுமனை வாடகைதாரர்கள் சங்க பொது செயலாளர் கே.மணி, நாமக்கல் மாவட்டம், கொமாரபாளையம் பிரபாகரன், ராயபுரம் காமராஜ், மகளிர் அணி அமைப்பாளர் ஆர்.பூங்கொடி ஆகியோர் உரையாற்றினர்.

இறுதியில் இரா.முத்தரசன் பேசுகையில், கோயில் மனைகளுக்கு மாதவாடகை முறையை தவிர்த்து பழைய பகுதி முறையில் வசூலிக்கவேண்டும் என்றும், அரசு கோயில் மனை குடியிருப்போரின் நியாயமான கோரிக்கைகளுக்கு உரிய முறையில் தீர்வு கண்டால் கோயிலுக்கு வருமானம் பெருகும் என்றும், அரசு இதை கவனத்தில் கொள்ள வேண் டும் என்றும், கோயில்மனைகளில் குடியிருப்போர் தங்கள் கோரிக்கைகளுக்கு, அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் தமிழ்நாடு முழுவதும் பரவியுள்ள கோயில்மனை குடியிருப்போர் அனைவரையும் ஒன்று சேர்த்து கோரிக்கை மாநாட்டை கூட்டவேண்டும் என்றும், அதில் அமைச்சர் அவர்களையும் அழைக்கலாம் என்றும் ஆலோசனை கூறினார்.

கோயில்மனை குடியிருப்போர் சங்க பொருளாளரும், சிபிஐ தென்சென்னை மாவட்ட செயலாளருமான எஸ்.ஏழுமலை பேசுகையில், கோரிக்கை மாநாட்டினை நடத்தவேண்டியதன் அவசியத்தை தெளிவுபட எடுத்துக் கூறினார். முடிவில் திருவல்லீஸ்வர நகர் நல கழக துணை தலைவர் சசிகுமார் நன்றி கூறினார். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

1) மாண்புமிகு தமிழக முதல்வர் அமைத்த நியாய வாடகை நிர்ணயக்குழு வாடகை சம்பந்தமாக தங்கள் பரிந்துரையை அரசுக்கு அளிப்பதற்கு முன்பு கோயில்மனையில் குடியிருப்போர் சங்க பிரிதிநிதிகளிடம் கலந்தாலோசனை செய்து, காலதாமதம் செய்யாமல் விரைந்து தங்கள் பரிந்துரையை அளிக்கவேண்டும் என்று இந்த கூட்டம் வலியுறுத்துகியது.

2) நியாய வாடகை குழுவினரின் பரிந்துரை வரும் வரையில் குடியிருப்போர், கடைகள் வைத்திருப்போர் மீது எந்தவித சட்ட நடவடிக்கை எடுப்பதை தவிர்க்க வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறது.

3) கோயிலுக்கு மனை மட்டுமே சொந்தமானதால் மனையின் மீது தங்கள் சொந்த செலவில் கட்டிய கட்டிடங் களின் பயன்பாட்டின் அடிப்படையில் வகைப்படுத்தி வாடகை நிர்ணயம் செய்வதை தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறது.

4) கோயில் மனைகளில் தங்கள் சொந்த செலவில் கட்டிய கட்டிடங்களுக்கு தங்களின் அவசர தேவைகளுக்கு, மகள் மகன் திருமணம், பிள்ளைகளின் படிப்பு, தேவைக்காகவும், நிதிநிறுவனங்களில் கடன் பெற அனுமதியை வழங்க வேண்டும் என்று இந்த கூட்டத்தின் மூலம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

5) கிராமநத்தம், புறம்போக்கு இடங்களில் காலம்காலமாக குடியிருப்போர்களையும், சமீபத்தில் கோயில் இடங்கள் என்று வகைப்படுத்தி அதிரடி நடவடிக்கை எடுப்பதை தவிர்த்து உண்மை நிலையை அறிந்து தீர்வு காண வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறது.

6) வாடகை பிரச்சணைக்கு தீர்வுகாண நியாயவாடகை குழுவினை அமைத்ததைபோல்கீழ்க்கண்ட பிரச்சினைகளுக்கும் கூடிய விரைவில் தீர்வு காண நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்த கூட்டத்தின் வாயிலாக கேட்டுக்கொள்ளப்படுகிறது.

அ) எந்தவித நிபந்தனையுமின்றி பெயர்மாற்றம் செய்தல் சம்பந்தமாக ஆ) சிதிலமடைந்த வீடுகளை பழுதுபார்க்க உள்ள தடையை நீக்குவது சம்பந்தமாக இ) ஏற்கனவே நடைமுறையில் இருந்த மனை நீங்கலான மேற்கூரையை பத்திரப்பதிவு செய்தல் சம்மந்தமாக,

மேற்கண்ட நீண்டகால பிரச்சனைகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கை எடுத்து, ‘நமக்கு நாமே’ ‘‘ஸ்டாலின்தான் வாராறு விடியல் தரப் போறாரு’’. நிகழ்ச்சிகளில் அளித்த வாக்குகளை நிறைவேற்றும் வகையில் தமிழகம் முழுவதும் உள்ள 20 லட்சம் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை நிலை நிறுத்தும் வகையிலும், கோவில்லனகளில் குடியிருப்போர்/ கடைகள் வைத்திருப்போரின் அடிப்படை பிரச்சனைகளுக்கு விரைந்து தீர்வு காண வேண்டும் என்று இக்கூட்டம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும், அறநிலையத்துறை அமைச்சர் அவர்களையும் வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது.

# மே.31 : எங்கே எனது வேலை?

## தமிழ் நாடு முழுவதும் முற்றுகை போராட்டம்! இளைஞர் பெருமன்ற மாநிலக்குழு முடிவு!




அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் தமிழ் நாடு மாநிலக்குழுக் கூட்டம் ஏப்ரல் 17,18 ஆகிய தேதி களில் தேனி மாவட்டம் சின்னமனூரில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாநிலத் தலைவர் த.கு.வெங்கடேசன் தலைமை தாங்கினார். முன்னாள் மாநிலச் செயலாளர் வ.பாலமுருகன் கொடியேற்றினார். மாநில செயலாளர் க.பாரதி வேலை அறிக்கை மற்றும் அமைப்பு நிலை அறிக்கையை முன்வைத்து உரையாற்றினார்.

மாநிலக்குழு உறுப்பினர்களின் விவாதங்களுக்கு பிறகு அறிக்கை ஒருமனதாக ஏற்கப்பட்டது. கூட்டத்தில் மாநிலத் துணைத்தலைவர் கு.ராஜேந் திரன் மாநிலத் துணைச் செயலாளர்கள் துரை.அருள்ராஜன், வே.வசந்த குமார், இரா.தமிழ்பெருமாள், மாணவர் பெருமன்ற மாநில செயலாளர் சீ.தினேஷ், மாநிலத்தலைவர் மௌ.குணசேகர் உள்ளிட்டு பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் மாநிலக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இளைஞர் பெருமன்றத்தின் இளம் பெண்கள் மாநில மாநாட்டை ஏப்ரல் 30 அன்று திருச்சி மாநகரில் சிறப்பாக நடத்துவதெனவும், மாநாட்டிற்கு 1000 இளம் பெண்களை பங்கேற்க வைப்பது எனவும் முடிவுசெய்யப்பட்டுள்ளது.

மே.31 அன்று தமிழக வேலைவாய்ப்பில் தமிழக இளைஞர்களுக்கு முன்னுரிமை வழங்கு ! எங்கே எனது வேலை? என்ற முழக்கத்தோடு தமிழ்நாடு முழுவதும் ஒன்றிய அரசு அலுவலகங்கள் முன்பு முற்றுகையிட்டு சிறைநிரப்பும் போராட்டத்தை நடத்துவது எனவும், போராட்டத்தையொட்டி சுவர்விளம்பரங்கள், பிரச்சார இயக்கங்களை நடத்தி போராட்டத்தில் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களை பங்கேற்க வைப்பது எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

மதுரை எய்ம்ஸ் மருத்துவமனைக்கு அடிக்கல் நாட்டப்பட்டு நீண்டகாலம் ஆகியும் நிதி ஒதுக்கி கட்டுமான பணியை தொடங்காத ஒன்றிய அரசை கண்டித்து, மதுரை மாநகரில் தென் மாவட்டங்கள் முழுவதும் இளைஞர்களை அணிதிரட்டி பெருந்திரள் நூதனப்போராட்டம் நடத்துவது எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் கூட்டத்தில் நீட்தேர்விலிருந்து விலக்கு அளிக்கும் தமிழ்நாடு சட்டமன்ற மசோதாவை ஆளுநர் குடியரசு தலைவருக்கு அனுப்பி வைக்கவேண்டும் எனவும், தமிழ்நாடு வேலை வாய்ப்பு அலுவலகத்தில் வேலைக்காக பதிவு செய்து காத்திருக்கும் இளைஞர்களுக்கு படிப்புக்கேற்ற வேலை வழங்கவேண்டும் எனவும், அரசு மற்றும் ஆசிரியர் காலிப்பணியிடங்களை உடனே நிப்ப வேண்டும் எனவும், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்தக்கூடிய தேர்வுகளையும் ஆசிரியர் தகுதி தேர்வு வாரியம் நடத்தக்கூடிய தேர்வுகளையும் முறைப்படுத்த வேண்டுமெனவும்,

தேர்வர்கள் விண்ணப்பிக்க போதிய கால அவகாசம் வழங்குவதோடு அவர்களுக்கு தேவையான போக்குவரத்து உதவிகளை செய்து தருவதோடு, இத்தேர்வுகளில் நடைபெறும் முறைகேடுகளையும், ஊழல்களையும் தடுத்து நிறுத்த வேண்டும் எனவும், பெண்கள் மீதான பாலியல் வன்முறை வழக்குகளை விரைந்து விசாரித்து நீதி வழங்கிடவும்,

பாலின சமத்துவத்தை வளர்த்தெடுக்க பள்ளி கல்லூரிகளில் பாலியல் கல்வியை வழங்கிடவும், கல்வி வளாகங்களில் மற்றும் பணிபுரியும் இடங்களில் பெண்கள் பாதுகாப்பை உறுதி செய்ய சட்டங்களை முறையாக அமல் படுத்திடவும், சாதி ஆணவ படுகொலைகளை தடுக்க தனிச்சட்டம் இயற்றிட வேண்டும் எனவும்

மேலும் ஆன்லைன் சூதாட்டத்தால் ஏராளமான குடும்பங்கள் பாதிப்படைந்து வருகிறது. இதனால் தற்கொலை சம்பவங்களும் நடைபெறுகின்றன.

கார்ப்ரேட் கம்பெனிகளின் நலனுக்காக ஏழை எளிய மக்களின் பணம் சூறையாடப்படுவதை தடுக்க தமிழ்நாட்டில் ஆன்லைன் சூதாட்டத்திற்கு தடைதிக்க வேண்டும் எனவும் .

தமிழ்நாடு முழுவதும் தனியார் பேருந்துகள் அரசு நிர்ண யித்த கட்டணத்தை விட அதிகமாக வசூலிக்கிறார்கள் அதனை தடுத்து நிறுத்தவேண்டும்.

சென்னை ஐ.ஐ.டி.யில் தொடர்ந்து சாதிய பாகுபாடு கடைபிடிக்கப்படுகிறது. தற்போது பாலியல் குற்றங்களும் நிகழ்கின்றன.

எனவே சென்னை ஐ.ஐ.டி.யில் சாதிய பாகுபாட்டோடு நடந்து கொள்ளும் பேராசியர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும்,

பாலியல் குற்றம் புரிவோர்களை கைது செய்து செய்து சிறையிலடைக்கவேண்டும் எனவும் மேலும்

தேனியிலிருந்து – சென்னைக்கு தினசரி இரயில் இயக்க வேண்டும் எனவும்,

நியூட்ரினோ ஆய்வுமையம் அமைக்கப்படுவதை ரத்து செய்யவேண்டும்

திண்டுக்கல்லிருந்து சபரிமலைக்கான இரயில் பாதையை அகல இரயில் பாதையாக மாற்றியமைக்க வேண்டும் எனவும் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

## மே 15-ல் சென்னையில்

# தேசிய கல்விக் கொள்கைக்கு எதிராக தேசிய மாநாடு

அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் சார்பில் தேசிய கல்விக் கொள்கைக்கு எதிராக தேசிய அளவிலான மாநாடு வருகின்ற மே 15ஆம் தேதி சென்னையில் பி.டி.தியாகராயர் அரங்கில் நடைபெறுகிறது. இதில் பல்வேறு மாநிலங்களின் கல்வி அமைச்சர்கள், கல்வியாளர்கள், பேராசிரியர்கள், மாணவ பிரதிநிதிகள் உள்ளிட்டோர் பங்கேற்கிறார்கள்.

அதற்கான மாநாட்டு வரவேற்புக் குழுக் கூட்டம் கடந்த 16.04.2022 அன்று சென்னையில் பாலன் இல்லத்தில் மாநில தலைவர் மௌ.குணசேகர் தலைமையில் நடைபெற்றது.

கல்வியாளர் பிரின்ஸ் கஜேந்திரபாபு, பேராசிரியர் கதிரவன் ஆகியோர் இம்மாநாட்டின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தனர். மேலும், கட்சியின் தேசியக் குழு உறுப்பினர் கோ.பழனிச்சாமி, மாணவர் பெருமன்ற மாநில செயலாளர் தினேஷ் சீரங்கராஜ் உரை நிகழ்த்தினர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன் கலந்துகொண்டு நிறைவுரையாற்றினார்.

இக்கூட்டத்தில், வரவேற்புக் குழுத் தலைவராக மனோமணியம் சுந்தரலிங்கனார் பல்கலைக்கழகத்தின் மேனாள் துணைவேந்தர் மு.வசந்திதேவி, துணைத் தலைவர்களாக டெல்லி பல்கலைக்கழகத்தின் முன்னாள் பேராசிரியரும், மத்திய ஆலோசனை கல்விக் குழுமத்தின் மேனாள் உறுப்பினரும், கல்வியாளருமான அனில் சட்கோபால், சென்னை பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் முனைவர் சித்திக், எழுத்தாளர் பொன்னீலன், பேராசிரியர் சிவக்குமார், பேராசிரியர் கருணானந்தம், முனைவர் அரசு, டாக்டர் ஜி.ஆர். இரவீந்திரநாத், வழக்கறிஞர் ப.பா.மோகன், பேராசிரியர் வெங்கடாசலபதி, பேராசிரியர் கதிரவன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

செயலாளராக மாநில செயலாளர் தினேஷ் சீரங்கராஜ், துணைச் செயலாளர்களாக ஏஐடியுசி தேசிய செயலாளர் வகிதா நிஜாம், வங்கி ஊழியர் சங்க நிர்வாகி முரளி, மாதர் சம்மேளன மாநில செயலாளர் மஞ்சுளா, இளைஞர் பெருமன்ற மாநில தலைவர் த.கு.வெங்கடேஷ், ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாநில செயலாளர்கள் கீ.சு.குமார், எஸ்.சிவா, கலை சேதுலட்சுமி, சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர் மோ.ரேணுகா, இந்திய வழக்கறிஞர் சங்க நிர்வாகி ஸ்டாலின், இஸ்கப் சென்னை மாவட்டச் செயலாளர் செந்தில், ரயில்வே மகேந்திரன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். பொருளாளராக மாநில தலைவர் மௌ.குணசேகர் தேர்வு செய்யப்பட்டார்.

மேலும், கல்வியாளர் பிரின்ஸ் கஜேந்திரபாபு, ஏஐடியுசி நிர்வாகி பீட்டர் துரைராஜ், ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க வடசென்னை மாவட்டச் செயலாளர் ஜி.சுப்பிரமணியம், மாநிலக் குழு உறுப்பினர் உதயகுமார், மாணவர் பெருமன்ற மாநில துணைச் செயலாளர் இரா. ராமசாமி, துணைத் தலைவர் ஆ.பிரகாஷ், வடசென்னை மாவட்டச் செயலாளர் அன்பரசன், நிர்வாகிகள் ஜெபா, விக்னேஷ் மற்றும் மாணவர் பெருமன்ற மாநிலக் குழு உறுப்பினர்கள் ஆகியோரை உள்ளடக்கிய விரிவான வரவேற்புக் குழு அமைக்கப்பட்டது.

## பெயர் சூட்டு விழாவில் ஜனசக்தி வளர்ச்சி நிதி

விருதுநகர் மாவட்டம் கிருஷ்ணன் கோவிலில் சிபிஐ வட்ட மாநாடு நடைபெற்றது.அதில் வட்ட செயலாளர் எஸ்.பலவேசம்ப. பாண்டியம்மாள் மகன் ப.ராஜேஸ்வரன்ரா.ஹேமா மகன் பெயர்சூட்டும் நிகழ்வு நடைபெற்றது. மாநில நிர்வாககுழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ "அனிஷ்" என்ற பெயரை வைத்தார். இந்நிகழ்வில் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, எஸ்.பழனிக்குமார், வி.பொன்னு பாண்டியன் எக்ஸ் எம்எல்ஏ உள்பட பலர் கலந்து கொண்டார்கள். அப்பொழுது ஜனசக்தி வளர்ச்சி நிதியாக ரூ.1000 வழங்கப்பட்டது.

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் 17வது பெரம்பூர் தொகுதி மாநாடு

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பெரம்பூர் தொகுதி 17வது மாநாடு ஏப்.3 அன்று எஸ்.எம்.மஹாலில் நடைபெற்றது.

மாநாடு துவங்குவதற்கு முன்னர் எஸ்.கே மஹாலில் இருந்து அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் பெரம்பூர் தொகுதி செயலாளர் எம்.கண்ணன் மற்றும் அனைத்து தோழர்களும் செம்படையுடன் அணிவகுத்து தியாகிகள் நினைவு ஜோதியை ஊர்வலமாக எடுத்து வந்தனர். அதை பெரம்பூர் பகுதியின் மூத்த தோழர் ராஜாராம் பெற்றுக்கொண்ட பின்னர் தியாகிகள் நினைவு ஸ்தூபிக்கு செவ்வணக்கம் செலுத்தி புகழஞ்சலி செய்தனர்.

மாநாட்டின் தலைமைக் குழுவாக ஆனந்தன், செண்பகம், தர்மலிங்கம் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். கட்சியின் முன்னாள் பெரம்பூர் பகுதி செயலாளர் முதுபெரும் தோழர் சிற்பி மாணிக்கம் செங்கொடி ஏற்றி மாநாட்டை துவக்கி வைத்தார். தமிழ்நாடு ஏஐடியுசி பொதுச்செயலாளர் டி. எம்.மூர்த்தி துவக்க உரையாற்றினார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன், வடசென்னை மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.மூர்த்தி, மாநிலக்குழு உறுப்பினர் கீ.சு.குமார், மாவட்ட துணைச்செயலாளர் வசந்தகுமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். பெரம்பூர் தொகுதி செயலாளராக இரா.கோட்டி சுரேஷ் தேர்வு செய்யப்பட்டார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன், எதிர்கால கடமைகளைப் பற்றியும் கொள்கை கோட்பாடுகளை பற்றியும் எடுத்துரைத்து நிறைவு செய்தார். பெரம்பூர் தொகுதி குழு கூட்டம் ஏப்.17 அன்று வியாசர்பாடி பெரம்பூர் தொகுதி அலுவலகத்தில் சிகாமணி தலைமையில் நடைபெற்றது. வடசென்னை மாவட்ட செயலாளர் எம்.எஸ்.மூர்த்தி, துணை செயலாளர் எம். வசந்தகுமார், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் ஆ.சுப்பிரமணி, ஜி.சுப்பிரமணி, கருணாகரன், பாஸ்கர், அருள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பெரம்பூர் தொகுதி துணைச் செயலாளர்களாக வழக்கறிஞர் ஜி.அன்பரசு, வழக்கறிஞர் கே.தணிகைவேல் ஆகியோரும், பொருளாளராக ஆர்.சிகாமணியும் தேர்வு செய்யப்பட்டனர்.

## திருப்பூர் ராஜேஸ்வரி மறைவு

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினரும், திருப்பூர் மாவட்ட கட்சி முன்னோடித் தலைவர்களில் ஒருவருமான தோழர் ஜி.காளியப்பனின் வாழ்விணையர் திருமதி ராஜேஸ்வரி (74) ஏப்.15 அன்று திருப்பூர், தண்ணீர்பந்தல் காலனியில் உள்ள அவரது இல்லத்தில் காலமானார் என்ற துயரச் செய்தியறிந்து ஆழ்ந்த வேதன அடைந்தோம். ராஜேஸ்வரி குடும்பப் பொறுப்புகளையும், தொழில் சார்ந்த பணிகளையும் நிர்வகித்து, தோழர் ஜி.காளியப்பன் பொது வாழ்க்கைக்கு பெரும் உதவி செய்தவர். இவர்களுக்கு திருமணமான இரண்டு மகள்கள் இருக்கிறார்கள்.

புற்று நோயால் பாதிக்கப்பட்ட ராஜேஸ்வரி சில மாதங்களாக சிகிச்சை பெற்று வந்தார். இருப்பினும் நோயின் தீவிரம் அதிகரித்து உயிரிழந்தார். அன்னாரின் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரை பிரிந்து வாடும் தோழர் ஜி.காளியப்பன் உள்ளிட்ட குடும்பத்தினருக்கு ஆறுதலை தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு மாநிலக்குழுவின் சார்பில் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

## விருதுநகரில் மின்னல் தாக்கி 4 பேர் பலி


### கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்கள் நேரில் சென்று ஆறுதல்

விருதுநகரில் ஏப்ரல் 13 மாலையில் இடிமின்னலுடன் பலத்த மழை கொட்டியது. விருதுநகர் பாண்டியன் நகர் தெருவில் சதீஷ் குமார் வீட்டின் கட்டுமான பணி நடைபெற்று வருகிறது. வீட்டின் மேல்மாடியில் கட்டுமான பணியில் 6 பேர்கள் ஈடுபட்டிருந்தனர். மழை வந்தவுடன் பூசிய பகுதி கரைந்து விடாமல் இருக்க தார்பாயை வைத்து மூடிக் கொண்டிருந்தனர். அப்போது பலத்த மழையுடன் மின்னல் வெட்டியது. அதில் அங்கிருந்த ஜெயசூர்யா(22), கார்த்திக்ராஜா(28), முருகன்(24), ஜக்கம்மாள்(55 )ஆகிய நால்வரும் மின்னல் தாக்கி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். படுகாயமடைந்த மற்ற இருவரும் மருத்துமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். தகவலறிந்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம், மாவட்ட துணை செயலாளர் எஸ்.பழனிக்குமார், மாநில குழு உறுப்பினர் பாலமுருகன், ஒன்றிய செயலாளர் சக்கணன், நகர செயலாளர் முத்துக்குமார், தஒவாஇ முருகேசன் ஆகியோர் நேரில் சென்று அவர்களது உறவினர்களுக்கு ஆறுதல் கூறினார்கள். இறந்த இளைஞர்களின் உறவினர்கள் அழுத காட்சி அனைவரையும் சோகத்தில் ஆழ்த்தியது.

# தோழர் ப. மாணிக்கத்தின் தியாக வாழ்வு

உலகத்தில் எத்தனையோ மனிதர்கள் பிறக்கிறார்கள் இறக்கிறார்கள். ஆனால், அத்தனை பேரும் சரித்திரத்தில் இடம் பெறுவதில்லை. சரித்திரத்தில் இடம் பெறுகிற மனிதர்களின் வாழ்க்கை பயணம் என்பது மலர்ப்படுக்கை அல்ல, முள்படுக்கை ஆகும். அவற்றைக் கடந்து வருபவர்கள் வரலாற்றில் இடம் பிடிக்கிறார்கள். அத்தகைய மகத்தான மனிதர்களில் ஒருவர் தான் தோழர் ப. மாணிக்கம். அவரின் தியாக வாழ்க்கையை நாமெல்லாம் அறிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும்.

“நான் கட்சியில் சேர்ந்தது ரகசியமாக அமைதியாக நடந்தது. அந்த ஆண்டுகளில் அரசியல் வட்டாரங்களில் மக்களிடம் பேசப்பட்டு வந்த பிரதான பிரச்சினை நாட்டின் விடுதலையாகும். பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து எப்படி விடுதலை அடைவது? காந்திய சத்யாகிரக வழியா? வெகுஜன போராட்டம் வழியா? கம்யூனிஸ்ட் வழியா என்று விவாதிக்கப்பட்டது. என்னை கவர்ந்த வழி வெகுஜன போராட்ட வழியாகிய கம்யூனிஸ்ட் வழியே ஆகும். இந்த அரசியல் காரணம் மட்டும்தானா இல்லை பிற காரணங்களும் உள்ளன. இப்படி தான் கம்யூனிஸ்ட் கட்சியை தேர்ந்தெடுத்த காரணத்தை விளக்குகிறார் ப. மாணிக்கம்.




விடுதலைப் போராட்ட சம்பவங்கள், பிரிட்டிஷ் ஆட்சி அடக்குமுறை, ஏழை எளிய மக்களின் துன்பம் நிறைந்த வாழ்க்கை மனதை உறுத்திக்கொண்டே இருந்தது. இதற்கு எல்லாம் முடிவு கட்டவே இந்த வாழ்க்கையை அவர் தேர்வு செய்கிறார்.

இந்த கரடுமுரடான வாழ்க்கைப் பாதையை இவர் மட்டும் தெரிவு செய்யவில்லை. இவரைப் போன்ற சக தோழர்களான பி. சீனிவாசராவ், ப.ஜீவானந்தம், ஏ எஸ் கே, கே.பாலதண்டாயுதம் ஆகியோரும் தேர்வு செய்து. பட்ட இன்னல்களை, துன்பங்களை, துயரங்களை எல்லாம் பதிவு செய்கிறார்.

அதேபோன்று நமது இயக்க ஏடான ஜனசக்தி 50 ஆண்டுகள் கடந்து வந்த பாதை குறித்தும் மிக ஆழமாக பதிவு செய்துள்ளார். ஒரு கம்யூனிஸ்ட் பத்திரிகை என்பது எத்தகைய இடர்பாடுகள் எல்லாம் தாண்டி பயணம் செய்து இருக்கிறது என்பதை இதன் மூலம் நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

அதேபோன்று 1995 இல் நடைபெற்ற உலகத்தமிழ் மாநாடு குறித்தும், பிரஞ்ச் இந்திய விடுதலைப் போராட்ட இயக்கம் குறித்தும் விவரித்துள்ளார்.

இந்த மகத்தான மனிதரின் தியாக வாழ்க்கை குறித்து தோழர் ஆர்.நல்லகண்ணு அவர்கள் எழுதிய தோழர் ப.மாணிக்கத்தின் தியாக வாழ்வு என்ற கட்டுரையும் இதில் இணைக்கப்பட்டுள்ளது. இது அவரது புகழ் மகுடத்தில் பதிக்கப்பட்டுள்ள வைரக்கல் ஆகும். நமது மகத்தான தலைவர் ப. மாணிக்கத்தின் தியாக வாழ்வை அறிந்து கொள்ள இந்நூலை அனைவரும் அவசியம் வாங்கிப் படிக்க வேண்டும்.


**– இன்சுவை பாரதி**

**வெளியீடு : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41–பி, சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை 50**
**பக்கங்கள் : 104 விலை : ரூ.80**

## நூல் நயம்

# படைப்பின் அற்புதத் தருணங்கள்

படைப்பின் அற்புதத் தருணங்கள் மார்க்ஸ் ஏங்கல்ஸ் எழுத்துக்கள் பற்றி ஓர் அறிமுகம் என்னும் தலைப்பில் பேராசிரியர் ந. முத்து மோகன் அவர்கள் எழுதிய நூல் இது. தனது துன்பங்களை எல்லாம் துறந்து. பிறர் துன்பங்களைப் போக்குவதற்கான மார்க்கத்தை கண்டுபிடித்து. அதை மனித குலத்தின் முன்பு வைத்த தருணம் தான் மார்க்ஸ் , ஏங்கல்ஸ்சின் அற்புதத் தருணங்களாக இருக்கமுடியும். ஊண், உறக்கம் துறந்து.இரவென்றும் பகலென்றும் பாராமல். படிப்பு படிப்பு ஆய்வு என ஒவ்வொரு நாளும் தனது சிந்தனைகளை செலவிட்டு. ஓயாமல் உழைத்து மூலதனம் எனும் அற்புத பெட்டகத்தை மனித குலத்திற்கு அளித்த தருணத்தை அற்புத தருணம் என நாம் கொள்ளலாம்.




தத்துவம் என்பது தத்துவ ஞானிகளுக்கானது மட்டுமே என்கிற கருத்தை மார்க்சியம் தகர்த்தது. வரலாற்றையும் தன் காலத்திய அரசியல் பொருளாதாரத்தையும் காரல் மார்க்ஸ் பாட்டாளிவர்க்க நோக்கிலிருந்து அணுகினார். மார்க்சின் சோஷலிச பொருளாதாரம் என்பதை முன்வைத்து இன்னும் ஆழமாக பேச வேண்டிய தருணம் இது. மார்க்ஸ் வெறும் தத்துவப் பேராசிரியர் மட்டுமல்ல, அவர் வாசிக்காத முக்கிய உலக இலக்கியங்கள் அதிகம் இல்லை. வாழ்வின் இறுதிக் கட்டத்தில் கூட அவர் படிக்க முனைந்த நூல் ஒன்றை அவர் படிக்க இயலா மல் போனதையும், பின் அதை ஏங்கல்ஸ் அறிமுகம் செய்ததையும் நூலாசிரியர் குறிப்பிடுகிறார். இதுவே மார்க்சின் அடங்காத வாசிப்பின் தாகம் ஆகும். இந்தப் படிப்பின் ஆர்வமே அவரை புதியவனைப் பற்றி சிந்திக்கவும், எழுதவும் தூண்டியது எனலாம். மார்க்ஸ் வெறும் தத்துவவியலாளர் மட்டுமோ, பொருளாதார அறிஞர் மட்டுமே அல்ல, அவர் ஒரு இலக்கியவாதியும் கூட. அவர் பல உலக இலக்கியங்களை அறிந்தவர் என்பதனால் அவரது எழுத்துக்களில் அவற்றை நாம் காணலாம். எல்லாவற்றையும் வர்க்கக் கண்ணோட்டத்துடன் அணுகுவதுதான் மார்க்சியம் குறிப்பிடும் அறிவியல்பூர்வமான பார்வை என சுட்டிக்காட்டுகிறார். மார்க்ஸ் ஏங்கல்சின் வரலாற்று சிறப்புமிக்க கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை. அவர்களின் ஒரு மிக முக்கியமான படைப்பு ஆகும். இது உலக கம்யூனிஸ்டுகளுக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கமாக உள்ளது.

மார்க்ஸ் ஏங்கல்ஸ் படைப்புகளின் அற்புதங்களை விளங்கிக்கொள்ள அவர்களது மூல நூலைப் படிப்பது அவசியமாகும் என்பதை வாசகர்களுக்கு விளக்கவே, “படைப்பின் அற்புதத் தருணங்கள்” மார்க்ஸ் ஏங்கல்ஸ் எழுத்துக்கள் பற்றி ஒரு அறிமுகம் என்னும் இந்நூலை பேராசிரியர் ந. முத்து மோகன் எழுதியுள்ளார். இந்நூலை அனைவரும் வாங்கிப் படிக்கவும்

**நூலாசிரியர்கள் : ந. முத்து மோகன்**
**வெளியீடு : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41பி, சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை 50**
**பக்கங்கள் : 232 விலை: ரூ.250**

**வாரம் தோறும் வெளிவரும்**
**ஜனசக்தி - நூல் நயம்**
புத்தக விமர்சன பகுதிக்கு அனைத்துப் பதிப்பகங்களின் புத்தகங்களும் வரவேற்கப்படுகின்றன. புத்தகங்களை அனுப்புவோர் 2 பிரதிகள் அனுப்ப வேண்டும்.
தொடர்புக்கு : 8220468816

அனுப்பவேண்டிய முகவரி:
**ஜனசக்தி**
பாவை பிரிண்டர்ஸ் மாடி
142/16 ஜானி ஜான்கான் ரோடு, இராயப்பேடடை,
சென்னை - 600014

சுழலும் உலகம்

செய்தித்தொகுப்பு: அருண் அசோகன்

## உக்ரைன் போர்




# போர் வேண்டாம்: வர்க்கப் போராட்டமே தீர்வு!

சர்வதேச கம்யூனிச போக்கு (international communist tendency) எனும் அமைப்பின் தோழர்கள் ஒன்றுகூடி பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தில் உறுதிப்பாடுமிக்க புரட்சியாளர்களைக் கொண்டு “போர் வேண்டாம்; வர்க்கப் போராட்டமே தீர்வு” எனும் பெயரில் குழுக்களை அமைத்துள்ளது. இது ஒரு சர்வதேச அளவிலான முன்னெடுப்பு என்று கருத்துத் தெரிவித்துள்ள இவ்வமைப்பு இதுபோன்ற குழுக்களை உலகம் முழுவதும் அமைந்திடுமாறு அறைகூவல் விடுத்துள்ளது.

தற்போதைய காலச் சூழலில், பாட்டாளி வர்க்கப் போராட்டங்களின் கள எதார்த்தம் மற்றும் புரட்சிகர அமைப்புகளின் நிலை ஆகியவற்றைக் கவனத்தில் கொண்டு அணுகும் பட்சத்தில், இன்றைய கால கட்டத்தில் சிதறிக் கிடக்கும் புரட்சிகர குழுக்களின் பலத்தை ஒன்று சேர்க்க வேண்டும், ஒரு பரந்துபட்ட உழைக்கும் வர்க்க அணியை உருவாக்க வேண்டும் என்பதே காலச் சூழல் நமக்கு உணர்த்தும் செய்தியாகும். இந்த லட்சியம் சாதாரணமாகத் தோன்றினாலும் கூட, தற்போதைய காலச் சூழல் மற்றும் சாத்தியப்பாடுகளுக்கு உரிய வகையில் ஈடு கொடுப்பதாக இருக்கிறது.

ரஷ்யா – உக்ரைன் போர் குறித்து இவ்வமைப்பு தெரிவித்துள்ள கருத்துக்கள் பின்வருமாறு:

உக்ரைன் மீதான ரஷ்ய படையெடுப்பு ஒரு தனித்த நிகழ்வுத் தோற்றமில்லை. 1945ஆம் ஆண்டிலிருந்து இதுவரை நாம் கண்டிராத ஒரு போர் அச்சுறுத்தலை முன்வைக்கும் ஏகாதிபத்திய சக்திகளுக்கு இடையிலான போட்டிக் காலத்தின் தொடக்கமாகும்.

அனைத்து நாடுகளும் முதலாளித்துவ பொருளாதார அமைப்புக்கு உள்ளே இருக்கின்றன. பல தசாப்தங்களாக நீடித்து வரும் முதலாளித்துவ பொருளாதார நெருக்கடி தீர்க்கப்பட முடியாமல் உள்ளது. அதன் விளைவாகவே ஏகாதிபத்தியங்களுக்கு இடையிலான போட்டி தீவிர மடைந்து வருகிறது. பொருளாதார நெருக்கடிகளைக் கையாள பல்வேறு வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டிய கட்டாயத்திற்கு முதலாளித்துவம் உள்ளாகிறது. இதன் காரணமாக உழைக்கும் வர்க்க மக்கள் மேலும் தீவிரமான சுரண்டலுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள்; வேலை இழப்புகள் அதிகரிக்கின்றன; உழைக்கும் மக்கள் உருவாக்கும் செல்வங்களில் அவர்களுக்கான பங்கு தொடர்ச்சியாகக் குறைக்கப்படுகிறது. இத்தகையதொரு பொருளாதார அமைப்பு போருக்கு வித்திடுவதோடு மட்டுமின்றி அதன் கட்டுங்கடங்காத லாப நோக்கம் இப்பூமண்டலத்தையும் அழிவுக்கு உள்ளாக்கும்.

உலகமயம், நிதிமயம் மற்றும் நவீன தாராளமயம் ஆகிய அனைத்தும் 2008ஆம் ஆண்டில் நீர்குமிழிகளாக நிலைகுலைந்து போயின. இந்த ஏற்பாடுகளால் முதலாளித்துவ பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க முடியவில்லை. முதலாளித்துவ உள்முரண்பாடுகள் மேலும் தீவிரமடைந்துள்ளன. அவற்றின் கோரப்பிடியிலிருந்து எந்த ஒரு அரசும் தப்பிக்க முடியவில்லை. இத்தகைய முரண்பாட்டிற்கு மிகப் பொருத்தமான எடுத்துக் காட்டாக, 1980களில் மேற்குலக நாடுகள் அவற்றின் முதலீடுகளை தொழிலாளர்களுக்கு குறைந்த ஊதியம் வழங்கும் நாடு களுக்கு திருப்பிவிட்டதை சுட்டிக் காட்டலாம். 2008ஆம் ஆண்டு ஏற்பட்ட நெருக்கடியின் போது, நிதி அமைப்புகள் எதிர்கொண்ட பெரும் கடன்களைச் சம்மந்தப்பட்ட நாட்டின் அரசுகள் தலையிட்டு ஏற்றுக் கொண்டன. அவ்வாறு ஏற்றுக் கொள்ளாமல் இருந்திருந்தால், 1929ஆம் ஆண்டின்போது கூட நிகழாத ஒரு மாபெரும் உலக முதலாளித்துவ நெருக்கடியை இன்றைய உலகம் சந்தித்திருக்கும்.

முதலாளித்துவம், மூலதனத்தின் மாபெரும் மதிப்பிழப்பைப் பெரிதும் எதிர்நோக்கி இருக்கிறது. எனவே, போர் என்பது தேவைப்படுகிறது. போருக்கான தேவையும் சில காலத்திற்கு முக்கியத்துவம் பெறுகிறது. தத்தம் தேச நலன்களில் சமரசம் செய்து கொள்ள முடியாத கட்டாய சூழலில், போரை நோக்கிச் செல்வதைத் தவிர உலகத் தலைவர்களுக்கு வேறு வழிகள் தெரிவதில்லை. அதன் உச்சகட்டமாக போரும், மனித குலத்தை முற்றாக அழித்தொழிக்கக் கூடிய பயங்கர ஆயுதப் பிரயோகங்களும் நிகழ வாய்ப்புகள் அதிகரிக்கின்றன.

ஆனால், போர் எனும் இந்த பேரபாயத்தைத் தடுத்து நிறுத்தும் ஆற்றல் உலகின் உழைக்கும் வர்க்கத்திடம் மட்டுமே நிலைபெற்று நிற்கிறது.உலகின் செல்வத்தை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்கள் எனும் உலகளாவிய பொது அம்சத்தைக் கொண்டவர்கள் உழைக்கும் மக்கள் ஆவர். உழைக்கும் வர்க்கத்தின் கூட்டு பலம் முதலில் போருக்கான முயற்சிகளை உடைத்தெறியும். பின்னர், முதலாளித்துவ சமூக அமைப்பைத் தகர்த்தெறியும்.

உழைக்கும் மக்களுக்கு குறுகிய தேசிய உணர்வுகளோ, தேச நலன்களோ இல்லை. எனவே, ஒரு புதிய வர்க்கமற்ற சமுதாயத்தைப் படைக்கும் ஆற்றல் வாய்ந்தவர்களாக உழைக்கும் மக்கள் திகழ்கிறார்கள். அத்தகையதொரு புதிய சமுதாய அமைப்பில் உற்பத்தி முறையானது ஒரு சிலரின் லாபத்திற்காக அன்றி, அனைவரது தேவைகளையும் நிறைவு செய்யும் வண்ணம் வடிவமைக்கப்பட்டு கூட்டுறவு அடிப்படையில் இயங்கும். இந்த இலக்கை அடைந்திட உழைக்கும் வர்க்கம் ஸ்தாபன ரீதியாக அணிதிரட்டப்பட வேண்டும்.

ஊதிய குறைப்பு மற்றும் இதர பிரச்சனைகளுக்கான தங்களின் வழக்கமான போராட்டங்களை வலுப்படுத்திட தொழிலாளர்கள் வேலை நிறுத்தக் குழுக்கள் ஆகியவற்றை உருவாக்குவது, நிர்வாகிகளைத் தேர்ந்தெடுப்பது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமாகும். ஆனால், இவை மட்டுமே முதலாளித்துவ தாக்குதல்களைத் தடுத்து நிறுத்திடாது. ஒரு தொழிற்சாலையில் அல்லது ஒரு துறையில் நடத்தப்படும் தனித்த போராட்டங்களை முதலாளித்துவ சக்திகள் எளிதில் ஒடுக்கிவிட முடியும். எனவே, அனைத்து குழுக்களும் ஒன்றிணைந்து ஒரு பரந்துபட்ட வர்க்க இயக்கமாக வளர்ச்சியுற வேண்டும்.

**புரட்சிகர தன்மையுடைய தொழிலாளர்கள் இதர தொழிலாளர்களை அரசியல் ரீதியாக சர்வதேச பார்வை கொண்ட செயல்வீரர்களாக அணிதிரட்டி, அவர்களுக்கு ஒரு தெளிவான போராட்டப் பாதையை உருவாக்கி அளிப்பார்கள். முதலாளித்துவ சூழ்ச்சித் தாக்குதல்களால் பல தசாப்தங்களாக, தொழிலாளர் போராட்டங்கள் சரிவைச் சந்தித்து வரும் சூழலில் மேற்கூறியவை அனைத்தும் உடனடியாக நிகழ்ந்துவிடப் போவதில்லை. எனினும், முதலாளித்துவ அரசுகள் மற்றும் அதன் தலைமைகள் தீட்டியுள்ள அரசியல் சதித்திட்டங்கள் மற்றும் அவற்றுக்கு உலகத் தொழிலாளர்கள் கொடுக்க வேண்டிய பதிலடி குறித்த ஒரு எச்சரிக்கை சமிக்ஞையைதான் உக்ரைனில் தற்போது நிலவும் சூழல் சுட்டிக் காட்டுகிறது.**

தற்போதுள்ள பேரழிவுகரமான சூழலில் ஒரு வர்க்க அமைப்பு விரைவில் உருவாகும் என்பதில் ஐயமில்லை. சுரண்டல் மற்றும் போர் ஆகிய இரண்டையும் எதிர்த்துப் போராடும் அமைப்பு உருவாக்கப்பட வேண்டும். தற்போது உக்ரைனில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு ஏதேனும் ஒரு தீர்வு காணப்பட்டு, இந்த நெருக்கடி முடிவிற்கு வரலாம். ஆனால், அத்தகையதொரு மேலோட்டமான தீர்வு அடுத்தகட்ட ஏகாதிபத்திய போட்டி மற்றும் போர்களுக்கான விதைகளை நிச்சயம் ஊன்றிவிடும்.

முதலாளித்துவமும் – போரும் ஒன்றே ஆகும். எனவே, முதலாளித்துவம் ஒழிக்கப்பட வேண்டும்.

ஆகையினால், புரட்சியாளர்களாகிய நாம் உலகில் எந்தப் பகுதியில் இருப்பினும் குறுகிய தேசியவாதத்திற்கு எதிரான, வர்க்கப் போராட்டமே முதலாளித்துவத்தை வீழ்த்தக் கூடிய ஒரே போராட்டம் எனும் உறுதிப்பாடு கொண்ட தனி நபர்களையும், குழுக்களையும் அறைகூவி அழைத்து “போர் வேண்டாம்; வர்க்கப் போராட்டமே தீர்வு” எனும் குழுக்களை அமைத்திடுங்கள் என்று முன்மொழிகிறோம்.

இந்த அறைகூவல் பிரிந்து சிதறிக் கிடக்கும் புரட்சிகர சக்திகளை ஒன்றிணைத்து ஒரு பரந்து பட்ட உழைக் கும் வர்க்கத்தை கட்டமைக்கும் என்ற செய்தியை முன் னெடுத்துச் செல்வோம்.

இவ்வாறு இந்த அமைப்பு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.






## அஜாய் பவனில்

# பி.சி.ஜோஷி, அம்பேத்கர் பிறந்தநாள் கொண்டாட்டம்

ஏப்ரல் 14 பிசி ஜோஷி மற்றும் டாக்டர் பி ஆர் அம்பேத்கர் இருவரின் பிறந்த நாள்விழா சிபிஐ தலைமையகம் அஜாய்பவனில் ஏப்ரல் 14ல் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அவர்களின் நினைவுக்குச் சிபிஐ தலைமையகத்தில் பணியாற்றும் பல தோழர்களோடு மற்றவர்களும் மலரஞ்சலி செலுத்தினர்.

பிசி ஜோஷி 1935 முதல் 1947வரை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்து கட்சி மற்றும் பல்வேறு வெகுஜன அமைப்புகள் செல்வாக்குடன் வளர வழிகாட்டியவர். அண்ணல் அம்பேத்கர் இந்திய அரசியலமைப்புச் சட்டச் சிற்பிகளில் ஒருவர், சாதியப் பாகுபாடு மற்றும் சுரண்டலுக்கு எதிராகப் போராடியவர்.

கட்சியின் தேசியச் செயலக உறுப்பினர் டாக்டர் பிகே காங்கோ மற்றும் புகழ்பெற்ற பல ஆளுமைகள் கலந்து கொண்ட விழாவில் சிபிஐ பொதுச் செயலாளர் டி ராஜா உரையாற்றினார்:

அண்ணல் அம்பேத்கர் குறித்து டி ராஜா உரையில்,

தாழ்த்தப்பட்ட மக்களின் உயர்வுக்கான, சுரண்டப்பட்டவர்களுக்கான போராட்டங்களில் அம்பேத்கர் பங்களிப்புகளை நினைவு கூர்ந்தார். புறக்கணிக்கப்பட்டு ஒதுக்கப்பட்டவர்களைச் சமூகத்தின் பொது நீரோட்டத்தில் ஏனைய உயர்சாதியினருக்குச் சமமாக, பாகுபாடின்றி கொண்டுவர அவர் நடத்திய போராட்டங்கள் பலபல. சாதிகளை ஒழிப்பது குறித்த கேள்வி மீதும் அதற்கான போராட்டங்களை நடத்த வேண்டியதன் முக்கியத்துவத்தின் மீதும் கவனத்தைக் குவித்தவர் அண்ணல் அம்பேத்கர் என்பதைச் சுட்டிக் காட்டினார்.

சமத்துவம் மற்றும் சமூகநீதி குறித்த முக்கியமான சமூகக் கோட்பாடுகள் மீது மார்க்சியத்துடன் அம்பேத்கர் உடன்படுகிறார். ‘கௌதம புத்தருடன் (சமமாக) யாரும் நெருங்கி இருப்பார்கள் எனில், அது காரல் மார்க்ஸ்தான்’ என அண்ணல் அம்பேத்கர் கூறியிருக்கிறார். உற்பத்திச் சாதனங்களின் மீது சமூக உடைமையுடன் கூடிய, சுரண்டலற்ற எதிர்காலச் சமுதாயம் குறித்த மார்க்சியக் கருத்துடனும் அம்பேத்கரின் கருத்து உடன்படுகிறது.

‘சிறுபான்மையினர் உரிமை பாதுகாப்பை அம்பேத்கர் வலியுறுத்தினார்’ சிறுபான்மையினர் உரிமைகளைப் பாதுகாப்பது பெரும்பான்மை மக்கள் சமூகத்தினரின் தனித்த பொறுப்பாகும் என்றார்.

இந்தியாவில் கம்யூனிச இயக்கத்தைக் கட்டி வளர்த்த பிசி ஜோஷி குறித்த உரை:

1935ல் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் ஆனபோது தோழர் பிசி ஜோஷிக்கு வயது 28 மட்டுமே. அவருடைய திறன்மிக்க தலைமையில் கம்யூனிஸ்ட் கட்சி பெருந்திரள் சக்தியானது. அவர் பொதுச் செயலாளராக இருந்த காலத்தில்தான் பாசிச எதிர்ப்பு இயக்கம் ஐரோப்பாவிலும் இந்தியாவிலும் வளர்ந்தது. பாசிச எதிர்ப்பு மற்றும் ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளையும் ஒன்றிணைக்க அவர் பெரும் பாடுபட்டார். இந்தப் பின்னணியில்தான் நம்நாட்டில் மாணவர்களின் ஏஐஎஸ்எஃப், விவசாயச் சங்கமான ஏஐகேஎஸ், முற்போக்கு எழுத்தாளர் அமைப்பு பி.டபிள்யூ.ஏ., இந்திய மக்கள் நாடக மன்றம், இப்டா போன்ற பெருந்திரள் மக்கள் அமைப்புக்கள் உருவாக்கப்பட்டு, செழித்து வளர்ந்தன. தேசிய விடுதலைக்கான போராட்ட இயக்கத்தில் அவர் தலைமையில் கம்யூனிஸ்ட் கட்சி தீவிரமாக ஈடுபட்டது.

பி.சி.ஜோஷி இந்திய அரசியல் மற்றும் கலாச்சாரத்தின் மீது ஆழமான தாக்கத்தை விட்டுச் சென்றவர், நாம் அனைவரும் அவரிடமிருந்து கற்றுக் கொள்வதற்கு ஏராளம் இருக்கிறது” என தோழர் ராஜா புகழாரம் சூட்டி தம் உரையை நிறைவு செய்தார்.

## அமைதி மற்றும் சமூக நல்லிணக்கத்தை பாதுகாத்திடுக!

# வகுப்புவாத வன்முறையாளர்களுக்கு கடுமையான தண்டனை அளித்திடுக!

## எதிர்க்கட்சிகள் கூட்டறிக்கை

சமூக அமைதி மற்றும் நல்லிணக்கத்தை பாதுகாத்திட, வகுப்புவாத குவிமையப்படுத்துதலை தீவிரப்படுத்த விரும்பும் சக்திகளின் சூழ்ச்சிகளை முறியடித்திட காங்கிரஸ், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, தி.மு.க., திரிணாமுல் காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ், தேசிய மாநாட்டுக் கட்சி, பார்வர்டு பிளாக், சிபிஐ எம்.எல்., புரட்சிகர சோசலிஸ்ட் கட்சி ஆகிய எதிர்க்கட்சிகள் பொதுமக்களுக்கு கூட்டாக அறைகூவல் விடுத்துள்ளன.

இது குறித்து வெளியிடப்பட்டுள்ள கூட்டறிக்கையில் கூறியுள்ளதாவது:

சமுதாயத்தில் பிளவுகளை உண்டாக்க உணவு, உடை, மத நம்பிக்கை, திருவிழாக்கள் மற்றும் மொழிகள் ஆகியவற்றை ஆளும் தரப்பினர் வெளிப்படையாக பயன்படுத்தும் நிலை மிகுந்த வருத்தமளிப்பதாக உள்ளது. அரசாங்கத்தின் ஆதரவுடன் வெறுப்புணர்வை தூண்டும் பேச்சுகள் நாட்டில் அதிகரித்து வருவது மிகவும் கவலைக்குரியதாக இருக்கிறது. அவ்வாறு பேசுவோர் மீது எவ்வித கடும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுவதில்லை.

நாட்டின் பல்வேறு மாநிலங்களில், அண்மைக் காலமாக அதிகரித்து வரும் வகுப்புவாத வன்முறைச் சம்பவங்களை வன்மையாகக் கண்டிக்கிறோம். எண்ணற்ற பகுதிகளில் நடைபெற்ற இது போன்ற சம்பவங்களுக்கிடையே ஒத்த தன்மையுடைய அம்சம் இருப்பதாக வரும் செய்திகள் மிகுந்த வேதனையளிப்பவைகளாக உள்ளன. வெறுப்புணர்வைத் தூண்டும் பேச்சுக்களைத் தொடர்ந்து மூக்கத்தனம் மிக்க, ஆயுதம் ஏந்திய மதப் பேரணிகளும், வகுப்புவாத வெறியாட்டங்களும் கட்டவிழ்த்து விடப்படுகின்றன.


வெறுப்புணர்வை பரப்பிட அரசாங்க ஆதரவுடன் சமூக ஊடகங்கள் மற்றும் இதர ஊடகங்கள் தவறாக பயன்படுத்தப்பட்டு வருவது மிகுந்த கவலையளிப்பதாக இருக்கிறது.

தங்களது சொல்லும், செயலும், சமுதாயத்தில் மதவெறியைத் தூண்டுவோரைக் கண்டிக்கவும், தண்டிக்கவும் நாட்டின் பிரதமர் தவறிவிட்டார். இது குறித்து அவரது மவுனம் அதிர்ச்சியளிப்பதாக உள்ளது. வன்முறையில் ஈடுபடும் இதுபோன்ற ஆயுதம் ஏந்திய கூட்டத்தினர் அரசாங்க ஆதரவுடன் செயல்படுகிறார்கள் என்பதற்கு பிரதமரின் மவுனம் தக்க சான்றாக அமைந்துள்ளது.

பல நூற்றாண்டுகளாக இந்தியாவை வரையறை செய்து செழுமைப்படுத்தி வரும் சமூக நல்லிணக்க மாண்புகளை வலுப்படுத்திட ஒன்றிணைந்து பாடுபடுவோம் எனும் கூட்டு உறுதிப்பாட்டை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறோம்.

நமது சமுதாயத்தில் பிளவை உண்டாக்கி வரும் நச்சு சித்தாந்தங்களை எதிர்கொண்டு முறியடிப்போம் என்ற உறுதிப்பாட்டை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறோம். பல்வேறுபட்ட வேற் றுமைகளை முழு அளவில் மதித்துப் போற்றி கொண்டாடுவதன் மூலமே நமது நாடு வளம்பெறும் என்பதை வலியுறுத்துகிறோம். சமூக அமைதி மற்றும் நல்லிணக்கத்தை பாதுகாத்திட, வகுப்புவாத குவிமையப்படுத்துதலை தீவிரப்படுத்த விரும்பும் சக்திகளின் சூழ்ச்சிகளை முறியடித்திட பொதுமக்களுக்கு அறைகூவல் விடுக்கிறோம்.

சமூக அமைதி மற்றும் நல்லிணக்கத்தை பாதுகாப்பதற்காக தனித்தும், இணைந்தும் பாடுபட நாடு முழுவதும் உள்ள கட்சி அணிகளுக்கு அறைகூவல் விடுக்கிறோம். இவ்வாறு கூட்டறிக்கையில் கூறியுள்ளனர்.

தலித் உரிமைகள் இயக்கம்

DALIT RIGHTS MOVEMENT

தேசியக்குழு கூட்டம் ஏப்ரல் 29, 30 - 2022

மகாராஷா திருமண மண்டபம், டாக்டர் அம்பேத்கர் அரசு அறிவியல் கலைக் கல்லூரி அருகில், வியாசர்பாடி, சென்னை – 600 039.

29.04.2022 : பொது நிகழ்வு காலை : 9.00 மணி மகாராஜா திருமண மண்டபம்

தலைமை : புதுவை அ.ராமமூர்த்தி, தேசிய தலைவர், தலித் உரிமைகள் இயக்கம், வரவேற்புரை : G. சுப்பிரமணி மாவட்டச் செயலாளர், த.ஒ.வ.இ முன்னிலை : சாத்தூர் சு. பழனிக்குமார், பேராசிரியர் சேலம் மணிகண்டன், காஞ்சி ராமச்சந்திரன், தேனி செல்லன், நெல்லை லெனின் முருகானந்தம், மதுரை பூமிநாதன், N.S.பிரதாப்சந்திரன், தமிழ்த்தாய் வாழ்த்து : செல்வி சு. சுபாஷினி, செல்வி சு. சுவேதா, செல்வி தா. வசந்தபாரதி

கொடி ஏற்றுதல்: தோழர் D.ராஜா Ex.MP. CPI தேசிய பொதுச் செயலாளர்

தியாகச்சுடர் பெறுபவர்: தோழர் இரா.நல்லகண்ணு

மூத்த தலைவர், சி.பி.ஐ, தலைவர், தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம்

படத்திறப்பு: காரல் மார்க்ஸ் : நாகேந்திரநாத் ஒஜா தேசிய துணை தலைவர், தலித் உரிமைகள் இயக்கம் டாக்டர் அம்பேத்கர் : இரா. முத்தரசன், CPI மாநிலச் செயலாளர், தந்தை பெரியார் : V.S. நிர்மல், தேசிய பொதுச் செயலாளர், தலித் உரிமைகள் இயக்கம், நாராயணகுரு : J.M. ஆருண் Ex. M.P. சிறுபான்மை பிரிவு தலைவர், காங்கிரஸ் கட்சி, ப. மாணிக்கம் : சி.எச். வெங்கடாச்சலம், AIBEA அ.இ. பொதுச் செயலாளர், ப. ஜீவானந்தம் : நா. பெரியசாமி Ex. M.L.A. வி.தொ.ச.அ.இ.த., பி. சீனிவாசராவ் : கு. செல்வப்பெருந்தகை M.L.A. சட்டமன்ற குழு தலைவர், காங்கிரஸ் கட்சி, அமிர் ஹைதர்கான் : அ.மு.சலீம் CPI மாநிலச் செயலாளர், புதுவை, அயோத்திதாசர் : ஆர்.டி. சேகர் M.L.A. B.Com., B.L., தி.மு.க. இ.அ.மா.து.செ., ஜோதிபா பூலே : V.குமரேசன் மாநில பொருளாளர், திராவிடர் கழகம், சிங்காரவேலர் : மல்லை சத்யா மதிமுக மாநில துணைப் பொதுச்செயலாளர், இரட்டைமலை சீனிவாசன் : J. டில்லி பாபு M.A., B.L., 37வது வார்டு மாமன்ற உறுப்பினர், காங்கிரஸ் கட்சி

நன்றி : சு. பாஸ்கர் மாநில தலைமைக்குழு உறுப்பினர்

29.4.2022: பொது நிகழ்வு மாலை 4:00 முல்லைநகர் வியாசர்பாடி

தலித் உரிமைகளும் - சவால்களும்

கோகுல்ராஜ் கொலை வழக்கில் நீதி நிலைபெற அரும்பாடுபட்ட வழக்கறிஞர் ப.பா. மோகன் அவர்களுக்கு பாராட்டுக் கூட்டம்

தலைமை : இரா. நல்லகண்ணு, தலைவர். த. ஒ. வ. இயக்கம்

வரவேற்பு : மு.வீரபாண்டியன், பொதுச் செயலாளர்

முன்னிலை : T. லதா Ex. M.L.A. K. ரேனுகா MC. T. செண்பகம்

துவக்கி வைத்தல்: R. பிரியா ராஜன்

வணக்கத்திற்குரிய மேயர் பெருநகர சென்னை மாநகராட்சி

சிறப்புரை: D. ராஜா Ex. MP.

CPI. தேசிய பொதுச் செயலாளர்

R. முத்தரசன் CPI. மாநிலச் செயலாளர்
V.S. நிர்மல் பொதுச் செயலாளர்
C. மகேந்திரன் CPI. தேசிய நிர்வாகக்குழு
புதுவை அ. ராமமூர்த்தி தேசியத் தலைவர்
பொ. லிங்கம் Ex. MP. தேசியத் துணைத் தலைவர்
T. ராமசந்திரன் M.L.A. CPI. மாநிலக்குழு
S.K. சிவா தேசிய குழு
நெல்லை சுகுமாறன் தென் மண்டலம்

தோழர் தொல் திருமா MP. V.C.K. தலைவர்
K. சுப்பராயன் MP. CPI. தேசிய நிர்வாகக்குழு
M. செல்வராஜ் MP. CPI. மாநில நிர்வாகக்குழு
சாமுவேல்ராஜ் தீண்டாமை ஒழிப்பு முன்னணி
M. மாரிமுத்து M.L.A. CPI. மாநிலக்குழு
கீ.சு.குமார் தேசிய குழு
அஸ்ரப்அலி மேற்கு மண்டலம்
லி. உதயகுமார் மாநில தலைமைக்குழு உறுப்பினர்

நன்றி: R.M. சந்தோஷ்குமார் வடசென்னை மாவட்டத் தலைவர்

JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
Posted on 23.04.2022 at Egmore RMS 1 / Patrika Channel.
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57



- டி.ராஜா

# “கற்பி புரட்சிசெய் ஒன்றுசேர்” என்ற அம்பேத்கரின் லட்சிய முழக்கமே அரசியல், சமூக விடுதலைக்கான நமது பாதை!

**சிறுபான்மைச் சமூக மக்கள் கொடுமைகளுக்கு உள்ளாவார்கள் என்ற டாக்டர் அம்பேத்கரின் கவலைகள் இன்று எதார்த்தமாகி உள்ளன. இதற்கு இந்துக்கள் தீர்வு காண முன்வர வேண்டும் என்ற அவர்தம் கருத்தின் மீது இன்றைய சூழலில் உடனடியாக கவனம் செலுத்த வேண்டிய தேவை எழுந்துள்ளது. “சிறுபான்மைச் சமூகத்தவர்கள் அழிக்கப்படலாம். சிறுபான்மைச் சமூகத்தவர்கள் ஒருவேளை அழிக்கப்படவில்லை என்றாலும் கூட, அவர்கள் ஒடுக்குமுறைகளுக்கும், கொடுமைகளுக்கும் உள்ளாக்கப்படுவார்கள்.**

சட்டத்தின் முன் அனைவரும் சமம் மற்றும் பொதுத்தளத்தில் சமவாய்ப்பு ஆகியவை அவர்களுக்கு மறுக்கப்படும். அவர்கள் பாகுபாடுகளுக்கு நிச்சயம் உள்ளாக்கப்படுவார்கள்.” இத்தகைய அறிவார்ந்த தீர்க்கதரிசன வரிகளை டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் “மொழிவாரி மாநிலங்கள் மீதான சிந்தனைகள்” எனும் நூலில் “பெரும்பான்மையோர் மற்றும் சிறுபான்மையோர்” என்னும் அத்தியாயத்தில் எழுதியுள்ளார். வகுப்புவாத அடிப்படையில் வாக்குப்பதிவு நடைபெறுவது மற்றும் பெரும்பான்மைச் சமூகத்து வேட்பாளர்கள் வழக்கமாக தேர்ந்தெடுக்கப்படுவது ஆகிய தேர்தல் பின்னணியைக் கருத்தில் கொண்டு அவர் இவ்வாறு எழுதியுள்ளார்.

சட்டத்தின் முன் அனைவரும் சமம் மற்றும் பொது தளத்தில் சமவாய்ப்பு ஆகியவை நமது நாட்டின் சிறுபான்மைச் சமூகத்தவர்க்கு மறுக்கப்பட்டு வருவது வேதனைக்குரியதாகும். வாக்காளர்களை மத அடிப்படையில் ஒன்றுதிரட்டி, தேர்தலில் வெற்றிபெற்றிட வேண்டும் என்ற நோக்கத்துடன் பெரும்பான்மைச் சமூகத்தவரிடையே இது குறித்து அதிகமாக பரப்புரை செய்யப்பட்டு வருகிறது. அண்மையில் உத்தர பிரதேசத்தில் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தல் பரப்புரையில் பிரதமர் உள்ளிட்ட பாஜக தலைவர்கள் வகுப்புவாத அடிப்படையில் பேசியது சிறுபான்மை சமூகத்துக்கு எதிரான, இழிவுபடுத்தும் பேச்சின் மூலம் பெரும்பான்மைச் சமூக மக்களிடம் உத்தர பிரதேச முதலமைச்சர் விடுத்த வேண்டுகோள் ஆகியவை டாக்டர் அம்பேத்கர் தீர்க்கதரிசனமாக எழுதியதைத் தெள்ளத் தெளிவாக நிரூபணம் செய்வதாக உள்ளன.


சுதந்திர இந்தியாவில் சிறுபான்மைச் சமூகத்தவரின் நிலையானது, டாக்டர் அம்பேத்கர் கவலை கொண்டது போலவே, பாஜக ஆளும் மாநிலங்களில் மிகவும் மோசமாக இருப்பதை நாம் பார்த்து வருகிறோம். ஹிஜாப் அணிந்திருக்கும் காரணத்திற்காக, கர்நாடகத்தின் சில பகுதிகளில் உள்ள கல்வி நிலையங்களில் கல்வி கற்பதற்கான அடிப்படை உரிமைகள் பெண்களுக்கு மறுக்கப்பட்டு இருப்பது, மத நம்பிக்கையின் அடிப்படையில் அவர்கள் மீது ஏவப்படும் பாகுபாட்டை வெளிக்கொண்டு வந்துள்ளது.

கர்நாடகத்தில், இந்துமத திருவிழாக்களின் போது நடைபெறும் விற்பனை கண்காட்சிகளில், இஸ்லாமிய வணிகர்கள் பங்கேற்பது தற்போது தடை செய்யப்பட்டுள்ளது. இது மத நம்பிக்கையின் அடிப்படையில் இஸ்லாமியர்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் பொருளாதாரப் பாகுபாடு என்பதும் தெளிவாகிறது. இது தொழில் மற்றும் வணிகத்தில் பங்கேற்பதற்கான அனைத்து குடிமக்களின் அடிப்படை உரிமைக்கு எதிரானதாக இருக்கிறது.

இந்துத்துவ செயல்திட்டமான இந்து தேசியத்திற்கு ஒத்திசைவற்ற, பெரும்பான்மைச் சமூக மதத்திலிருந்து வேறுபட்ட இதர மதங்களைப் பின்பற்றி ஒழுகுவதாலேயே, அத்தகைய குடிமக்களின் அடிப்படை உரிமைகளுக்கு மோடி அரசாங்கமும், பா.ஜ.க ஆளும் மாநில அரசாங்கங்களும் ஊறு விளைவித்து வருகின்றன. மத நம்பிக்கைகளுக்கு அப்பாற்பட்டு அனைத்து குடிமக்களுக்கான அடிப்படை உரிமைகளை உத்தரவாதப்படுத்தும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் சரத்துக்களைக் கேலிக்குரிய தாக்கும் செயலின் முழு வெளிப்பாடின்றி இது வேறொன்றுமில்லை.

இந்துத்துவா மீதான ஆளுங்கட்சியின் சார்புத்தன்மையிலிருந்து ஊற்றெடுக்கும் அரசியல் மற்றும் இந்துத்துவ கொள்கைகளையே அரசாங்கத்தின் பொதுவான கொள்கைகளாக உருவாக்கியிருப்பது ஆகியவை அம்பேத்கர் கூறியிருப்பது போல மதவாதத்தை நடைமுறைப்படுத்துதல் ஆகும். தற்போது, இந்தியாவில் வளர்ச்சி என்பது வழக்கமான அரசியல் போக்காக அன்றி, அரசியலமைப்புச் சட்டம் மற்றும் அரசியலமைப்புச் சட்ட அறநெறி ஆகியவற்றுடன் முற்றிலும் தொடர்பற்ற ஒரு பிரத்யேகமான மதவாதத்தின் ஒன்றிணைந்த அம்சமாக உள்ளது. அரசியலமைப்புச் சட்டத்தின் மீது உறுதிமொழி ஏற்று பிரதமராகப் பொறுப்பேற்றுக் கொண்ட மோடி, தனது ஆட்சியானது, “குறைந்தபட்ச அரசாங்கம் மற்றும் அதிகபட்ச ஆளுகை” என்ற கருத்தாக்கத்தில் வேரூன்றியிருக்கும் என்று பெருமைபட பிரகடனப்படுத்தினார். ஆனால், இப்போது தேர்தல் லாபத்திற்காக அரசாங்கமும், ஆளுகையும் பிரிவினைவாத அரசியல் மற்றும் மதவெறி பேச்சுக்கள் எனும் பாதாளத்திற்கு தள்ளப்பட்டுள்ளன.

புதிய இந்தியாவில் நடைமுறைப்படுத்தப்படும் பெரும்பான்மைவாதம் எனும் ஆர்.எஸ்.எஸ்ன் தாரக மந்திரமானது, சாவர்க்கரின் சித்தாந்தம் மற்றும் இந்து–முஸ்லீம் இடையேயான இணைக்க முடியாத வேறுபாடுகளில் நிலைபெற்ற அவரது லட்சியத்தின் விளைவாகும். இந்தியாவில் பிறந்தவர்கள் மட்டுமே இந்நாட்டைத் தங்கள் தந்தையர் நாடு என்று கருதுவர்; இந்தியாவிற்கு வெளியே தங்களது புனித தலங்களைக் கொண்டுள்ளவர்கள் இந்நாட்டைத் தங்களின் புனித பூமியாகக் கருத மாட்டார்கள் என்று சாவர்க்கர் பிரிவினைக்கான விஷ விதைகளை ஊன்றினார். இவ்வாறாகக் கூறுவதன் மூலம், இஸ்லாமியர்கள் மற்றும் இதர சிறுபான்மையினரைக் குடியுரிமைக்கான தளத்திலிருந்து அவர் திறம்பட ஒதுக்கினார்.



**“இந்து தேசியம் அதற்கே உரித்தான மேலாதிக்க நிலையை அடைந்திட வழி வகை செய்யப்படும். இஸ்லாமிய தேசியம் இந்து தேசியத்துடன் ஒத்துழைக்கும் ஒரு கீழான நிலையில் இயங்கிட ஏற்பாடு செய்யப்படும்.” என்று சாவர்க்கர் உருவகப்படுத்தியிருந்த அரசியலமைப்புச் சட்டத்தில் கூறியுள்ளதாக அம்பேத்கர் எழுதியுள்ளார். இத்தகையதொரு ஏற்பாட்டினை வலியுறுத்துவதன் மூலமாக, சாவர்க்கர் இந்தியாவின் பாதுகாப்புக்கு ஒரு மாபெரும் அபாயகரமான சூழலை உருவாக்கி இருக்கிறார் என்று அம்பேத்கர் எச்சரித்தார்.**

சாவர்க்கரைப் போலவே, ஆர்எஸ்எஸன் தலைமை குருவான கோல்வால்கர் இஸ்லாமியர்களுக்கு இரண்டாம்தர குடியுரிமை வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். துரதிருஷ்டவசமாக, இந்துக்கள் மற்றும் இஸ்லாமியர்களை வெவ்வேறு பிரிவுகளாகக் கட்டமைக்கும் அதே லட்சியத்தை தான் இப்போது மோடி அரசாங்கமும், பாஜக தலைமையிலான மாநில அரசாங்கங்களும் நடைமுறைப்படுத்தி வருகின்றன. பெரும்பான்மை மற்றும் சிறுபான்மைச் சமூகங்களுக்கு இடையே உள்ள பிரிவு, சிறுபான்மைச் சமூகத்தவர்க்கு கண்ணியம் மற்றும் சட்டத்தின் முன் அனைவரும் சமம் ஆகிய உரிமையை இந்துத்துவத்தின் முன்னணி தலைவர்கள் மறுத்திட வழிவகை செய்கிறது. இஸ்லாமியர்கள் மற்றும் இதர சிறுபான்மைச் சமூகத்தவர்களை மோடி அரசாங்கம் கீழ்த்தரமாக நடத்துவதுடன், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குடிமக்கள் எனும் தரத்திற்கு கீழான நிலைக்குத் தள்ளியுள்ளது. மோடி அரசாங்கத்தின் இந்தச் செயல் இந்திய அரசியலமைப்புச் சட்டம் மற்றும் சுதந்திரப் போராட்ட வீரர்களின் லட்சியங்களைக் காட்டிலும் வெறிகொண்ட வகுப்புவாதத்திற்கே முன்னுரிமை அளித்து வருவதை மிகத் தெளிவாக நிரூபணம் செய்கிறது. அம்பேத்கர் முன்னரே கூறியது போல, இந்தியாவின் பாதுகாப்புக்கு மாபெரும் அபாயகரமான சூழலை நாம் இப்போது நேரடியாக எதிர்கொண்டு வருகிறோம்.

இந்நாட்டின் வரலாற்றில், இதுவரையில் பொருளாதார ரீதியாக, இஸ்லாமியர்கள் ஒருபோதும், எந்நிலையிலும் புறக்கணிக்கப்பட்டது இல்லை. ஆனால், இதுபோன்ற, அறிவுக்குப் பொருந்தாத நடவடிக்கைகள் பா.ஜ.க தலைவர்களால் ஊக்கப்படுத்தப்பட்டு முன்னெடுக்கப்படுகின்றன. இதுபோன்ற கொள்கைகளும், லவ் ஜிகாத் போன்ற கட்டுக்கதைகளும் இந்தியாவை வகுப்புவாத அடிப்படையில் பிளவுபடுத்துகின்றன. மேலும், இவை பகைமை மற்றும் வெறுப்புணர்வு ஆகியவற்றுக்கு உகந்த நிலைகளை உருவாக்குகின்றன. இஸ்லாமியர்களைக் கொன்றழிக்க சாமியார்கள் விடுத்த வெளிப்படையான அறைகூவலைக் கண்டித்து பிரதமரோ, ஒன்றிய அரசாங்கத்தின் மூத்த தலைவர்களோ ஒரு வார்த்தை கூட பேசவில்லை என்பது மிகவும் வேதனைக்குரியது, துரதிருஷ்டவசமானது. ஆனால், அதற்குப் பதிலாக, அவர்களுக்கு மோடி அரசாங்கம் பாதுகாப்பு அளித்தது.

மத நம்பிக்கையின் அடிப்படையில் ஒரு மாபெரும் பிளவை உருவாக்கும் வஞ்சக நடவடிக்கைகளில் அரசு எந்திரத்தை ஈடுபடுத்திய தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களை இந்திய திருநாடு இதுவரையிலான அதன் வரலாற்றில் ஒருபோதும் கண்டதில்லை. மனுவாத ஆர்எஸ்எஸ் போதனையின் கீழ் தலித்துகள், பழங்குடியினர் மற்றும் பெண்கள் மீதான வன்முறை தாக்குதல்கள் மற்றும் பாகுபாடுகள் நடைபெற்று வருகின்றன; வன்முறையாளர்கள் மீது நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படுவதில்லை. பிரதமராக, ஒரு ஆர்எஸ்எஸ் ஊழியர் அதிகார பீடத்தில் இருப்பது வன்முறையாளர்களுக்கு மேலும் தைரியம் ஊட்டுகிறது. பன்மைத்துவத்தையும், அரசியலமைப்புச் சட்டத்தின் விழுமியங்களையும் போற்றிக் கொண்டாடும் சித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்டு இந்தப் போக்கை நாம் கடுமையாக எதிர்த்துப் போராட வேண்டும்.

டாக்டர் அம்பேத்கர் எழுதியதாவது:

“நாம் ஒற்றுமையை உருவாக்க விரும்புவோமேயானால், இந்துக்களும் முகமதியர்களும் ஒரே வாக்குச்சாவடிக்கு வரவேண்டும். ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதற்கான சில வழிமுறைகளை உருவாக்கிட உண்மையில் நாம் விரும்புவோமேயானால், சமூகத் தடைகளை நாம் உடைத்தெறிய வேண்டும். இந்த விஷயத்தில் இந்து சமூகம் தான் முயற்சியைத் தொடங்கிட வேண்டும். ஏனென்றால் இந்து சமூகம் மேல்தட்டு மக்களுக்கு மட்டுமே உரித்தான சமூகமாகும். இந்து சமூகம் அதன் சொந்த நலன்களாக சில குறிப்பிட்ட நலன்களை மட்டுமே கருதுவதால் இதர சமூகங்கள் தனித்த வாழ்வை மேற்கொள்கின்றன. எனவே, இந்து சமூகமே தவறுக்கான முழு பொறுப்பேற்க வேண்டும்.”

மேற்கூறிய கருத்தின் அடிப்படையில், எவரொருவர் வகுப்புவாதத்தை விடுத்து ஜனநாயகத்தையும், ஏற்றத்தாழ்வுகளை விடுத்து சமத்துவத்தையும், இறையியலை விடுத்து அரசியலமைப்பையும் நாடுகிறாரோ, அத்தகையோர் அனைவரும் ஆர்எஸ்எஸ்–பாஜக வின் செயல்திட்டத்தைத் திறம்பட முறியடிப்பதற்கான நீடித்த, முற்போக்குத் தன்மை உடைய ஒற்றுமையை உருவாக்கிட ஒன்றுபட வேண்டும். அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, இந்தியா என்னும் கருத்தாக்கத்தைப் பாதுகாத்திட நமது மக்களிடையே ஒற்றுமை உணர்வு ஓங்க வேண்டும். அத்தகைய ஒற்றுமையை உருவாக்கிட விடுதலைப் போராட்ட இயக்கத்தைப் போன்ற ஒரு இயக்கம் நமக்கு தேவையாகும்.

நமது விடுதலைப் போராட்டத்தில், சமூக சீர்திருத்தமும், அரசியல் விடுதலையும் ஒன்றோடொன்று பிணைந்திருந்தது. சமூக சீர்திருத்தவாதிகளான ராம்மோகன் ராய், ஈஸ்வர சந்திர வித்யாசாகர், ஜோதிபா பூலே, ஸ்ரீ நாராயண குரு மற்றும் ஈ வெ ரா பெரியார் ஆகியோர் சமுதாயத்தில் மேற்கொண்ட மகத்தான சீர்திருத்தங்களை நாம் விருப்பத்துடன் நினைவு கூருகிறோம். ஆர்.எஸ்.எஸ்ன் ஒற்றைத்தன்மையில் இருந்து சமுதாயத்தை விடுவிக்க வேண்டும் என்பதிலும் ஜனநாயகவாதிகள் இடையே அரசியல் ஒற்றுமை இருந்திடல் வேண்டும்.

இந்து மதம் என்பது ஒரு மத்தியத்துவப்பட்ட நிறுவனம் இன்றி பிராந்திய அளவிலான மாபெரும் வேற்றுமைகள், பல்வேறு பழக்க வழக்கங்கள் மற்றும் வழிபாட்டு நடைமுறைகளை உடைய ஒரு மதமாகும். இந்துக்கள் அனைவரின் ஒற்றைப் பாதுகாவலன் என்று தன்னைத் தானே நியமித்துக் கொண்ட ஆர்.எஸ்.எஸ்ஐ இந்துக்கள் தாமாகவே முன்வந்து நிராகரித்திட வேண்டும். இதர அமைப்பு ரீதியான மதங்களும் சீர்திருத்தங்களுக்கான வாய்ப்புகளை உருவாக்கிட வேண்டும். அவற்றின் நடைமுறைகளை ஜனநாயகப்படுத்திட வேண்டும். இப்பிரச்சனைகள் குறித்து வெகுமக்களுக்கு அறிவூட்டுவது, பெரும்பான்மைவாதம் எனும் இருளுக்கு எதிரான போராட்ட உணர்வு மற்றும் வலுவான ஜனநாயக ஒற்றுமை ஆகியவற்றின் மூலம் இந்த நோக்கங்களை நாம் வென்றெடுக்க முடியும். இந்தப் போரில், கற்பி புரட்சிசெய் ஒன்றுசேர் எனும் டாக்டர் அம்பேத்கரின் லட்சியம் முழக்கமே, அரசியல் மற்றும் சமூக விடுதலைக்கான நமது பாதை ஆகும்.

தமிழில்: **அருண் அசோகன்**

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.